# வெற்றிமணி

London
GERMANY

Vettimaniy

மணி 65 free Circulation கார்த்திகை .Nov. 2015





Rathy
JEWELLERS LTD
London's Largest Selections
லண்டனில் முன்னணி நகைமாளிகை!
எப்பொழுதும் நியாயமான விலை
புத்தம் புது டிசைன்கள்

28 Ealing Rd
Wembley
HAO 4TL London
Tel: 02089033063

209 upper Tooting Road
Tooting SW17 7TG
0208682 2233


# முரண்பாட்டில் ஓர் உடன்பாடு!

## படையினரை காப்பாற்ற தேசியத் திட்டம்!



## இந்த உலகம் பெண்களுக்கானதா?

அனைவருக்கும்
இனிய தீபாவளி
வாழ்த்துக்கள்

சினிமா சினிமா


செல்வராஜா
கோல்டு ஹவுஸ் & டெக்ஸ்டைல்ஸ்
எம்மிடம் தாலிக்கொடிகள்
செய்பவர்களுக்கு கூறைப்புடவைகள்
பட்டுப்புடவைகள் அனைத்தும்
50% விலைக்கழிவில்
162 B, Mitcham Road London SW17 9NJ
Tel : 020 8767 3795 | 07825 005 269



New Asia Fashions
காஞ்சிபுரம் பட்டு சாறிகள் புத்தம்
புதிய டிசைனர் சாறிகள்
சிறுமிகளுக்கான ஆடம்பர உடைகள்
பட்டு வேட்டிகள் சால்வைகள்
சுடிதார் சல்வார்கமிஸ்
இன்னும் பல குறைந்த விலையில்
நிறைந்த அம்சங்கள் பல்வகை நிறங்கள்
பல்வகைத் தெரிவுகள் இன்றே நாடுங்கள்
http://www.newasiafashions.com
Email-info@newasiafashions.com



நியூ ஏசியா
ஆடையகம்
307 Mitcham Road
Tooting-London
SW17 9JQ
00442035811020
00447448179777


தமிழர் இல்லம் எங்கும் ஒலிக்கட்டும் வெற்றிமணி





# உண்மை எது! பொய் எது!!

அறிவுரை சொன்னா அனுபவிக்கணும், ஆராயக்கூடாது..!" என்று சொல்லிச்சொல்லி நம் எல்லோரையும் முட்டாள்களாய் ஆக்கிவிட்டது.

ஆனால் அதையெல்லாம் நன்கு ஆராய்ந்து பார்த்த பின்னரே புரிகிறது - "யார் என்ன சொன்னாலும் அதை நம்பி அனுபவிக்க கூடாது, முதலில் ஆராய வேண்டும் பின் தான் அனுபவிக்க வேண்டும்" என்று..!

அப்படியாக இதுநாள் வரை உண்மை என்று நம்பப்படும் 9 வெவ்வேறு கட்டுக்கதை, புரளி, பொய்களைத்தான் பின் வரும் ஸ்லைடர்களில் தொகுத்துள்ளோம்..!

பரிணாம வளர்ச்சி என்பது தாழ்வான ஒரு நிலையில் இருந்து மேல்நோக்கி அழைத்து செல்லும் ஒரு வளர்ச்சி என்று பலரும் நம்பிக்கிறார்கள்.



**உண்மை :** ஆனால், உண்மையில் வளர்ச்சி என்பது சுற்றுப்புறசூழலை பொருத்தது, பரிணாமத்தை பொருத்தது அல்ல.

**விண்வெளியில் மனிதன் :** விண்வெளியில் மூச்சைப்பிடித் துக் கொண்டு மனிதன் உலாவலாம் என்று பலரும் நம்புகிறார்கள். உண்மைதான், ஆனால் அது வெறும் 15 - 30 நொடிகள் வரை மட்டும் தான்..!!

**மரணம் :** 15 அல்லது அதற்கு மேற்பட்ட நொடிகளுக்குள் மயக்கம் முதல் மரணம் வரை நிகழலாம் என்பதே உண்மை..!!



**ஐந்து நொடி மட்டும் :** தரையில் விழுந்த உணவை 5 நொடிக் குள் எடுத்து விட்டால் அது உண்ண தகுந்தது, அல்லது கிருமிகள் ஏறிக்கொள்ளும் என்று ஒரு நம்பிக்கை உண்டு, அது பொய்..!

**தரையின் சுத்தம் :** உணவு பாதுகாப்பானது அல்லது பாதுகாப்பில்லாதது என்பது தரையின் சுத்ததை பொருத்ததே இன்றி எடுக்கும் நேரத்தை பொருத்தது அல்ல..!

**நிலவின் முதுகு :** பெரும்பாலானோர்கள் இன்று வரை நிலாவிற்கு முதுகு பக்கம் உண்டு என்று நம்பிக் கொண்டு இருக்கின்றனர். அப்படி ஒன்றுமில்லை.

**வெளிச்சம் போட்டுக் காட்டும் :** இன்னும் தெளிவாக சொல்லப்போனால் சில சமயங்களில், அதிகப்படியான சூரிய ஒளியானது நிலவை முழுமையாக வெளிச்சம் போட்டுக் காட்டும் என்பதே உண்மை..!



**மூளை செல்கள் :** மூளை செல்கள் இறந்தால் இறந்தது தான் அது மறு உற்பத்தியாகாது என்று பலரும் நம்புகின்றனர், அது வெறும் கட்டுக்கதை..!

**உற்பத்தி :** உண்மை என்னவென்றால், மனித மூளையின் கற்றல் மற்றும் நினைவு சார்ந்த செல்கள் உற்பத்தி ஆகும்..!




**உராய்வு வெப்பம் :** உலகின் வளிமண்டலத்திற்குள் நுழையும் விண்கற்கள் தீப்பிடித்து எரியக் காரணம் - உராய்வு வெப்பம் தான், என்று ஒரு நம்பிக்கை உண்டு, அது பொய்.!

**நிதர்சனம் :** உண்மையில் சொல்லப்போனால் விண்கற்கள் மிகவும் குளுமையானவைகள், அதன் மேல் பனித்துளிகள் கூட இருக்கும் என்பது தான் நிதர்சனம்..!

**மின்னல் :** மின்னல் ஒரு முறை ஒரு இடத்தில் விழுந்தால் மறுமுறை அதே இடத்தில் விழாது என்று ஒரு நம்பிக்கை உண்டு. அது பொய்..!

**தாக்கும்:** மின்னல்கள் பெரும்பாலும் உயர்ந்த கட்டிடங்கள் அல்லது மரங்களைத்தான் தாக்கும். மின்னல்கள் வேறு இடம் நோக்கி நகரும் வரை ஒரே இடத்தை எத்தனை முறை வேண்டுமென்றாலும் கூட தாக்கும்.










அனைவருக்கும் எங்கள் இனிய தீபாவளி வாழ்த்துக்கள்

வெற்றிமணி

தமிழ் எங்கள் உயிருக்கு மேல்
—கவிஞர்.வி.க

ஓசை 230


ஆரம்பம்:1950

ஸ்தாபகர்

அமரர் மு.க.சுப்பிரமணியம்

(முன்னாள் அதிபர்:
குரும்பசிட்டி பொன்.பரமானந்தர்
வித்தியாலயம்)

பிரதம ஆசிரியர்

"ஓவியக்கலைவேள்"

கலாநிதி

மு.க.சு.சிவகுமாரன் B.F.A.

*Chief Editor:*

**Dr.M.K.S.Sivakumaran B.F.A.**



Brinker Höhe.13
58507 Lüdenscheid
Germany
Tel: 02351/45 88 62
01575 83 94 325

e-mail: vettimaniy@hotmail.com


Company No: 8876276

"வெற்றிமணிமொழி"

தோல்வியைக் கண்டு
அஞ்சுபவர்களிடமிருந்து
வெற்றி தானாகவே
விலகிச்செல்கிறது


பத்திரிகை வடிவம்

சிவகுமாரன் சஞ்ஜீவன்.B .Eng (Hons)

Vettimaniy Ltd
Sanje:07824 61 83 83
vai g (U.K) 00 44 7788 195962


Vettimaniy has no responsibility of the contents of the articles and advertisements

# முரண்பாட்டில் ஓர் உடன்பாடு!

## படையினரை காப்பாற்ற தேசியத் திட்டம்: ஜனாதிபதி உத்தரவு!

இலங்கையில் இருந்து -அ.நிக்ஸன்-

படையினரை காப்பாற்ற தேசியத் திட்டம்: ஜனாதிபதி உத்தரவு! படையினரை காப்பாற்றுவதற்கான சட்ட ஏற்பாடுகளில் அரசாங்கமும், விசாரணையை முற்றாக நிறுத்து வதற்கான சட்ட நுணுகளை மஹிந்த ராஜபக்ச அணியும் தீவிரமாக ஆராய்கின்றன. இந்த விடயத்தில் முரண் பாட்டில் ஓர் உடன்பாடு என்ற நிலையும் உருவாகலாம்-

-அ.நிக்ஸன்-

போர்க்குற்ற விசாரணைணை ஆரம்பிக்க ஒன்றரை வருடங்கள் தேவையென கூறிவிட்டு அதற்கு இடைப்பட்ட காலப்பகுதியில் குற்றம் சுமத்தப்பட்ட படையினருக்கு சட்ட உதவியளிப்பது தொடர்பாக அரசாங்கம் நட வடிக்கை எடுத்து வருவதாக உள்ளகத் தகவல்கள் தெரிவிக்கின்றன. இறுதிக்கட்ட போரில் ஈடுபட்ட பல இராணுவ உயர் அதிகாரிகள் இராஜதந்திரிகளாகவும் மற்றும் வேறு பதிகளிலும் அமர்த்தப்பட்டுள்ள நிலையில் அவர்களை பாதுகாப்பது தொடர்பான தேசிய திட்டம் ஒன்றை வகுத்து செயற்படுமாறு ஜனாதிபதி ஆலோ சிணை வழங்கியுள்ளதாகவும் கூறப்படுகின்றது.

இந்த விடயத்தில் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க உள்ளிட்ட முக்கியமான அரசியல் பிரமுகர்கள் மற்றும் உயர் அதிகாரிகள் தீவிரமாக ஈடுபட்டுவருகின்றனர். இது தொடர்பாக பல்வேறுபட்ட கலந்துரையாடல்கள் ஆலோ சணைக் கூட்டங்கள் கூட நடத்தப்பட்டுள்ளதாக அரசாங்கத் தகவல்கள் தெரிவிக்கின்றன. கட்சி அரசியல் வேறுபாடுகள் இன்றி இந்த பாதுகாப்பு திட்ட ஏற்பாடுகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. இறுதிக்கட்ட போரில் ஈடுபட்ட படையினரை கட்சி அரசியல் அரசியல் வேறுபாடுகள் இன்றி பாதுகாக்க வேண்டும் என அமைச்சர் சஜித் பிரேமதாச கூறியிருந்தார்.

### திட்டங்களை வகுக்கப்படும்

குற்றம் சுமத்தப்பட்ட படையினர், மற்றும் பாதுகாப்பு உயர் அதிகாரிகள் ஆகியோரை பாதுகாக்க அரசாங்கம் திட்டங்களை வகுத்து செயற்படும் என்றும் அமைச்சர் சஜித் பிரேமதாச அம்மாந்தோட்டையில் நடைபெற்ற கூட்டம் ஒன்றில் கூறியிந்தார். அமைச்சர் ராஜித சேரட்னவும் படையினருக்கு சட்ட ஆலோசணை வழங்கு வதற்கான ஒழுங்கு முறைகள் குறித்து திட்டங்கள் மேற்கொள்ளப்படும் என குறிப்பிட்டிருந்தார். படையினரை பாதுகாப்பதுதான் அரசாங்கத்தின் கடமை என்று அமைச்சர் சம்பிக்க ரணவக்கவும் தெரிவித்திருந்தார்.

ஆகவே விசாரணைகள் ஆரம்பிக்கப்படுவதற்கு முன்னரே படையினரை பாதுகாப்பு குறித்த விடயங்கள் ஜனாதிபதி பிரதமர் மட்டத்தில் தீவிரமாக ஆரம்பிக்கப்பட்டுள்ளன. என்பதை அறியமுடிகின்றது.

அதேவேளை புடையினரை பாதுகாப்பதற்கான சட்ட விலக்களிப்பு பிரேரணை ஒன்றை நடாளுமன்றத்தில் சமர்ப்பிப்பது தொடர்பாக அரசாங் கத்தின் பங்காளிக்கட்சியான ஜாதிக ஹெல உறுமய ஆலோசித்து வருகின்றது. சட்ட விலக்களிப்பு பிரேரணை மூலம் குற்றம் சுமத்தப்பட்ட படையினரை காப்பற்ற முடியும் என்ற தகவலை முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்சவுக்கு ஆரவான ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பு உறுப்பினர்கள் ஏற்கனவே வெளியிட்டுள்ளனர்.



### அமைச்சர் சம்பிக்க ரணவக்க

அந்த தகவலின் அடிப்படையில்தான் அமைச்சர் சம்பிக்க ரணவக்க சட்ட விலக்களிப்பு பிரேரணையை சமர்பித்து குற்றம் சுமத்தப்பட்ட படையினர் மீதான விசாரணைகளை தடுத்து நிறுத்தும் முயற்சிகளில் ஈடுபட்டு வருகின்றார் என கூறப்படுகின்றது. சட்ட விலக்களிப்பு பிரேரணை என்பது போரில் ஈடுபடும் படையினர் மேற்கொள்ளும் குற்றச் செயல்கள் அல்லது வேறு நடவடிக்கைகள் யுத்தகால நடவடிக்கைகளாக பார்க்கப்படும். யுத்தம் தீவிரமாக நடைபெறும் பிரதேசங்களில் சாதாரண சட்ட நடை முறைகளை விட இராணுவத்திற்குரிய சட்ட ஏற் பாடுகள் மற்றும் இராணுவம் இடும் கட்டளைகளை மக்கள் எற்க வேண்டும் என்ற விதிமுறைகளும் உள்ளன.

இந்த விடயங்களைத்தான் சட்ட விலக்களிப்பு பிரேரணையில் குறிப்பிட்டு குற்றம் சுமத்தப்பட்ட படை யினரை காப்பாற நடவடிக்கைகள் எடுக்கப் படுகின்றன. இந்த எற்பாட்டுக்கு அமைச்சர்கள் பலர் ஆதரவு வழங்கவுள்ளனர் என்றும் அறிய முடிகின்றது சட்ட விலக் களிப்பு பிரேரணை குறித்த மேலதிக ஆலோசணைகளை சட்டமா அதிபர் திணைக் களத்திடம் இருந்து பெறவேண்டும் நாடாளுமன்ற உறுப்பினர் சட்டத்தரணி உதய கம்பன்வில செய்தியாளர் மாநாடு ஒன்றில் கூறியிருந்தார். உதயகம்பன்விலவும் அமைச்சர் சம்பிக்க ரணவக்கவும் அரசியல் ரீதியாக முரண்பட் டிருந்தாலும் படையினரை பாதுகாக்கும் விடயத்தில் இணைந்து செயற்படக்கூடிய வாய்ப்புகள் இருப்பதாக சிங்கள வார ஏடு ஒன்று செய்தி வெளியிட் டுள்ளது.

### மஹிந்தவும் சேமவன்சவும்

புதிய கட்சி ஒன்றை ஆரம்பித்துள்ள ஜே.வி.பியின் முன்னர் தலைவர் சோமவன்ச அமரசிங்கவும் முன்னர் ஜனாதிபதியும் நாடாளுமன்ற உறுப்பினருமான மஹிந்த ராஜபக்சவும் இணைந்து போர்க்குற்ற விசாரணைகளை எதிர்க்கவுள்ளதாக செய்திகள் வெளியாகியுள்ளன.
குறிப்பாக இராணுவத்தை பாதுகாக்கும் சட்ட விலக்களிப்பு பிரேரணை குறித்தும், இலங்கை அரசியலமைப்பின் படி ஜனாதிபதி ஒருவர் தனது பதவிக் காலத்தில் மேற்கொண்ட நடவடிக்கைகள் தொடர்பாக விசாரணை நடத்த முடியாது என்ற விதிமுறைகள் இருப்பதாக.......

தொடர்ச்சி 04ம் பக்கம்...




# முரண்பாட்டில் ஓர் உடன்பாடு!

3ம் பக்கத் தொடர்ச்சி

**மஹிந்தவும் சேமவன்சவும்**

சட்டதரணி உதய கம்பன்வில கூட்டிக்காட்டிய விடயங்கள் தொடர்பாகவும் இருவரும் பேசியுள்ளனர்.

ஊழல் மோசடி குற்றச்சாட்டுக்கள், தனிப்பட்ட முறையிலான நடவடிக்கைகள் தொடர்பாக முன்னாள் ஜனாதிபதி ஒருவரை விசாரணைக்கு அழைக்க முடியும். ஆனால் போர்க்கால நடவடிக்கைகள் மற்றும் போரை நடத்திய முறைகள் குறித்தும் முன்னாள் ஜனாதிபதி மீது விசாரணை நடத்த முடியாது எனவும் உதய கம்பனவில கூறியுள்ளமை பற்றியும் இருவரும் உரையாடியுள்ளனர்.
தற்போது இந்த விடயங்கள் குறித்து முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ச தனது சட்டத்தரணி களுடன் ஆராய்ந்து வருகின்றார் எனவும் செய்திகள் வெளியாகியுள்ளன.

**தொடர் போராட்டங்கள்**

ஆகவே போர்க்குற்ற விசாரணையை எதிர்ப்பது என்ற அடிப்படையில் மஹிந்த ராஜபக்சவும் சோமவன்ச அமரசிங்கவும் செயற்பட்டு அரசாங்கத்துக்கு அழுத்தம் கொடுக்கவுள்ளனர். இந்த எதிர்ப்பு போராட்டங்களுக்கு அரசாங்கத்தில் அங்கம் வகிக்கும் ஜாதிக ஹெல உறுமயவும் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியில் உள்ள அமைச்சர் பலரும் ஆதரவு கொடுக்கவுள்ளனர். ஐக்கிய தேசிய கட்சியை சேர்ந்த அமைச்சர்கள் சிலரும் ஆதரவு வழங்கக்கூடிய நிலைமை வரலாம் எனவும் அரசாங்க தகவல்கள் கூறுகின்றன.
எனவே போர்க்குற்ற விசாரணையை எதிர்ப்பது தொடர்பாக எதிர்க்கட்சிகளும் விசாரணை நடைபெற்றால் அதிலிந்து படையினரை எவ்வாறு பாதுகாக்கலாம் என்ற விடயத்தில் அரசாங்கமும் ஈடுபட்டு வருகின்றது. இந்த இருவகையான செயற்பாடுகள் சிங்கள மக்கள் மத்தியில் வரவேற்பை பெற்றுள்ளன. போர்க்கற்ற விசாரணைகள் என்பது இலங்கையின் இறைமைக்கு ஆபத்தை ஏற்படுத்திவிடக்கூடாது என்பது சிங்கள தேசியவாதத்தின் அடிப்படை சிந்தனையாகும் அந்த வகையில் இவ்வாறான இரு நகர்வுகளும் வெற்றியளிக்கக்கூடிய நிலைமைதான் உள்ளது.

தமிழ்த்தேசிய கூட்டமைப்பு
ஏனெனில் எதிர்ப்பு நடவடிக்கைகளுக்கு அரசாங்கம் மறைமுக ஆதரவை கொடுக்கலாம் அதேபோன்று விசாரணையின்போது படையினரை காப்பாற்றக் கூடிய அரசாங்கத்தின் சட்ட ஏற்பாடுகளுக்கு எதிர்க்கட்சிகளும் ஆதரவு வழங்கலாம். ஆகவே முரண்பாடுகளில் ஓர் உடன்படாக போர்க்குற்ற விசாரணை குறித்த விடயங்களில் அரசாங்கமும் பிரதான எதிர்க்கட்சியும் ஒன்றினைந்துள்ளன. ஆனால் தமிழ்த்தரப்பின் செயற்பாடுகளில் பலவீனங்கள் மாத்திரமே விஞ்சிக் காணப்படுகின்றன.

# யாழ்ப்பாணத்தில் இடம்பெற்ற பேராசிரியர் அ.சண்முகதாசின் பவளவிழா

யாழ்ப்பாணத் தமிழ்ச்சங்கத்தின் ஏற்பாட்டில் நடைபெற்ற பேராசிரியர் அ.சண்முகதாசின் பவளவிழா மற்றும் சண்முகதாஸ் மனோன்மணி இணையரின் பொன்விழா நிகழ்வு 14.10.2015 பிற்பகல் 4.30 மணிக்கு நல்லூர் துர்க்காதேவி மணிமண்டபத்தில் தமிழ்ச்சங்கத் தலைவர் பேராசிரியர் தி.வேல்நம்பி தலைமையில் நடைபெற்றது.
.
இதன்போது பேராசிரியருக்கான அகவைப் பரிசிலாக ஜப்பானியக் காதல் பாடல்கள் என்ற நூல் முனைவர் மனோன்மணி சண்முகதாசால் துணைவரிடம் வழங்கப்பட்டது.
விழாத் தம்பதியர் இருவரும் நூலின் முதற்பிரதியை இந்திய உதவித்தூதர் ஆ.நடராஜனிடமும் ஸ்ரீமதி சாந்தினி நடராஜனிடமும் கையளித்தனர்.
.
. உலக நிலையில் கனடா, சுவிஸ், ஜேர்மன், இலங்கை என தனது அகவை நிறைவைக் கண்ட ஒரே தமிழ்ப்பேராசிரியர் அ.சண்முகதாஸ் ஆவார் என வாழ்த்துரை வழங்கியோர் சிலாகித்துப் பேசினர்.










## நன்றி நவிலல்



**யோகன் - ரஞ்ஜினி தம்பதிகளின் திருமண வெள்ளிவிழா**
**08.09.2015**

யேர்மனியில் நடைபெற்ற (10.10.2015) எங்கள் அப்பா அம்மாவினது 25 வது திருமண வெள்ளிவிழாவில் கலந்து சிறப்பித்த உற்றார் உறவினர் நண்பர்கள் அனைவருக்கும் எங்கள் மனமார்ந்த நன்றிகள்

அன்புப் பிள்ளைகள்:
**யோகீதன் , யோபினா, யோனுசன்**



# யாழ்ப்பாணப் பண்பாடு

# மறந்தவையும் மறைந்தவையும்

பேராசிரியர் எஸ்.சிவலிங்கராஜா

## வீடும் வளவும்




யாழ்ப்பாணப் பிரதேச மக்களின் பண்பாட்டுக் கோலங்களில் வீடு முக்கிய இடத்தினைப் பெறுகின்றது. மனித இனத்தின் வரலாற்றிலே உணவுக்கு அடுத்தபடியாக உறையுளே முக்கிய இடம் பெறுகின்றது. யாழ்ப்பாணச் சமூகத்திலே வீடும் வளவும் என்ற தொடர் மிகவும் முக்கியத்துவம் வாய்ந்தது. குடும்பத்தின் வாழ்வியலுக்கு வீடு மாத்திரமன்றி வளவும் அவசியமானதாக இருந்தது. வீட்டைச் சூழவுள்ள பகுதியை அல்லது வீடு அமைந்திருக்கும் காணியையே வளவு என்று அழைத்தனர். வளவிலே பயன்தரு மரங்கள் நிழல்மரங்கள் முதலியவற்றை வளர்த்திருப்பார்கள். அத்துடன் ஆடு மாடு முதலியவற்றிற்கும் கொட்டில்கள் அமைத்திருப்பார்கள். வீடு வாசல் என வழங்கும் தொடரிலும் வாசல் என்ற பதம் வளவை அல்லது முற்றத்தைக்குறித்து நின்றது.

குடும்பப் பொருளாதார நிலைகளுக்கு ஏற்பவே வீடுகளும் அமைந்தன. வறிய அடிநிலைச் சமூகத்தைச் சேர்ந்தவர்கள் குடிசைகளையும் சிறிய மண் வீடுகளையும் பயன்படுத்தினர். ஓரளவு வசதி உடையவர்கள் சற்று விலாசமான மண் வீடுகளைக்கட்டி வாழ்ந்தனர். மண் வீடுகளிலும் பல வகைகள் (அமைப்பு) இருந்தன. முட்டச்சுவர் அரைச்சுவர் என மண்ணிலே சுவர் வைத்துக் கூரையைப் பனையோலையாலோ தென்னோலையாலோ (கிடுகு) வேய்ந்து சுவரையும் தரையையும் அழகாக மெழுகிப் பயன்படுத்தினர். திண்ணை மால் (இதனைத் தலைவாசல் என அழைக்கும் வழக்கமும் இருந்தது) மண்வீடுகளிலே இருந்தன. திண்ணை மால் முதலியன யாழ்ப்பாணப்பிரதேச மக்களின் பண்பாட்டு இயல்புகளைக் கண்டறிய உதவும் அடையாளங்கள் எனலாம்.

மண் வீட்டைப் பயன்படுத்தியவர்கள் பொருளாதார வசதி பெருக செங்கல் சுண்ணாம்பு சாந்து முதலியவற்றைப் பயன்படுத்திச் சற்று வசதியான வீடுகளை அமைத்தனர். பெரும்பாலும் சமூகமேலாண்மை பெற்றவர்களே இத்தகைய வீடுகளில் வாழ்ந்தனர். 19ஆம் நூற்றாண்டில் செங்கல் ஓடு வீட்டிற்குத்தேவையான மரங்கள் (பலகை தீராந்திகள்) பிறநாடுகளில் இருந்து பருத்தித்துறை ஊர்காவற்றுறை முதலிய துறைமுகங்களினூடு யாழ்ப்பாணத்திற்கு வந்திறங்கின. பருத்தித்துறை வல்வெட்டித்துறை முதலிய இடங்களிலே வணிகர்கள் கட்டிய வீடுகளிற்கு இறக்குமதி செய்யப்பட்ட மூலப்பொருட்களே பயன்படுத்தப்பட்டன. குடாநாட்டின் ஏனைய பகுதிகளிலும் இத்தன்மை ஓரளவு காணப்பட்டது.

ஐரோப்பியர் வருகையை ஒட்டி யாழ்ப்பாணத்து வீட்டுக்கட்டட அமைப்புகளில் மாற்றங்கள் ஏற்பட்டமையும் குறிப்பிடத்தக்கது.

காற்று வெய்யில் மழை வெளிச்சம் முதலானவற்றை மனங்கொண்டு மூன்றலகு வீடுகள் நாற்சாரும் வீடுகள் என யாழ்ப்பாணத்தில் பலவகையான வீடுகள் கட்டப்பட்டன. அடுக்களை (சமையற்கூடம்) எப்பொழுதும் தனியாகவே அமைக்கப்பட்டிருந்தது. யாழ்ப்பாணத்து வீடுகளின் அமைப்பு இப்பிரதேசத்தின் பண்பாட்டுக்கோலத்தின் வெளிப்பாடாகவும் இருந்தது. உதாரணமாக நாற்சாரும் வீடு கூட்டுக்குடும்ப வாழ்க்கை முறையின் வெளிப்பாடு எனக்குறிப்பிடலாம்.

யாழ்ப்பாணத்து வீடுகள் பற்றி மிசனரிமார் எழுதிய குறிப்புக்கள் மிகுந்த அவதானிப்புக்குரியவை. 1820ஆம் ஆண்டு யாழ்ப்பாணத்திற்கு வந்த மிசனரி ஒருவர் தான் அவதானித்த வீடுகள் பற்றிப்பின்வருமாறு குறிப்பிடுகின்றார். வீடுகள் பொதுவாகப் பதிவானவை. சுவர்கள் சாந்து பூசப்பட்டவை. வெளியிலும் உட்புறத்திலும் வெள்ளையடிப்பது வழக்கம். இங்குள்ளவர்களின் வீடுகள் பொதுவாகக் குடிசைகளாய் இருந்தன. சிலரின் வீடுகளின் நடுவில் ஒருமுற்றம் இருந்தது. மற்றப்பக்கங்களில் வீட்டின் ஏனைய பகுதிகள் இருந்தன. இவ்வீடுகள் பிரிந்திருந்த கூரையுடன் பக்கங்களில் மரக்கால்கள் தாங்கிக்கொண்டு இருந்தன. பனை ஓலைகளால் வீட்டின் கூரை வேயப்பட்டிருந்தது. சில இடங்களில் தென்னோலைகளால் மூடப்பட்டிருந்தது. சில இடங்களில் நாலுபக்கங்களிலும் விறாந்தை போல் பத்தி இறக்கப்பட்டுள்ளது. இந்த வீடுகளின் நிலம் களிமண்ணால் செய்யப்பட்டுள்ளது. அது மிகவும் கெட்டியாய் அமைந்துள்ளது வெளிப்புற விறாந்தை வசதியாய் இருப்பதற்கும் வேலை செய்வதற்கும் சில வேளைகளில் படுத்துறங்குவதற்கும் பாவிக்கப்படுகிறது.

மிசனரிமாரின் விபரணக்குறிப்புக்கள் யாழ்ப்பாணத்து வீடுகளின் சுத்தம் அழகு மற்றும் அந்த மக்களின் வீட்டுக்கட்டிட (கலை) அமைப்பு இவர்களின் வாழ்வியல் என்பன எத்தகைய சமூக உறவுடன் திகழ்ந்தன என்பதைக் குறிப்பாக சுட்டிக்காட்டியுள்ளன.






வீட்டின் உட்புறம் சில இடங்களில் வெவ்வேறு பகுதிகளாகப்பிரிக் கப்பட்டுள்ளது. ஒரு பகுதியில் ஒரு அறை போல் செய்யப்பட்டு வீட்டாரின் பெறுமதியான சாமான்கள் போடப்பட்டுப் பூட்டுவதற்கு ஏற்ற வசதிகள் செய்யப்பட்டுள்ளது. மற்றப்பகுதிகள் திறந்த படியே உள்ளன. சில வேளைகளில் ஓலைத்தட்டிகளால் தற்காலிகமாகப் பிரிக்கப்படுவதுண்டு. தொடர்ச்சி 06 ம் பக்கம்...







# வானத்தில் ஏற ஒரு ஏணி!

## பூமியிலிருந்து 20 கிலோ மீட்டர் உயரத்திற்கு பிரமாண்ட கோபுரம்!

உங்களிடம் யாராவது வந்து, ”ஹே... நீ மேல போறியா..?” என்று கேட்டா, ”யாரப் பார்த்து சாகப் போறியா என்று கேட்கிறாய்?” அப்படி என்று கோவப்படாதீங்கள் மக்களே... ஏன் என்றால் இன்னும் கொஞ்ச வருஷத்தில், அந்த வார்த்தைக்கு வேற ஒரு பெரிய அர்த்தம் வரப்போகுது.
மனிதன் தொழில்நுட்பத்தை வச்சு இது வரைக்கும் அடைஞ்ச உயரம் போதாது என்று, இப்ப அதற்கம் மேல் ஓர் உயரமான இடத்துக்குப் போகப்போறான். ஆமாம், உலகத்துலயே உயரமான இடத்துக்கு.

“புர்ஜ் கலி.ஃ.பா துபாய்“- 828அ உயரம் கொண்ட இதுதான் இப்ப இருக்கின்ற கட்டிடங்களில் உயரமான கட்டிடம். ஆனால், புர்ஜ் கலி.ஃ.பா கட்டடத்தைப் பார்த்து, ”நீயெல்லாம் எனக்கு சின்னப் பையன்” மாதிரி அப்படி என்று சொல்றதுக்காக ஒரு கட்டடம் வருது அதான் தோத் எக்ஸ் டவர் (ThothX tower).

தோத் என்பது ஓர் எகிப்திய தெய்வத்தோட பெயர். அந்த பெயர் கொண்ட இந்த கட்டடத்தோட உயரம் எவ்வளவு தெரியுமா 20 கி.மீ. கனடாவை சேர்ந்த பிரண்டன் குயைன் என்பவர்தான் இந்த உயரமான கனவுக்கு சொந்தக்காரர்.
இது பற்றி அவர் சொல்லும்போது, ”இதை கட்டிடம் என்று சொல்ல முடியாது. வேணும் என்றால் உலகத்துலேயே உயரமான லி.ஃ.ப்ட் அப்படிச் சொல்லலாம்” என்கிறார். ஆமாம், இதை அவர்கள் கட்டடமா பயன்படுத்தப்போறது இல்லயாம், வானத்துக்கு போக லி.ஃ.ப்டா( படியாக) பயன்படுத்தப் போறாங் களாம்!

இந்த திட்டத்தோட முக்கிய நோக்கமா இவர்கள் சொல்வது விண்வெளி பயணம். நாம் விண்வெளிக்கு அனுப்பும் ராக்கெட்டுகளை இந்த லி.ஃ.ப்ட்டோட உயரத்தில் இருந்து அனுப்புறதுதான் அவர்களுடைய பெரும் திட்டம். இந்த திட்டத்தின் மூலமா கிட்டத்தட்ட 30% சதவிகித விண்வெளி பயண செலவு குறையுமாம். அதுமட்டும் இல்லாமல், சில செயற்கை கோள்களோட வேலையை இது காலிபண்ணிடுமாம்.



வானத்துல பறக்கின்ற விமானம் இறங்கி பெட்ரோல் போடுறது, ஒரே கட்டமா செயற்கை கோள்களை சுற்றுவட்டப் பாதையில ஏவுறது என இவர்கள் வத்திருப்பது எல்லாமே மெகா சைஸ் திட்டங்கள்தான். இந்தக் கட்டிடத்த இதுவரை இல்லாத வகையில மிகவும் வலுவானதா கட்ட திட்டமாம். டைமண்ட் நேனோ முறைப்படி இந்தக் கட்டடத்த கட்டப் போறாங்களாம். இதுதான் உலகத்துலயே வலுவான கட்டடமாகவும் இருக்கும் என்கிறார்கள். ஆனா, இந்தக் கட்டடம் வர இன்னும் நிறைய வருஷம் காத்திருக்க வேனுமாம். ஒருவேளை இந்தக் கட்டடம் வந்தா, டைரக்டர் ஷங்கர் அங்க ஒரு பாட்டு கூட எடுக்கலாம். என்ன பாஸு"கதையா விடுறீங்க, இவ்ளோ பெருசாலாம் லி.ஃ.ப்ட் கட்ட முடியாது அப்படிச் சொல்றவங்களுக்கு ஒன்று சொல்லவேண்டும். உலகம் அசாத்தியமானது என்று நினைத்து, ஒவ்வொன்றையும் மனிதன் சாத்தியமாக்கி இருக்கிறான்....!
- சியாம் சுந்தர்
படித்தத்தில் பிடித்தது. நன்றி:ஆனந்தவிகடன்.
பி.குறிப்பு. மேலே போறேன்! இறங்கிட்டேன்! இப்பதான் அடித்தவர் அடித்துப்போட்டு வந்திருக்கலாம்தானே!அவர் மேலே போய் கொஞ்சநேரம்தான் இருக்கும். இப்படி பலவார்த்தைப் பிரயோகம் எமக்கு 1980 களிலேயே இங்கு வந்துவிட்டது. காரணம் அப்போ நாம் இருந்தது மாடிவீடுகள். அதனால் ஏறுவதும் இறங்குவதும் மேலே போட்டார் இறங்கிவிட்டார் இப்படி கோழி மரத்தில் ஏறுவது இறங்குவதுபோல் கதைக்கப்பழகிவிட்டோம். அத்தோடு தொலைபேசியில் கதைத்துவிட்டு வருவதை அடித்துப்போட்டு வந்திருக்கலாம் தானே என்றும் சொல்வோம். எமக்கு சூழல் கற்றுக்கொடுத்த புதுமொழி இது.

## மறந்தவையும் மறைந்தவையும்

5ம் பக்கத் தொடர்ச்சி

சாந்து சுண்ணாம்பு முதலியவற்றைக்கொண்டு கட்டப்பட்ட வீடுகளைக் கல்வீடு என்றே அழைத்தனர். அக்காலத்தில் கல்வீடுகள் மிகமிக அருந்தலாகவே காணப்பட்டன. பொருளாதார வளமுடைய மேற்தட்டு மக்களே பெரும்பாலும் கல்வீடுகளில் வாழ்ந்தனர். காலப்போக்கில் சீமெந்தின் வருகையுடன் வீடுகள் பல்வேறு பாணிகளில் அமையத்தொடங்கின. ஒல்லாந்த ஆங்கிலேய பாணி வீடுகள் என இங்குள்ள வீடுகளின் பாணிகளைக் குறிப்பிடும் வழக்காறும் உண்டு.

வீட்டு வளவின் வாசலுக்குச் சங்கப்படலை என்ற கேற் அமைக்கப்பட்டிருந்தது. இந்தப்படலையை மூடி மேலே கூரை போடப்பட்டிருந்தது இக்கூரை சங்கப்படலையின் பாதுகாப்புக்குப் பயன்பட்டதோடு வழிப்போக்கர்கள் இளைப்பாறிச்செல்லவும் உதவியமை குறிப்பிடத்தக்கது.

சில இடங்களில் சங்கப்படலைக் கூரைக்குக் கீழே வெளிப்புறமாக இருமருங்கும் திண்ணைகள் அமைக்கப்பட்டிருந்தன. இத்திண்ணைகளையே வழிப்போக்கர்கள் பெரும்பாலும் இளைப்பாறப் பயன்படுத்துவர். யாழ்ப்பாணத் திலே ஒரு காலத்தில் நிலவிய மனித நேயத்திற்கும் சமூகப்பொறுப்புணர்விற்கும் இச்சங்கப்படலைத் திண்ணைகள் சாட்சிகளாய் விளங்கின.

நல்லநாள் பெருநாள் என்று உறவினர்கள் வந்து உணவருந்தக்கூடிய (பந்தியாக இருந்தது) வகையிலே வீட்டின் ஒருபகுதி அமைக்கப்பட்டதும் உண்டு யாழ்ப்பாணத்துப் பெரியவர் ஒருவரின் சமரகவியில் வீட்டில் விருந்தோம்ப விந்தையுடன் கூடமொன்றை நாட்டில் முன்மாதிரியாய் நன்கமைத்தாய் என்று இடம் பெறுவதையும் இவ்விடத்திலே சுட்டிக்காட்டலாம்.

யாழ்ப்பாணத்திலே சபை சந்திக்குரிய வீடாகக் கட்டவேண்டும் என்ற மனநிலை இன்றும் இருப்பதை அவதானிக்கலாம். காலச் சூழ்நிலைக்கேற்ப யாழ்ப்பாணத்து வீடுகளின் அமைப்புக்கள் மாறிக்கொண்டே வருகின்றன்.











# பூனைக்கு விளையாட்டு...

சந்திரவதனா

எங்களூர் மானம்பூவில் சிறுகுளம் ஒன்றிலிருந்து தண்ணீர் வானோக்கி எழுந்து எழுந்து விழுவது போல கிணறு போன்று கட்டப்பட்டிருந்த அந்த தண்ணீர் குளத்திலிருந்து தண்ணீர் எழுந்து எழுந்து, விழுந்து விழுந்து ரம்மியமாகக் காட்சியளித்தது. எத்தனை மணிநேரம் வேண்டுமானாலும் அந்தச் சலசலப்பையும், தண்ணீரின் எழுகையையும், விழுகையையும் பார்த்துக் கொண்டே இருக்கலாம். பெருமரங்கள் நிறைந்த வனப்புடன் கூடிய சோலை போல அமைந்திருந்த அவ்விடம் நான் தினசரி தரிசிக்கும் இடங்களில் ஒன்று. அந்தச் சோலையோடு அண்டிய கட்டிடத்தில் எனக்குச் சிலமணி நேரங்களே வேலை.

இன்று அந்தக் குளக்கட்டில் ஒரு இளைஞன் அமர்ந்திருந்தான். பாடசாலை முடிந்து அப்போதுதான் குளித்து, தலைவாரி உடையணிந்து வந்திருப்பான் போலிருந்தது. யாருக்காகவோ காத்திருந்தான்.
அக்கட்டில் வழமை போல இன்னும் சிலர் அமர்ந்திருந்தாலும் அவன் மட்டும் பிரத்தியேகமாக என் கண்களுக்குத் தெரிந்தான்.

அன்று எனக்கு அங்கு வேலை இல்லை. ஆனாலும் எனது காரை அதனோடு ஒட்டியிருந்த தரிப்பிடத்தில்தான் நிறுத்தியிருந்தேன். நகரின் மையப்புறத்தை ஒட்டிய நதிக்கரையின் மறுபக்கத்தில் அமைந்திருக்கும் அவ்விடத்தில் காரை நிறுத்துவதற்கான வசதியும், அதற்கான கட்டணத்தை மீளப்பெறக் கூடிய வசதியும் எனக்கிருக்கிறது. அந்த வேலையை நான் நீண்ட வருடங்களாக தக்க வைத்திருப்பதற்கு அதுவும் ஒரு காரணமாக இருந்து கொண்டிருக்கிறது.

நான் எனது மெயின் வேலையை முடித்து விட்டு நதியின் மேல் குறுக்கறுத்து நீண்டிருக்கும் மரப்பாலத்தினூடு ஏகாந்தமாக இக்கரைக்கு வந்திருந்தேன்.

காலையில் காரை அவ்விடத்தில் நிறுத்தும் போது இனிமையாக ஒலித்துக் கொண்டிருந்த பறவைகளின் கீச்சுக்களும், கூவல்களும் இப்போது மனிதர்களின் இரைச்சல்களுக்குள் அமிழ்ந்து போயிருந்தன. பரந்து விரிந்திருந்த கஸ்தானியன் மரக் கிளைகளுக்குள்ளான அவ்வப்போதான சிறகடிப்புகளும், அதைத் தொடர்ந்து கீழே வீழ்ந்து கொண்டிருந்த கஸ்தானியன் காய்களும் பறவைகளின் இருப்பை உணர்த்தின.

உள்ளே போய் காரை நிறுத்தியதற்கான கட்டணத்தை எனது கார்ட்டிலிருந்து நீக்கி விட்டால், காரை எடுத்துக் கொண்டு வீட்டுக்கு போய் விடலாம். அதனால் பெரிதான அவசரங்கள் எதுவும் எனக்கு இருக்கவில்லை. அந்தக் கட்டிடத்தை நோக்கியபடி அதற்கு நேரேதிரேதான் அந்த இளைஞன் அமர்ந்திருந்தான்.

அவ்விடத்தை ஒரு பள்ளத்தாக்கு என்றுதான் சொல்லலாம். அதன் மறுபக்கத்துக்குச் செல்வதானால் வளைந்து நெளிந்து மேல் நோக்கிச் செல்லும் மலைப்பாதையில் ஏறித்தான் செல்ல வேண்டும். அது எவ்வளவு கஸ்டமானால் என்ன? மனிதர்கள் அலுப்புச் சலிப்பின்றி ஏறுவதும், இறங்குவதுமாகவே இருந்தார்கள். அவர்களைத் தாண்டி உயர்ந்து உயர்ந்து செல்லும் மலைகளிலெல்லாம் அடுக்கடுக்காக வீடுகள். அதற்கும் மேல் கரும்பச்சையாய் அடர்ந்திருக்கும் மரங்கள். இடையில் இரயில் பாதை. அதன் மேல் இதயத்தை மீட்டும் சுருதியுடன் அவ்வப்போது ஊரும் இரயில்கள். இந்த அசாத்திய அழகுக்கும், ஆரவாரங்களுக்கும் நடுவில்தான் அவ்விளைஞன் அங்கு அமர்ந்திருந்தான்.

குழந்தைத்தனம் மாறாத ஒரு மங்கை அந்தக் கட்டிட வாயிலிலிருந்து திடீரென்று ஓடி வந்து அவனைச் சீண்டி விட்டு ஓடினாள். ஓடி விட்டாள் என்று நான் நினைக்கும் போது மீண்டும் வந்து அவனது முகத்துக்குள் குனிந்து அவனைக் கொஞ்சாத குறையாக ஏதோ சொல்லி விட்டுச் சென்றாள். அவளது சேஷ்டை தொடர்ந்து கொண்டே இருந்தது.

அவனைத் தாண்டும் போது வாசனை வீசியது. ஹஷனலை´ நன்றாகத் தெளித்திருப்பான் போலிருந்தது. பேரழகனாக இல்லாவிட்டாலும் அந்த வாசனையும், அவனது சுத்தமான தோற்றமும், இளமையும் ஒரு வித கவர்ச்சியை அவன் மீது உண்டு பண்ணிக் கொண்டிருந்தன.
மீண்டும் அந்த மங்கை துள்ளிக் கொண்டு வந்து அவன் கன்னத்தைச் செல்லமாகக் கிள்ளி விட்டுச் சென்றாள்.

இது என்ன விளையாட்டு? யாரவள்? காதலியா அல்லது ????. கேள்விகள் என்னுள் எழுந்தன.

அவனின் முகத்தில் அடங்காத ஒரு திகைப்பு. அவளின் சேஷ்டையை நிராகரிக்கவும் விரும்பாமல், வரவேற்கவும் முடியாமல் செய்வ தறியாதவனாய் இருந்தான். அவனைத் தாண்டி பலர் போவதும் வருவதுமாகவே இருந்தார்கள். ஆனால் யாருமே அவனையோ, அவளையோ கண்டு கொண்டதாகக் காட்டிக் கொள்ளவில்லை.
உள்ளே அக்கட்டிடத்தின் கீழ் பகுதியில் நீச்சல்தடாகம். தடாகத்தில் நடுத்தர வயதான பெண்களும், ஆண்களும், வயோதிபர்களும் நிறைந்திருந்தார்கள். அங்கு யாரும் பெரிதாக நீந்துவதில்லை. அது உப்புத்தண்ணீரோடு கூடிய, விதம் விதமான வெப்பநிலைகளில் தண்ணீர் நிரம்பிய பல பிரிவுகளைக் கொண்ட ஒரு பெருந்தடாகம். எட்டுவயதுக்கு உட்பட்ட சிறுவர்களுக்கு அங்கு அநுமதியில்லை. வயதானவர்கள்தான் அதிகம் நிரம்பி வழிவார்கள். அழகான இளை யோரும் செயற்கை அலையில் மோதிக் கொண்டு சுகித்திருப்பார்கள்.

இன்று என் மனதின் கவனம் வெளியில் அமர்ந்திருக்கும் அந்த இளைஞன் மீதும், அவனைச் சீண்டும் அந்த மங்கை மீதுமே லயித்திருந்தது. அவளுக்கு 12 அல்லது 13 வயதுகள்தான் இருக்கலாம் போல இருந்தது. அவனுக்கு 18 - 19 வயதுகள் இருக்கலாம்.

படிகளில் ஏறி மேற்தளத்துக்குச் சென்று எனது கார்ட்டை இயந்திரத்தில் பிடித்து கட்டணத்தை நீக்கி விட்டுத் திரும்பினேன். என் வேலைத்தோழிகளில் ஒருத்தி „நல்ல மாலைப்பொழுதாக அமை யட்டும்“ என்று வாழ்த்தினாள். „ உனக்கும் அப்படியே.. „ என்று சொல்லி விட்டு படிகளில் இறங்கினேன்.

தொடர்ச்சி 08ம் பக்கம்...





# காவுதடியும் காவடியும்

சைவப்புரவலர் சமூகஜோதி நீர்வேலி நடராஜா சிவசுப்பிரமணியம் செட்டியார்.

இன்று நாம் காணும் ஒவ்வொரு கலாச்சாரச் சின்னங்களுக்கும்,அதன் கலைவெளிப்பாடுகளுக்கும் ஒவ்வொரு காரணங்களை முன்னோர் கூறிச்சென்றுள்ளனர். அவை வாய்வழியாகவும்,ஏடுகள் நூல்கள்வாயிலாகவும் இன்றுவரை அதன் கருத்துக்கள் பயணித்தவண்ணம் உள்ளன.இன்று உள்ள அறிவியல் விஞ்ஞான வளர்ச்சிக்கு முன்னால் அவை கேலிக்குரியனவாகக் தோன்றினாலும். அதனுள் பொதிந்துள்ள கருத்தை மட்டும் உற்று நோக்கினால் நமது இன்றைய அறிவு கேள்விக்குரியதாகத் தெரியும்.
கருத்தே கண்ணாயிருங்கள். இன்றும் இலங்கையில் இந்தக் காவுதடியினைக் காணலாம். குறிப்பாக சிங்களவர்கள் மேசை கதிரை விற்பதற்காக அன்று வடக்கு கிழக்கிற்கு வரும்போது இந்தக்காவு தடியில் கதிரை மேசைக் கட்டி தோளில் சுமந்து வருவதை நீங்கள் முன்பு அவதானித்து இருப்பீர்கள். அது போல் தமிழர்கள் மண்பானை சட்டி வியாபாரிகள் இப்படி காவுதடியில் இருபக்கமும் உறிபோல்கட்டி காவுவுதைக்கண்டிருப்பீர்கள். இந்தப்பின்னணியை வைத்துக்கொண்டு இனி வாசியுங்கள்.
முன்னொரு காலத்தில், அகத்திய முனிவர் தம் தவத்திற்காக,தான் இருக்கும் இடத்திற்கு, சிவகிரிமலையையும், சக்திகிரிமலையையும் கொண்டுவர ஆசைப்பட்டார். அகத்தியர் தன் தவவலிமையினால், மலைகளை கொண்டுவரமுடியும், ஆனால் ஒருவரை தேடுகையில், இடும்பன் ஞாபகம் வர, இடும்பனை அழைத்து தன் விருப்பை கூற, இடும்பன் அவர் விருப்பை ஏற்று மலை இருக்கும் இடத்திற்கு சென்றான். ஒரு தடியை எடுத்து, இருமலைகளையும் உறிபோல் இருபக்கமும் கட்டி தொங்கவிட்டு காவிவந்தான். இதனை கண்ட முருகன் அரசன் போல் குதிரையில் வந்து இடும்பனை நோக்கி “அப்பனே நீ மிகவும் களைத்துவிட்டாய் போலும், இதனை சற்று இறக்கி வைத்துவிட்டு களைப்பாறிவிட்டு எடுத்துச்செல்” என்றார். இடும்பனும் அப்படியே செய்தான். களை மாற மீண்டும் தூக்கி செல்ல முயன்றான், முடியவில்லை. மீண்டும் மீண்டும் பலமுறை முயன்றும் முடியவில்லை. முருகன் சிரித்தபடி அவன் முன் தோன்றி இந்தமலை எனக்கு வேண்டும், இங்கு நான் இருக்கின்றேன், பக்தர்கள்,அடியார்கள் யாவரும், உன்போல் பால்,தயிர், புஸ்பம், என பூசைக்குரியவற்றை கொண்டு வந்துதந்து அருள் பெற்றுசெல்வார்கள் என திருவாய்மலர்ந்து அருளி மறைந்தார். இதன்பின் பலரும் பால்,பழம்,பன்னீர்,புஸ்பம் என தோளில் காவிவந்து, அபிசேக பூசைக்கு உதவிநின்று, பாடித்துதித்து, பணிசெய்து, அருள் பெற்றார்கள். இந்த காவுதடியானது காவடியாக தோற்றம் பெற்றது என பல முன்னோர்கள் அறியதந்திருக்கின்றார்கள். மயில் ஆடும் போது வட்டமாக இருக்கும் அதனால் தடியின்மேல் வட்டமாக செய்து, மயிலின் இறகை பக்கங்களில் கட்டி, பால்செம்பை இந்த காவுதடியில் கண்டிப்பாக கட்டிவிட்டு, மேல் நடுவே பூக்கொத்தும் வைத்தார்கள். பின்னர் பால்காவடி, பன்னீர்காவடி, புட்பக்காவடி, பறவைக்காவடி, செதில்காவடி என தத்தம் ஆசையுடன், நேர்த்திக்கு செய்து கொண்டார்கள்.



## ஒளிரும் திருநாள்

கண்களில் கனவுகளை
நிறைத்து
கருணையை நெஞ்சினில் சுமந்து
காலமெல்லாம் கல்லிலும்
முள்ளிலும்
கால்வலிக்க நடந்தவர்கள்
மறையவில்லையே!
இல்லங்களிலும்
உள்ளங்களிலும்
ஒளிருகின்றார்!

அசுரனை யழித்து அவனியிலே
தர்மத்தை நிலைநிறுத்திய
திருநாளாய்
தீபாவளியாகி தீபங்களாகி
திசையெங்கும்
ஒளியேற்றி நிற்கின்றார்!
இருளை
விரட்டி ஒளியை
வழியவிடுகின்றார்!

இரா: சம்பந்தன்

# பூனைக்கு விளையாட்டு...

7ம் பக்கத் தொடர்ச்சி

இரண்டாவது மாடியில் அரைகுறை ஆடைகளுடனும், ஆடைகளே இல்லாமலும் சவுனாவுக்கு(sauna) முன்னான அறையில் சாய்மனைக் கதிரைகளில் பலர் ஆயாசமாகச் சாய்ந்திருந்தார்கள். கண்ணாடிக் கதவுகளைப் பற்றி அவர்களுக்கு எந்தப் பிரக்ஞையும் இருக்கவில்லை. வெக்கை தாளாதிருந்தது. புகை வாசமாக இருந்தது. லிப்ற் இடை விடாது ஏறி இறங்கிக் கொண்டிருந்தது.
கீழ் தளத்தில், நீச்சல் தடாகத்தில் அலை மீண்டும் சுழலப் போவதற்கான எச்சரிக்கை விளக்கு சிவப்பாக எரிந்தது. தெரிந்த பல முகங்களின் முகஸ்துதிகளைத் தாண்டி வெளியில் வந்தேன். இப்போதும் அந்த மங்கை அதே சேஷ்டையைத் தொடர்ந்து கொண்டிருந்தாள்.

அந்த இளைஞன் கட்டிட வாயிலை நோக்கியபடியே அமர்ந்திருந்ததால் அவனை வடிவாகப் பார்க்க முடிந்தது. இவள் அவனை நெருங்கும் போது வேண்டாம் போய் விடு என்பது போலப் பார்க்கும் அவனது கண்கள், இவளின் நெருக்கத்தில் மெதுவாகக் கிறங்கின. கன்னங்களும், நாசியும் சிவந்தன. இவள் சிரித்துக் கொண்டே திரும்பி ஓடி வந்து வாயிலில் நின்றாள். எனக்கும் சிரிப்பாக இருந்தது. அவளில் சவுனாவில் (Sauna) அவர்கள் போடும் வாசனைப் புகையின் நறுமணம் வீசியது. தோளில் ஒரு பை கொழுவியிருந்தாள்.
நான் அவனைக் கடந்து செல்லும் போது மெல்லிய அரி வெயில் மரங்களினூடு நிலத்தில் கோலம் போட்டுக் கொண்டிருந்தது. காற்றின் அசைவுக்கேற்ப கோலங்களின் வடிவங்களும் மாறிக் கொண்டே இருந்தன. என்னைப் பார்த்ததும் அவன் தலை நாணிக் குனிந்தது.
நான் காரில் ஏறிய பின்பும் போக மனமின்றி அவர்களையே பார்த்துக் கொண்டிருந்தேன். அப்போதுதான் அது நடந்தது. அந்த மங்கை ஓடி வந்து அவனை இறுக அணைத்து உதடுகள் பதித்து முத்தமிட்டாள். அந்த நேரந்தான் அது நடக்க வேண்டுமா? வலது புறத்தில் அந்த மலையிறக்கத்தில் இருந்து சனங்களோடு சனங்களாய் ஒரு இளம்பெண். இவன் அவளைக் காண்பதற்கு முன்னரே அவள் இவனை அதுவும் இன்னொருத்தி முத்தமிடுகையில் கண்டு விட்டாள். இவன் துடித்துப் பதைத்து எழுந்து அந்த மங்கையைத் தள்ளி விட்டான்.

எல்லாம் கண்பொழுதுக்குள் நடந்தேறின. அந்த இளம்பெண் மிக வேகமாக இவனருகில் வந்து விட்டாள். முகம் சிவந்து, கண்கள் உருண்டு, மனம் வெதும்பிக் கத்தினாள். இவன் எதைச் சொல்ல முனைந்தாலும் „பேசாதே..! விடு..!“ என்று சீறினாள். விறுவிறுவென இவனைத் தாண்டி மற்றைய பக்கம் நடந்தாள்.
இவன் அவளுக்குப் பின்னாலே எதுவோ சொல்லிக் கொண்டு ஓடினான் . அவள் இவன் பேச்சுக்குக் காது கொடுக்கவே இல்லை. ஒரு குதிரை போல தொங்கித் தொங்கிக் கொண்டு, திட்டிக் கொட்டிக் கொண்டு விரைந்தாள்.


இவன் கொஞ்சத் தூரம் பின்னால் ஓடிவிட்டு வெட்கமும், அவமானமும், ஏமாற்றமும் தாங்காமல் அப்படியே நின்று விட்டான். இரயில் ஒன்று மேலே எம்மைக் கடந்தது. அந்த சில்மிஷம் நிறைந்த மங்கையைத் தேடினேன். என் கண்களுக்குத் தெரிந்த சுற்றில் எங்கேயும் அவளைக் காணமுடியவில்லை. இவனின் காதலி பாலத்தைக் கடந்து நதியின் மறுபக்கத்தில் வெகுதூரத்தில் போய்க் கொண்டிருந்தாள்.






# உயர் இரத்த அழுத்தம்

## சில புதிய தகவல்கள்




**டாக்டர் எம்.கே.முருகானந்தன்**
MBBS (Cey),DFM (Col),FCGP (Col)
**குடும்பவைத்தியர்**

"சொன்ன சொல் மாறிவிட்டீர்கள்" என முகத்தில் அறையுமாப் போல அவர்குற்றம் சாட்டவில்லைத்தான். "நீங்கள் முந்திச் சொன்னது ஒன்று இன்றுசொல்வது மற்றொன்று. படிச்ச நீங்களே இப்படி மாற்றிப் பேசலாமா" என்றும் கேட்கவில்லைத்தான்.

ஆனால் இது நீதி அநீதி, சரி பிழை போன்றவை சம்பந்தப்பட்ட விடயம் அல்ல.அறிவியல். அதிலும் முக்கியமாக வளர்ந்து வரும் மருத்துவ அறிவியல், அதுசார்ந்த பல்லாயிரக்கணக்கான ஆதாரங்களை அடிப்படையாக வைத்து, துறைசார்ந்த நிபுணர் குழுவினர் எட்டிய முடிவுகளை ஒட்டிய விடயம்.

வீட்டில் எலக்ரோனிக் கருவியில் பார்த்தபோது பிரஷர் சற்று அதிகம் என்பதால் பதற்றத்துடன் என்னிடம் வந்திருந்தார் நான் பார்த்தபோதும் கிட்டத்தட்ட அதே அளவுதான். 148/90 இருந்தது.

"பரவாயில்லை உங்கடை வயதிற்கு அவ்வளவு இருக்கலாம்" என்று சொன்னதின்பிரதிபலிப்பு இது. அவரது வயது 63 ஆகும்.

அவர் பயப்பட்டதிலும் நியாயம் இருக்கவே செய்கிறது. நாம் மருத்துவத் தொழில் ஆரம்பித்த காலங்களில் வயதுடன் 100 ஐக் கூட்டினால் வரும் எண்ணிக்கையின்அளவிற்கு இரத்த அழுத்தம் இருக்கலாம் என்றோம். பின்னர் எந்த வயதானாலும் 130/90 யைத் தாண்டக் கூடாது என்ற வரையறை வந்தது. இதையே அவர் ஞாபகத்தில் வைத்திருந்தார்.

இப்பொழுது புதிதான வழிகாட்ல் 60 வயதுக்கு மேற்பட்டவர்களுக்கு 150/90 இருக்கலாம் என்கிறது.

உண்மைதான் மருத்துவ அறிவியல் கருத்துகள் கால ஓட்டத்திடட மாறுகின்றன. புதிய ஆய்வு முடிவுகளுக்கு ஏற்ப நோயாளிகளுக்கு அதிக நன்மை அளிக்குமாறு சிகிச்சை முறைகள் மாறவேண்டியது அவசியமாகிறது.

பிரஸர் பற்றிய Eighth Joint National Committee (JNC 8) யின் புதியவழிகாட்டல்கள் என்ன கூறுகின்றன?

அறுபது வயதுக்கு மேற்பட்டவர்களது பிரஷர் ஆனது 150/90 மேல் இருந்தால்மட்டுமே சிகிச்சையை ஆரம்பிக்க வேண்டும். அதாவது மேலே உள்ள சுருக்கழுத்தம் (Systolic blood pressure - SBP) 150ற்கு மேல் இருந்தால் அல்லது கீழே உள்ள விரிவழுத்தம் (Diastolic blood pressure - DBP) 90ற்குக் மேடல் இருந்தால் மட்டுமே சிகிச்சை அளிக்கப்பட வேண்டும்.

சரி புதிதாகச் சிகிச்சை அளிக்கும்போது பிரஷர் குறைந்தால் அல்லது ஏற்கனவேஅவர்களது பிரஷரானது சிகிச்சை காரணமாக 140/90 ற்கு கீழ் குறைந்திருந்தால் மருந்தின் அளவைக் குறைக்க வேண்டுமா என்ற கேள்வி எழுகிறது.
இல்லை உட்கொள்ளும் மருந்தின் அளவானது அவர்களுக்கு எந்தவிதமானபாதகமான பக்க விளைவுகளையும் ஏற்படுத்தாது ஒத்துக்கொள்ளும் விதமாக இருந்தால் மருந்தின் அளவைக் குறைக்க வேண்டியதில்லை.

அதேநேரம் அறுபது வயதுக்கு கீழ்ப்பட்டவர்களைப் பொறுத்தவரையில் அவர்களது விரிவழுத்தம் ஆனது 90 ற்கு மேடட இருந்தாடட சிகிச்சையை ஆரம்பிக்க வேண்டும். சிகிச்சை மூலம் இதை 90 அல்லது 90ற்குக் கீழ்கொண்டு வருவது அவசியமாகும்.

அதே போல அறுபது வயதுக்கு கீழ்ப்பட்டவர்களின் சுருக்கழுத்தமானது 140ற்குமெல் இருந்தால் சிகிச்சையை ஆரம்பித்து அதனை 140 அல்லது அதற்குக் கீழ்குறைக்க வேண்டும். 18 வயதுக்கு மேற்பட்ட நீரிழிவு நோயுள்ளவர்களுக்கும் நாட்பட்ட சிறுநீரக நோயாளர்களுக்கும் இதே 140/90 ற்கு மேல் இருந்தால் பிரஷருக்கான சிகிச்சை அவசியமாகும்.

நீரிழிவு நோய் உள்ளவர்களைப் பொறுத்த வரையிடட அவர்கள் 18வயதுக்கு மேல் எந்த வயதானவராக இருந்தாலும் அவர்களது இரத்த அழுத்தமானது 140/90 ற்கு மேல் இருந்தால் சிகிச்சை ஆரம்பிக்கப்பட வேண்டும்.

சுருக்கழுத்தமானது 140 அல்லது அதற்குக் கீழும், விரிவழுத்தமானது 90 அல்லது அதற்குக் கீழ் குறையுமாறு சிகிச்சை அளிக்கப்பட வேண்டும். நாட்பட்ட சிறுநீரக நோயுள்ளவர்களுக்கும் நீரிழிவு உள்ளவர்களது அளவுகளே பரிந்துரைக்கப்படுகிறது. இது வரை காலமும் நீரிழிவு உள்ளவர்களது பிரஷரை 130/80 ற்குகுறைக்க வேண்டும் என்றே பெரும்பாலும் சிபார்சு செய்யப்பட்டது.

ஆனால் அந்த அளவிற்கு குறைப்பதால் பக்கவாதம், இருதய நோய்கள்,மாரடைப்பு, சிறுநீரக நோய்கள் போன்றவை ஏற்படாமல் தடுப்பதில் குறிப்பிடத்தக்க நன்மைகள் எதுவும் கிடைத்ததாக ஆய்வுகள் உறுதிப்படுத்தாத காரணத்தால்தான் நீரிழிவு உள்ளவர்களுக்கும் அதே 140/90 டட கட்டுப்படுத்துவது போதுமானது என்று சொல்கிறார்கள்.
சிகிச்சை முறை

நான்கு வகையான மருந்துகள் பரிந்துரைக்கப்பட்டுள்ளன (thiazide-typediuretic, CCB, ACEI, or ARB) இவற்றில் கறுப்பு இன மக்களுக்கு முதல் இரண்டில் ஒன்றை ஆரம்ப நிலையில் உபயோகிக்கச் சிபார்சு செய்திருக்கிறார்கள்.

**தொடர்ச்சி 10ம் பக்கம்...**



**T.T.S.Brothers GmbH&Co.KG**

உங்கள் வீட்டு தேவைக்கான அனைத்து மளிகை பொருட்கள்-ஆடை அணிகலன்கள் மற்றும் உங்கள் உறவுகளுக்கு பணம் அனுப்புவது முதல் அனைத்து தேவைகளுக்கு நாடவேண்டிய ஒரே ஸ்தாபனம்.

உங்கள் உறவுகளுக்கு
துரிதமாகப் பணம் அனுப்ப நாடுங்கள்!
0.01€ இருந்து 500€ வரை அனுப்ப 8.90 € மட்டுமே!
500€ இருந்து 1.500€ வரை அனுப்ப 15.00€ மட்டுமே!

MoneyGram Transfert d'argent

RHEINISCHE STR 52
44137 DORTMUND
Tel:0231 819288

Helmholtz Str.11
46045 Oberhausen
Tel:0208 202829

Garten Str.29
48147 Münster
Tel: 0251 2301184

Johannes Str.35
53225 Bonn Beuel
Tel. 0228 40377846

Graphic design Vettimaniy Ltd



## உயர் இரத்த அழுத்தம்

09 பக்கத் தொடர்ச்சி

முதல் முதலாக ஒருவருக்கு பிரஷர் உள்ளது என கண்டறியப்பட்டதும் மருத்துவர் மேற்கூறியவற்றில் ஏதாவது ஒரு பொருத்தமான மருந்தைத் சிபார்சு செய்வார். அதை உபயோகித்து வருகையில் ஒரு மாதத்தின் பின்னர் பிரஷரை மீண்டும் அளவிட்டு மருந்தின் அளவை மறு பரிசீலனை செய்வார்கள்.

பிரஷரானது சொல்லப்பட்ட அளவிற்கு, அல்லது அதனிலும் சற்று அதிகமாகக் குறைந்திருந்தால் அதே அளவில் தொடர வேண்டும். மருந்தின் அளவைக் குறைக்கக் கூடாது.

ஆனால் பிரஷரின் அளவானது விரும்பப்பட்ட அளவுக்கு ஒரு மாதத்தில் குறையவில்லை எனில் மருத்துவர் ஏற்கனவே கொடுத்த மருந்தின் அளவை அதிகரிப்பார் அல்லது இரண்டாவதாக மற்றொரு மருந்தைச் சேர்த்தும் தரக் கூடும்.

பிரஷரானது விரும்பிய அளவை எட்டும்வரை மருத்துவர் தொடர்ச்சியான கண்காணிப்பை வைத்திருப்பார்.

இரண்டுவகையான மருந்துகளைக் கொடுத்தும் பிரஷர் குறையவில்லை எனில் மூன்றாவது மருந்தையும் சேர்த்து உபயோகிக்கவும் நேரலாம்.


இவ்வளவையும் உங்கள் அருகில் உள்ள அரச மருத்துவர் அல்லது குடும்ப மருத்துவர் கண்காணித்து மருத்துவம் செய்வார். மூன்று மருந்துகளாலும் பிரஷரைக் கட்டுப்பாட்டில் கொண்டுவர முடியாது போனால் மாத்திரம் ஒரு விசேட மருத்துவரை அணுகுவது உசிதமானது என சிபார்சு செய்கிறார்கள்.

சாதாரண இரத்த அழுத்தத்தை 120/80 என்பார்கள். இது 140/90 ற்கு மேலே சென்றால்தான் அதை உயர் இரத்த அழுத்தம் என்கிறோம். இதில் எந்த மாற்றத்தையும் புதிய வழிகாட்டல் செய்யவில்லை. வயதானவர்கள் மற்றும் நீரிழிவு உள்ளவர்களில் இதை எந்த அளவுக்குக் குறைக்க வேண்டும் என்பதையே புதிய வழிகாட்டல் சொல்கிறது.

மருந்துகளைப் பற்றிச் சொன்னபோதும் பிரஷரைக் குறைப்பதில் வாழ்க்கை முறை மாற்றங்கள் உதவும் என்பதை மறுப்பதற்கில்லை. ஆரோக்கியமான உணவு முறை, தினசரி உடற் பயிற்சி, எடையைச் சரியான அளவிடல் பேணுதல் போன்றவற்றை கடைப்பிடிப்பது அவசியம் என்பதை புதிய வழிகாட்டல்கள் உறுதிப்படுத்தவே செய்கிறது.

எனவே மருந்தைப் போட்டால் எல்லாம் சரியாகிவிடும் என்ற மனநிலையை மாற்ற வேண்டும். ஆரோக்கியமான வாழ்க்கை முறையைக் கடைப்பிடிப்பது எப்போதும் அவசியமானதே.

இவற்றைக் கடைப்பிடிப்பதன் மூலம் பொதுவான உடல் நலம் மேம்படுவது மாத்திரமின்றி மருந்துகளின் அளவுகளையும் குறைக்க முடியும் என்பதை நினைவில் வைத்திருங்கள்.




"மீண்டும் சொன்ன சொல் இன்னும் சில வருடங்களில் மாறலாம். புதிய புதிய கண்டுபிடிப்புகளின் பயனாக நோயாளிகளுக்கு நன்மை அதிகம் கிடைக்கும் பட்சத்தில்" என விடைபெற அவர் எழுந்தபோது நான் கூறியதை ஆமோதிப்பது போலத் தலையை ஆட்டி மனத் தெளிவோடு அவர் புன்னகைத்தார்.

நன்றி: தமிழர் தகவல் -கனடா









# 70 வது பிந்தநாள் கண்ட ஐக்கிய நாடுகள் சபை UNO




வ.சிவராசா யேர்மனி

உலகில் பசி, பட்டினி, பஞ்சம், கொடிய நோய்கள், இயற்கை அழிவுகள் ஏற்பட்டு வருகையில் 1வது 2வது உலகமகா யுத்தங்களும் வந்து கோடிக்கணக்கான மனிதஉயிர்கள் இப்பூமிப் பந்தில் அநியாயமா அழிந்தமை கடந்தகால உலக வரலாறாகப் பதிவுசெய்யப்படுகின்றது. இப்படியாக பூமிப் பந்தில் கொடிய நோய்களும் உயிரழிவுகளும் இயற்கை அழிவுகளும் ஏற்பட்டு மனிதவாழ்வு சீரழிந்து பொருள் வீடுகள், உடமைகள் அழிந்தன. இவற்றைவிட பல நாடுகளிடையே இடம்பெற்ற சர்வாதிகார ஆட்சி, நாடுகளிடையே போர், யுத்தம், உள்நாட்டுப்போர் இடம்பெற்றும் உயிரழிவுகள் பல்கிப் பெருகின. இவ்வேளையில்தான் மனிதன் சமாதானமாகவும் சபீட்சமாகவும் இயற்கை அழிவுகளிலிருந்து பாதுகாப்பாக வாழவேண்டும் என்ற பெரு நோக்கில்தான் இந்த ஐக்கிய நாடுகள் சபை (UNO) 1945-06-26ம் தேதியன்று உதயம் பெற்றது.

இந்தச்சபையை ஆரம்பிப்பதற்கு முன்னாள் அமெரிக்க ஜனாதிபதி பிராங்ளின் அவர்கள் எடுத்துக்கொண்ட பெருமுயற்சி என்று கூறப்படுகின்றது. 2வது உலகப் போர் முடிவடைந்தபோதே இச்சபையும் தோற்றம் பெற்றது. அப்போது அமெரிக்கா, ரஷ்ஷியா, பிரித்தானியா நாடுகளின் தலைவர்களின் கூட்டுமுயற்சியால் 50 நாடுகளின் தலைவர்கள் அழைக்கப்பட்டு ஒன்று சேர்ந்து தீர்மானம் எடுக்கப்பட்டு இச்சபையை ஆரம்பம்பெற்றது. தற்போது இச்சபையானது 70 வது பிறந்தநாளைக் கொண்டாடிக் கம்பீரமாக நிற்கின்றது.

2வது உலகமகாயுத்தம் நடைபெற மூலகாரணமாக இருந்தவரான ஜேர்மனிய சர்வாதிகாரி அடோல்வ் கிட்லரின் சர்வாதிகார நடவடிக்கைகளால் ஜேர்மனி நாட்டை இச்சபை சேர்த்துக் கொள்ளவில்லை என்பதும் குறிப்பிடத்தக்க விடையமாகும். 1973ம் ஆண்டுதான் ஜேர்மனியை உறுப்பு நாடாகச் சேர்த்துக்கொள்ளப்பட்டது.





நாளடைவில் பல நாடுகள் அணுஆயுத, கனரக, விஷவாயு, பயங்கர ஆயுதங்கள் உற்பத்தி விற்பனையில் கோடி கோடியாகப் பணம் ஈட்டியதுடன் மனித படுகொலைகளுக்கும் வழிகோலின. சர்வாதிகாரம், பயங்கரவாதம் சில நாடுகளில் தலைதூக்கின, இன, மத, நிறவெறிகள் என உலகம் கடுமையாக எதிர்கொண்டிருந்தது. இந்தவேளையில்தான் இச்சபையின் நடவடிக்கையின் விளைவாக போர் நிறுத்தம், தீவிரவாத நடவடிக்கைகளின் கட்டுப்பாடு, இயற்கை அழிவுகளிலிருந்து மக்கள் பாதுகாப்பு, உள்நாட்டுக் கலவரங்கள் ஒழிப்பு, பசிபட்டினி வறுமை ஒழிப்பு, சுகாதார நடவடிக்கைகள் என பல தொழிற்பாடுகள் விரிவடைந்து மனிதசமூகம் மீட்சிபெற்று அமைதிவழி வாழ வழிபிறந்தது என்றேகூறலாம். இருப்பினும் இச்சபையின் கட்டுப்பாடுகளை மீறிச் செயற்பட்டபடியால் சிலநாடுகள் மனித உயிரழிவுகளை சந்தித்தே வந்துள்ளன.

உலகில் நிர்வாகசபையின் பொதுச்செயலாளர் என்பது மிகப்பெரும் பதவியாகக் கருதப்படுகின்றது. தற்போது இச்சபையின் பொதுச்செயலாளராக தென்கொரிய நாட்டவரான பான் கீ மூன் (Ban ki Moon) அவர்கள் கடந்த 2007 ஆண்டு தொடக்கம் இருந்து வருகின்றார். இச்சபையானது தற்போது 193 உறுப்பு நாடுகளைக் கொண்டுள்ளது. இச்சபையானது நான்கு பெரும் பகுதிகளைக்கொண்டுள்ளது. செயலாற்றுப்பகுதி, பாதுகாப்புச்சபை, பொருளாதார சமூகக் கட்டமைப் புச்சபை, சர்வதேச உயர் நீதிச் சேவை என்பனவாகும். இந்த நான்கு பிரதான சபைகளின் கீழ் நூற்றுக்கணக்கான பகுதிச்சபைகள் இயங்கி வருவதுடன் பல சபைகள் உலகின் பல நாடுகளில் தலைமைச் செயலகத்தைக்கொண்டு இயங்குகின்றன. உதாரணத்திற்கு சர்வதேச செஞ்சிலுவைச் சங்கம், சர்வதேச மனித உரிமைகள் சபை என்பன சுவீஸ்லாந்து நாட்டிலுள்ள ஜெனீவா நகரில் தலைமைச் செயலகமாகக்கொண்டு இயங்கி வருகின்றன.

ஒவ்வொருவருடமும் செப்டெம்பர் மாதத்தில் அனைத்து உறுப்புரிமை நாடுகளின் தலைவர்களும் இதன் பொதுச்சபைக்கூட்டத்தில் கலந்துகொண்டு உரையாற்றுவார்கள். அமெரிக்கா வாஷிங்டனிலுள்ள தலைமைச் செயலகக் கட்டிடத்தில் செயலாற்றுப்பகுதி, நூலகம், கூட்டமண்டபம், பார்வையாளர்பகுதி எனப்பல பகுதிகள் அமைந்துள்ளன.

இச்சபையின் (வீட்டோ அதிகாரம்) பிரதான அதிகாரத்தைப் பாவிக்கும் வல்லரசு நாடுகளாக அமெரிக்கா, ரஷ்ஷியா, பிரான்ஸ், பிரித்தானியா, சீனா ஆகிய ஐந்து நாடுகளும் அதிகாரம் பெற்றுள்ளன. மிகவும் கடினமான முடிவுகளை எடுக்கும்போது வீட்டொ அதிகார சக்தியை இந்த ஐந்து நாடுகளுமே எடுக்க முடியும். உலகில் பல நாடுகளில் தோன்றும் யுத்தம், உள்நாட்டுப்போர், மற்றும் இயற்கை அழிவுகள், மனித அழிவுகளிலிருந்து மீட்சிபெற்று உலகம் அமைதி பெற இந்த ஐந்து நாடுகளுமே மிக முக்கிய பங்குவகிக்கின்றன என்று கூறப்படுகின்றது.

இச்சபையின் உப அமைப்புக்களாகச் சுமார் 15 சபைகள் இடம்பெற்றுள்ளன. நைரோபி-எத்தியோப்பியா, ஜெனீவா-சுவீஸ்லாந்து, டென்காங்-நெதர்லாந்து, நியூயோர்க்-அமெரிக்கா, பாரிஸ்-பிரான்ஸ் போன்ற பல நாடுகளில் இச்சபைகள் அமைந்துள்ளன. இவற்றில் (WHO) உலக சுகாதார தாபனம், (IWF) சாவதேச நாணய நிதியம் (World BanK) உலக வங்கி, (UNESCO) சர்வதேச கல்வி விஞ்ஞான அபிவிருத்தி நிறுவனம், (IRC) சர்வதேச செஞ்சிலுவைச் சங்கம், (WLO) சர்வதேச தொழிலாளர் சபை, (UNHCR) சர்வதேச அகதிகள் பாதுகாப்புச் சபை, (UNICEF) சர்வதேச கல்வி , விஞ்ஞான சிறுவர் மேம்பாட்டுச் சபை,, (UNEP) சர்வதேச சுற்றுச்சூழல் பாதுகாப்புச் சபை(IAEA) சர்வதேச அணுஆயுத கட்டுப்பாட்டு ஒழிப்புச்சபை போன்றனவற்றைக் குறிப்பிடலாம்.

சீனா, பிரான்ஸ், ரஷ்ஷியா, அமெரிக்கா, பிரித்தானியா ஆகிய ஐந்து நாடுகளும் சர்வதேச பாதுகாப்புச் சபையின் பிரதான நாடுகளாக இருந்தாலும் உபபாதுகாப்பு நாடுகளாக 10 நாடுகள் இரண்டு வருடங்களுக்கு மாறி..மாறி அங்கம் வகிக்கின்றன. ஐக்கிய நாடுகள் சபையின் படைகளில் பல்வேறு நாடுகளிலுருந்தும் வீரர்கள் தெரிவுசெய்யப்பட்டு உலக நாடுகள் எங்கும் கடமையில் ஈடுபடுத்தப்படுகின்றார்கள். தற்போது 5 கண்டங்களிலிருந்தும் 16 நடவடிக்கைக்குழுக் கமாண்டர்கள் உட்பட சுமார் 1.06.595 பேர் படைகளில் கடமைபுரிகிறார்கள். நாடுகளிடையே போர், உள்நாட்டுப்போர் நெருக்கடி மற்றும் இயற்கை அழிவுகள், மற்றும் பாதுகாப்பு, சமாதான நடவடிக்கைகளுக்காக இப்படையினர் உலகமெல்லாம் கடமைபுரின்றார்கள். இவை மட்டுமல்லாமல் இன,மத, நிறச் சண்டைகள் மற்றும் இயற்கை அழிவுகள் ஏற்படும் தருணங்களெல்லாம் இப்படைகளின் செயற்பாடுகள் உலக சமாதானத்திற்கும் நல்வாழ்விற்கும் வழிவகுக்கின்றது.

Nandy's Catering & Partyservice

உங்கள் இல்லத்தில் எந்த வைபவங்களாக இருந்தாலும் சுடச்சுட சுவைகுன்றாது உங்களுக்குத் தேவையான இலங்கை, இந்திய, ஐரோப்பிய உணவுவகைகளை தயாரித்து நாம் வழங்குகின்றோம்!

ஒரே குடையின் கீழ் எங்கள் சேவை!

உணவு விநியோகம் பாரிமாறல் மற்றும் நிழல்படம், வீடியோ அதுமட்டுமன்றி எமது திறமையான ஊழியர்கள் உங்கள் விழாவை திட்டமிடுதல், திருமணமேடை, மண்டபம் மற்றும் மண்டப நடுப்பகுதிச் சோடனைகள் மற்றும் நடைமுறைப்படுத்துதல் போன்றவைகளுக்கு உதவ ஆயத்தமாக உள்ளனர்.

NANDY'S CURRY'S & MORE
WWW.NANDYS.DE

Düsseldorf

Mobil 0173-7424955
Tel:0211 76 91 974

www.Nandys.de
e.mail:info@nandys.de



20.10.2015 செவ்வாய்க்கிழமை நண்பகல், பரந்தன், கனகபுரம்.
**மறவன்புலவு க. சச்சிதானந்தன்**

முதலாம் நாள் போர். தந்தையை இழந்தேன்.
இரண்டாம் நாள் போர். கணவனை இழந்தேன்.
மூன்றாம் நாள். போர்ப் பறை கேட்கிறது.
எனக்கு ஒரே ஒரு மகன், அழைத்தேன்.
வெள்ளாடை அணிவித்தேன். வேல் கொடுத்தேன்.
போருக்கு அனுப்பினேன். குடிமைப் பெயர் காத்தேன்.

போருக்குத் தமிழ்ப் பெண்கள் போகாத காலத்தில் மனத்தை வலிமையாக்கிய, கடுமையாகத் துணிந்த பெண் வீறு கொண்டதைப் புறநானூற்றுப் பாடலில் (279) ஒக்கூர் மாசாத்தியார் சொல்வார்.

கெடுக சிந்தை, கடிது இவள் துணிவே,
மூதின் மகளிராதல் தகுமே
மேல்நாள் உற்ற செருவிற்கு இவள் தன்னை
யானை எறிந்து, களத்து ஒழிந்தனனே,
நெருநல் உற்ற செருவிற்கு இவள் கொழுநன்
பெருநிரை விலங்கி, ஆண்டுப் பட்டனனே
இன்றும், செருப்பறை கேட்டு, விருப்புற்று, மயங்கி
வேல்கைக் கொடுத்து, வெளிது விரித்து உடீஇப்
பாறுமயிர்க் குடுமி எண்ணெய் நீவி,
ஒரு மகன் அல்லது இல்லோள்
செருமுகம் நோக்கிச் செல்க என விடுமே.

தமிழ்ப் பெண்களைப் போருக்கு அனுப்பாத காலத்தைப் புறநானூற்றுப் பாடலில் (9) நெட்டிமையார் சொல்வார்.
ஆவும் ஆனியல் பார்ப்பன மாக்களும்,
பெண்டிரும் பிணியுடையீரும், பேணித்
தென்புல வாழ்நர்க்கு அருங்கடன் இறுக்கும்
பொன்போற் புதல்வர் பெறாஅதீரும்,
எம் அம்பு கடிவிடுதும் நும் அரண் சேர்மின் என
அறத்தாறு நுவலும் பூட்கை.

காலம் மாறியது. தமிழகத்தின் வீரமங்கை வேலுநாச்சியார் படைதாங்கிப் போரிட்டவர்.




# தமிழ் இனி

வரலாற்றின் அடுத்த கட்டமாக ஈழத்துத் தமிழ்ப் பெண்களே போராளிகளாயினர். மகளிர் படை அணியாக அமைந்தனர். மகளிர் படையணித் தலைவி தமிழினி. பின்னர் அரசியல் துறைப் பொறுப்பாளர்.

செருமுகம் விரும்பி நெருப்பாற்றுள் நிமிர்ந்து நீந்தியவர் செவ்வாய்க்கிழமை தீயோடு கலந்தார். என் நெஞ்சார்ந்த அஞ்சலிகள் அவருக்கு.



கனகதுர்க்கா பூசாரி
பண்டித் சீனிவாஸ் சாஸ்திரி
கருமாரி அம்மன் துணை
Face Reading
முகத்தைப் பார்த்து உங்கள்
எதிர் காலத்தைக் கணிப்பார்
அத்துடன் கைரேகையும் பார்க்கப்படும்

வியாபாரங்கள் எதிரிகள் உடல்நிலை
வேலை குழந்தைப்பாக்கியம் திருமணம் பணம் காதல்
விவாகரத்து வழக்குகள் கண்திருஷ்டி படிப்பு
வாகனப்பொருத்தம் மற்றும் பலபிரச்சினைகளுக்கும்
தீர்வுகாணலாம். காத்துக்கறுப்பு இருந்தாலும் நிவாரணம்
செய்து கொடுக்கப்படும்
வாரத்தில் 7 நாட்களும் 09.மணி முதல் 22.00 மணி வரை வரலாம்.
பேசும் மொழிகள் :தமிழ் தெலுங்கு,
ஒரு முறை நம்பிக்கையுடன் வாருங்கள் நலமடைவீரர்கள்.
Tel:0231 33 89 72 90 -Handy: 015166182886 015214145738
Adler Ster.30, 44137 Dortmund

A.tu.Z Dolmetscher -
und Übersetzungsdienst
Für alle weltsprachen
மொழிபெயர்ப்புச் சேவை!
V.Ramakrishnan
Tel:0201 977 4957
Mobile 0176 28 44 85 89
0152 11 98 9603
Fax:0201 24 82 888
உங்கள் சகல பத்திரங்களையும் தமிழ்,ஆங்கிலம் பிரஞ் மற்றும்
உலகமொழிகளில் இருந்து யேர்மன் மொழிக்கு
மொழிபெயர்பதற்கும் யேர்மன் மொழியில் இருந்து நீங்கள்
விரும்பும் மொழிக்கு மொழிபெயர்ப்பதற்கும் நீதிமன்றத்தில்
சத்தியபிரமாணம்
( allgemein Vereidigte) மற்றும் நீதிமன்றத்தால்
அங்கீகாரம் (Ermächtigte)அளிக்கப்பட்ட
மொழிபெயர்ப்பாளர்களால் குறைந்த செலவில் துரிதகதியில்
மொழிபெயர்ப்பதற்கும் நாடவேண்டிய இடம். Lise-Meitner-Str.20
45144 Essen
e.mail:atuzuebersetzung@hotmail.com


அன்று யாழ் நகரில் ஒர் மொக்கன் கடை இன்று டோட்மூண்ட் நகரில் ஒர் நானா கடை!
Sweet Chilli
Original Srilankisches & Indisches Restaurant
100%Halal 100%Frisch 100%Naturgewürze 100%Naturkräuter
இலங்கை புரியாணி (ஒரிஜினால்) கொத்துரொட்டி,
இடியப்பகொத்து, புட்டுக்கொத்து, தோசை,மட்டன்றோல். பற்றிஸ்
மற்றும் ஊர் ஆட்டிறைச்சிக் கறி, ரோஸ்கறி, கோழிக்கறி.அத்துடன் இந்திய
உணவுவகைகள், அறுசுவை மரக்கறிகளுடன் தினமும்
வாழையிலையில் பரிமாறும் ஒரே கடை நானா கடை!!! தினமும் காலை 11.30
இருந்து மாலை 23.30 வரை

சான்றிதழ்களை இருமுறை பெற்றவர்கள் நாம்!
Sweet Chilli
Rheinische str.60- 44137 Dortmund
www.sweetchilli-do.de
50 இருக்கைகளைக் கொண்டது
Tel: 0231 315 46 84








படங்கள் : வெற்றிமணி

**வெற்றிமணி வளர்கலை விருது**

# வர்ணத்தில் பரத வண்ணம் கண்ட

## செல்வி நிஷா சிவகுலேந்திரன்.

ஆடற்கலாலய அதிபர் ஆடற்கலைமணி,திருமதி.ரெஜினி சத்தியகுமார் அவர்களின் 15 வது அரங்கேற்ற மாணவியாக செல்வி நிஷா சிவகுலேந்திரன் அவர்களின் பரதநாட்டிய அரங்கேற்றம் 24.10.2015 சனிக்கிழமை யேர்மனியில் krefeld நகரில் இடம்பெற்றது. சிவபூசை வழிபாட்டுடன் அரங்கேற்றம் ஆரம்பமானது.

பரதக்கலை பிறகலைகள்போல் அல்ல. பரதத்திற்கு வேண்டிய சிறப்பு அம்சங்கள் உடல்வாக்கிலும் உளவாக்கிலும் சிறப்பாக அமைந்திருந்தால் அவர் கற்கும் கலை மேலும் மேலும் மெருகு பெற்று உயரும் என்பது உண்மை. செல்வி நிஷா சிவகுலேந்திரன் பரதத்திற்கு வேண்டிய அத்தனை அம்சமும் ஒருங்கே பெற்றவர்.

ஒரு மரமோ ஒருவிதமான கனிகளே தரும். பரதத்தில் ஒரு முகத்தில் ஒரு உடலில் நவரசங்களாக விதம் விதமான கனிகளைத் தந்து, பார்ப்பவர் மனதை அள்ளி எடுத்தாள் செல்வி நிஷா சிவகுலேந்திரன் அவர்கள்.

நட்டுவாங்கம் ஆடற்கலைமணி ரெஜினி சத்தியகுமார் அவர்களும் அவர் புதல்வன்நாட்டியச் சுடரொளி நிமலன் சத்தியகுமார் அவர்களும் சிறப்பாக செய்தனர். செல்வி நிஷா வின் நடனத்தில் செல்வன் நிமலன் சத்தியகுமாரது பாணி இடை இடையே வந்து சென்றதை அவதானிக்க முடிந்தது. இது தவிர்க்க முடியாததும் தவிர்க்க கூடாததும் ஒன்று. இளயவாரிசுகளின் பாணியில் புதிய பலபடையல்கள் வர இது வழிசமைக்கும்

பக்கவாத்தியக் கலைஞர்களாக பாடகர் மதுரக்குரலோன் கண்ணன் அவர்களின் காந்தர்வக் குரலும், மிருதங்க வித்துவான் சங்கீதரத்னம் பிரணவநாதன் அவர்களின் தாள சுத்தமும், வயலின் வித்துவான் நெய்வேலி ராதாகிருஷ்ணன் அவர்களின் வயலின் இசைசேரவும் குரு, மற்றும் செல்வன் நிமலன் சத்தியகுமார் அவர்களின் நட்டுவாங்கமும் ஒலிக்க, நர்த்தகி நிஷா சிவகுலேந்திரன் தனது முழுத்திறனையும் பரதத்தில் பதித்துவிட்டார்.

உதிரத்தின் நினைவு....

மறைந்த தனது சகோதரனை நினைத்து பிரிவின் சோகத்தை, கண்ணீர்த்துளிகளைக்காணிக்கை யாக்கி,பார்வையாளர்களையும் பக்கவாத் தியக் கலைஞர்களையும் பெற்றோரையும் கண்கலங்கவைத்துவிட்டார்.

பிரதமவிருந்தினர் சலங்கையொலி கலா மன்ற அதிபர் திருமதி.சாவித்திரி இம்மானுவல், அவர்கள் செல்வி நிஷாவின் பரத அடவுகளின் சுத்தம் தன்னை அசத்திவிட்டதாகவும் இன்று நட்டுவாங்கம் புரியும் பரதச் சுடரொளி நிமலன் சத்தியகுமார் அவர்கள் யேர்மனியின் வாரிசாக மட்டுமல்ல அவன் ஐரோப்பாவின் வாரிசாக வருவான் வந்துவிட்டான் என்று உற்சாகமாக உரையாற்றினார்.

சிறப்பு விருந்தினர்களாக உமாசங்கர் (காஞ்சிகாமகோடி ஆஸ்தான வித்தவான்), கலைசூடாமணி ச.சண்முகராகவன், வெற்றிமணி ஆசிரியர் கலாநிதி மு.க.சு.சிவகுமாரன் ஆகியோர் கலந்து கொண்டு உரையாற்றினர். திரு.உமாசங்கர் அவர்கள் தனதுரையில் தமிழகக் கலைஞர்களுக்கு எந்த வகையிலும் குறைவற்ற கலைஞர்களை இங்கு காணுகிறேன், பெருமிதம் கொள்கின்றேன் என்றார். வெற்றிமணி ஆசிரியர் சிவகுமாரன் அவர்கள், ஓவியத்தில் எப்படி வர்ணம் முக்கியேமா அதேபோல் பரதத்திலும் முக்கியமானது வர்ணம். அந்த வர்ணத்தை சீராக மிகைப்படுத்தாது அளவோடு அழகாக இங்கு நிஷா தந்தார் என்றார்.

தொடர்ச்சி 20 ம் பக்கம்




Essen மாநகரில் Öffnungszeiten 14.00-19.00 Uhr

**Oviyan textiles**

ஒவியன் ஆடைகள் உலகம்

Tel:0201 330 99 464

அழகிய பட்டுச்சேலைகள் பாட்டிசாறிகள் பெரியவர் சிறுமிகளுக்கான அழகிய பஞ்சாபிகள்,இமிற்ரேசன் நகைகள் அனைத்தையும் மலிவாகவும் தரமாகவும் பெற நாடுங்கள்,ஒவியன் ஆடைகள் உலகம்!

தீபாவளியை முன்னிட்டு

மாபெரும் மலிவு விற்பனை

12.010.2015 முதல் 10.11.2015 வரை

எசன் நகர பிரதான புகையிரத நிலையித்தில் (Hbf) இருந்து 5 நிமிட நடைத்தூரம்

Ihn.Balasundaram

Baedecker Str.11
45128 Essen




Vettimaniy SHOW 2015

யேர்மனியில் நடைபெற்ற வெற்றிமணி விழாவை
பார்க்கத் தவறியவர்களும், மீண்டும் மீண்டும், பார்த்து இரசிக்க
துல்லியமாக ஒளிப்பதிவு செய்யப்பட்ட Blu ray Disc இல் கிடைக்கும்

vettimaniy:Tel: 01575 83 94 325 Nimal Video Tel: 0177 67 94 261

## இஞ்சி இடுப்பழகி படத்திற்காக ஏற்றிய உடல் எடையை குறைக்க அமெரிக்கா பறந்த அனுஷ்கா





இஞ்சி இடுப்பழகி படத்திற்காக ஏற்றிய உடல் எடையை பாகுபலி 2 படத்திற்காக குறைக்க அமெரிக்கா சென்றுள்ளாராம் அனுஷ்கா. இஞ்சி இடுப்பழகி படத்திற்காக மெல்லிடை போன்று இருந்த அனுஷ்கா கண்டமேனிக்கு சாப்பிட்டு உடல் எடையை கூட்டினார். யோகா டீச்சரான அவர் உடல் எடையை அதிகரிக்க யோகா, ஜிம் ஆகியவற்றை கைவிட்டார். விளைவு படத்திற்கு ஏற்றது போன்று சூப்பராக குண்டானார்.


அடடே படத்திற்காக குண்டாகி புஸ்ஸென்று ஆகிய அனுஷ்காவை பார்த்து ரசிகர்கள் ஆச்சரியப்பட்டனர். அனுஷ்கா தான் லேடி விக்ரம் என்றார்கள்.
பாகுபலி 2 படத்தில் நடிக்க உடல் எடையை குறைக்க வேண்டிய கட்டாயத்தில் உள்ளார் அனுஷ்கா. அதுவும் விரைவாக குறைக்க வேண்டிய நிலையில் உள்ளார்.
அமெரிக்கா உடல் எடையை விரைவில் குறைக்க அனுஷ்கா அமெரிக்கா சென்றுள்ளாராம். யோகா, உடற்பயிற்சி செய்து இயற்கையான முறையில் உடல் எடையை குறைக்க விரும்பிய அவர் கால அவகாசம் இல்லாததால் அமெரிக்கா பறந்துள்ளாராம்.
அடுத்து வெளியான ருத்ரமா தேவியும் ஹிட். ,ப்படி அடுத்தடுத்து ஹிட் கொடுத்த சந்தோஷத்தில் உள்ளார் அனுஷ்கா.

இஞ்சி இடுப்பழகி படத்திற்காக அவர் 20 கிலோவுக்கு மேல் தனது உடல் எடையை கூட்டினார். அதே படத்தில் அவர் உடல் மெலிந்தும் நடிக்க உள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது.
சரி சரி உடல் எடையைக்கூட்டுவது பெரியகாரியம் அல்ல! குறைக்கிறது இருக்கே! அது ....அது!





நெடுந்தீவு முகிலன்



நம்பிக்கையை விட
ஒரு நண்பன் இல்லை
அவனும் நம்மைக்
கை விட்டால்...

கண்ணீரை விட
ஒரு கடவுள் இல்லை.

மரணத்தின் பின் நரகம் கிடைப்பது உண்மைதான்.
எங்கோ செத்துதான் நாம் இங்கு வந்திருக்கிறோம்.




விதவைக்கு கணவராகி விட்டது - வறுமை
இருவருக்கும் ஒரு குழந்தை பிறந்திருக்கிறது - பசி

உன் தோட்டத்தில் தேசிக்காய் களவு போனதற்காய்
என் வீட்டு ஊறுகாயில் சந்தேகப்படாதே...

எலித் தொல்லை ஓய்ந்து விட்டதென்று...
வளர்த்த பூனையை கொல்லாதீர்கள்.

நெல்லின் ஆடையை களைந்தால் அரிசி - அந்த அவமானம் தாங்க முடியாமல் அரிசி செத்து போனால் சோறு.



குழந்தைகள் போல மண் அள்ளி தின்பதற்கும்
நம்மிடம் தானே சொந்த நிலங்கள் இல்லை...

ஊர் வாய்க்கு என் வாழ்வை இரையாக்காமல்...
என் ஆத்மாவுக்கு கனவை பசியாக்குகிறேன்.

பாழ் கிணற்றில் கிடந்த தவளையை ஊர்க் குளத்தில்
தூக்கி விட்டேன் - அது
தீர்த்த கேனி கேட்கிறது.

குழப்பம் வரும் போது சகுனியாயிருந்தவர்கள்.
கொண்டாட்டம் வரும் போது சீதையாகிறார்கள்.

கட்டை பாவாடையோடு வந்த பணக்காரியிடம் கை நீட்டுகையில்...
காலில் சேலை தடக்கி விழுந்தாள் பிச்சைக்காரி.

24 மணி நேரமும் மின்சாரம் தருவமென்று ஓட்டு கேட்கும் போது அறிக்கை விட்டவங்க...ஆட்சிக்கு வந்த பிறகு அமாவாசையையே அமுல் படுத்திறாங்க...

தேனுக்கு விளம்பரம் செய்திட்டு வேப்பெண்ணையை விற்றால்...
தொண்டை அரிப்புக்கு காதுகுத்து மருந்துதான் வாங்கலாம்.



## நீங்கள் வலிமையானவரா?


மன்னிப்பது உங்களை வலிமையாக்கும் மகாத்மா காந்தியிடம் இருந்து நீங்கள் கற்றுக் கொள்ள வேண்டிய விஷயங்களில் இதுவும் ஒன்று.

பலி உணர்வை வளர்த்துக் கொள்பவர்களை விட, மன்னிக்கும் குணத்தை கொண்டவர்களே வலிமை யானவர்களாக இருப்பார்கள் என அவர் கூறியுள்ளார்.
நீங்கள் மன்னிக்க வேண்டுமென்றால், வலுவான மதிப்புகளைக் கொண்ட மனிதனாக நீங்கள் இருக்க வேண்டும். அதுவே உங்களை முழுமையான மனிதனாக மாற்றும்.









# இந்த உலகம் பெண்களுக்கானதா?

சேவியர்

**"ஏங்க, தீபாவளிக்கு ஒரு டிரஸ் எடுக்கணும் வரீங்களா" என்ற மனைவியின் குரல் தான் ஆண்களை பதறடிக்கச் செய்யும் மிகப்பெரிய கேள்விகளில் ஒன்று. அந்தக் கேள்விதான் பெண்கள் ஆண்களுக்கு வைக்கும் மிகப்பெரிய டெஸ்ட் என்பதை பெரும்பாலான ஆண்கள் அறிவதில்லை.**

அப்பாவி போல பிக் ஷாப்பரைக் கையில் பிடித்துக் கொண்டு பலியிடக் கொண்டு செல்லப்படும் ஆட்டைப் போல பின்னாலேயே செல்லும் ஆண்களுக்காக, கருணை அடிப்படையில், கடைகளில் ஆங்காங்கே ஒன்றிரண்டு இருக்கைகள் இருக்கும். ஆனால் ஒரு காலி இடத்தைப் பிடித்து அமரப் போகும் வினாடியில் மனைவியின் குரல் கேட்கும்.

"ஏங்க இந்த சாரி நல்லாயிருக்கா ?" அந்தக் குரல் கேட்ட வினாடியில் மனைவியின் அருகே ஓடுவார் கணவர். சில வினாடிகள் அந்த சாரியை அப்படியும் இப்படியும் பார்த்து விட்டு, "சூப்பரா இருக்கு. உன் கலருக்கு செமயா இருக்கும்" எனும் பொய்யைச் சொல்ல வேண்டும். ஒரு சில வினாடிகள் பார்க்காவிட்டால், "நல்லா பாத்து சொல்லுங்க.." என மிரட்டல் வரும்.
"சூப்பரா இருக்கு" என்று சொன்னால் மனைவி அதை வாங்கி விடுவார் என்பது தான் அப்பாவிக் கணவனின் மனக் கணக்கு. அது மட்டும் நடக்கவே நடக்காது. மூன்று மணி நேரம் சாரிகளைப் புரட்டி விட்டு, "எதுக்கும் இந்த வாட்டி சாரி வேண்டாம், நான் சுடிதாரே எடுக்கறேங்க" என்பார் மனைவி. மிரண்டு போகும் கணவனுக்கு வேறு வழியில்லை, அடுத்த இரண்டு மணி நேரத்துக்குப் பின் சுடிதார் குவியலுக்குள்ளே இருந்து தலையை எட்டிப் பார்த்து மனைவி சொல்வார், "கலெக்ஷன் சரியில்லீங்க.. நாம அடுத்த கடைக்குப் போவோம்".

ஜவுளி கடைகள், பெண்களுக்கு ஏழெட்டு மாடிகளை ஒதுக்கும் பிரம்மாண்டக் கடைகளெல்லாம், ஆண்களுக்காய் போனாப் போவுதென ஒரு மாடியை ஒதுக்கி வைத்து விட்டு ஒதுங்கி விடுவார்கள். எப்படிப் பார்த்தாலும் அழகாய்த் தெரியும் கண்ணாடிகளை எங்கிருந்து தான் இறக்குமதி செய்வார்களோ, ஆண்டவனுக்கே வெளிச்சம்.

ஜவுளிக் கடைகளுக்குள் நுழைந்து, வெளியே வரும் ஆண்கள் மனசுக்குள் சொல்லிக் கொள்வார்கள், "இந்த உலகம் பெண்களுக்கானதுப்பா" ! என்று. அந்த அளவுக்கு பெண்களை வசீகரிக்கும் ஆடைகளால் கடைகள் குவிந்திருக்கும். ஆண் குழந்தையென்றால் ஒரு டவுசர், ஒரு சட்டை என பத்து நிமிடத்தில் ஷாப்பிங் முடிந்து விடும். பெண் குழந்தைகளுக்கு, என்ன வாங்க வேண்டும் என்பதை முடிவு செய்யவே சில மணி நேரங்கள் ஆகும்.

பெண்கள் மிக வேகமாக ஒரு ஷாப்பிங்கை முடிக்கிறார் என்றால் அதற்கு ஒரே ஒரு காரணம் தான் இருக்க முடியும். ஷாப்பிங் செய்வது அவருக்கு வேண்டாத யாரோ ஒருவருக்கு !! பெரும்பாலும் மாமியாராய் இருக்கலாம் என்பது சர்வதேச சிந்தனை.



அப்படியே ஜவுளி கடையை விட்டு விலகி நகைக்கடைக்குப் போகும் போதும் அதே நிலமை தான். "எங்கேயிருந்துடா புடிக்கிறீங்க, இந்த டிசைனை" என்று பின் வரிசையில் நின்று கதறிக் கொண்டிருக்கும் ஆண்களின் குரல்களைத் தாண்டி பெண்கள் உற்சாகத்தின் உச்சியில் நகைகளைப் புரட்டிக் கொண்டிருப்பார்கள்.

தொடர்ச்சி 17 ம் பக்கம்....

ஸ்ரீ கருமாரி அம்மன் ஜோதிடம்
உலகப் புகழ்பெற்ற இந்திய ஜோதிடர்
ஆதிவாசி பண்டிதர் கே.சுவாமி







உறவுச்சிக்கல்கள் - தவறாகப் புரிந்துகொள்ளல் - நிதிச் சிக்கல்கள்
மன அழுத்தம் - காதல்பிரச்சினைகள் - வேலை தேடுதல் - குடும்பவாதங்கள்
குழந்தைகள் இல்லாத தம்பதிகள் - வாகனப் பொருத்தம்
தலை முறை தலைமுறையாக ஜோதிடக் கலையை
பயின்றுவரும் ஜோதிடவித்துவான்
பேசும் மொழி தமிழ் கிந்தி மற்றும் ஆங்கிலம்.
Tel: 015 14 333 54 52 / 0152 16 75 81 75
கிழமை 7 நாட்களும் 09.00 முதல்
20.00 மணிவரை வரலாம்.
Make an Appointment
Prapa Super Market
Hindenburg Straß 212
41061 Mönchengladbach

தமிழ் -யேர்மன்
Nietharshan Magendiran
Vereidigter Dolmetscher und übersetzer
Tamil-Deutsch
Möbil: + 49 176 311 328 73
Email: nietharshan.magendiran@gmail.com

AMMA's food
ammas-food.de
Amma's Food
Rheinische Straße 80A
44137 Dortmund
டோட்மூண்ட் நகரில் புதிய உதயம்
அம்மா'ஸ் உணவகம்
அறுசுவைக்கறிகளுடன் சோறும், புறியாணியும்
கொத்து றொட்டி ,இட்டலி , தோசை, வடை இடியப்பம்
இவற்றுடன் இன்னும் இன்னும் உங்கள் விருப்பறிந்து
தரக்காத்திருக்கின்றோம்!
உங்கள் இலத்தின் மங்கல வைபவங்கள் அனைத்திற்கும்
அம்மாவின் சமையலை நினைவூட்டும் உருசியுடன்
தயாரித்து பரிமாறுவோம்!
காலை 11.00 மணி முதல் மாலை 11.00 மணிவரை
செவ்வாய் கிழமை விடுமுறை!
அம்மாஸ் உணவகத்தின் சிறப்பு அம்சம்
சுவையைச் சுடச்சுடத் தருவதும் ஆகும்.



வெள்ளி சனி
நாட்களில் பாலப்பம்
Tel:0231 33 89 86 91
Fax:0231 33 89 86 93








# இந்த உலகம் பெண்களுக்கானதா?

**ஹிட்லரின் வாளுக்கு இருக்கும் மரியாதையை விட மோனலிசாவின் புன்னகைக்கு அதிக மரியாதை உண்டு. வலிமைகளை விட மென்மைகளே பூமியை அழகுபடுத்துகின்றன. வலிமைகளை விட மென்மைகளே வாழ்க்கையை அர்த்தப்படுத்துகின்றன. அதனால் தான் பெண்களை மையமாய் வைத்து உலகம் பயணிக்கிறது.**

ஒரு ஆண் குதூகலமாய் ஒரு நகையை தேர்வு செய்து கொண்டிருக்கிறார் எனில் இரண்டு காரணங்கள் இருக்கலாம். ஒன்று, அவருடைய காதலிக்காய் வாங்குகிறார். அல்லது சின்ன மகளுக்காய் வாங்குகிறார். இதைத் தவிர்த்தவைகளில் ஆண்களின் உற்சாகம் குதிரைக் கொம்பு தான்.

இன்னும் சொல்லப் போனால் இந்த வர்த்தக உலகமே பெண்களை மையமாக வைத்துத் தான் இயங்குகிறது. விளம்பரங்களில் போலியாய்ச் சிரிக்கும் நடிகைகள் முதல், கிராபிக்ஸ் கலரில் பற்களைக் காட்டும் பெண்கள் வரை முழுக்க முழுக்க பெண்கள் தான். வேறு வழியில்லாமல் தலைகாட்டும் ஆண்களைச் சுற்றியும், நான்கைந்து பெண்கள் இருப்பார்கள் என்பது எழுதப்படாத விதி.

உண்மையில் பெண்கள் தான் உலகை அழகாக்குகிறார்கள். பெண்களற்ற வாழ்க்கையை நினைத்துப் பார்க்க முடிவதில்லை. சிக்ஸ் பேக்ஸ் வைக்கும் ஆண்களிடம், நாளை முதல் உலகில் பெண்களே இல்லை என்றால் ஜிம்மை இழுத்து மூடிவிட்டு கிளம்பி விடுவார்கள். சங்க காலம் முதல் இந்த காலம் வரை பெண்களின் இதயக் கதவுக்குள் இளைப்பாறவே ஆண்கள் பல்வேறு செயல்களில் ஈடுபடுகின்றனர்.

பாறை எவ்வளவு தான் வலிமையாய் இருந்தாலும் ஒரு ரோஜா மலரைப் போல அது மனதை வசீகரிப்பதில்லை. ஒரு மெல்லிய தென்றலைப் போல ஒரு ஃபேன் காற்று வருடுவதில்லை. ஒரு சாரல் மழையைப் போல ஷவர் நீர் சிலிர்க்க வைப்பதில்லை. எனவே தான் அத்தனை மென்மை விஷயங்களையும் பெண்களை வர்ணிப்பதற்காய் கவிஞர்கள் குத்தகைக்கு எடுத்து விட்டார்கள்.
ஏவாளைக் கடவுள் படைத்த நிமிடம் முதல் உலகம் பெண்களுக்கானதாய் உருமாறிவிட்டது. அதனால் தான் பூமித் தாய் என்கிறோம். கடல் அன்னை என்கிறோம், கங்கை, யமுனை என பெண்களின் பெயர்களைத் தேடித் தேடி நதிகளுக்கு வைக்கிறோம். உலகின் எல்லா இடங்களிலும் பெண்களின் இருப்பு தொடர்ந்து கொண்டே இருக்கிறது.

ஹிட்லரின் வாளுக்கு இருக்கும் மரியாதையை விட மோனலிசாவின் புன்னகைக்கு அதிக மரியாதை உண்டு. வலிமைகளை விட மென்மைகளே பூமியை அழகுபடுத்துகின்றன. வலிமைகளை விட மென்மைகளே வாழ்க்கையை அர்த்தப்படுத்துகின்றன. அதனால் தான் பெண்களை மையமாய் வைத்து உலகம் பயணிக்கிறது.

பெண் குழந்தைகள் இல்லாத வீடுகளில் ஒரு மிகப்பெரிய வெறுமை ஒளிந்திருப்பதையும், பெண்குழந்தைகள் அதிகம் இருக்கும் வீடுகள் எப்போதுமே ஆனந்தத்தின் இருப்பிடமாய் இருப்பதையும் அனுபவஸ்தர்கள் சட்டென ஒத்துக் கொள்வார்கள்.

பெண்களின் ஆனந்தமான வாழ்க்கையில் தான் குடும்பங்களின் நிம்மதி அடங்கியிருக்கிறது. குடும்பங்களின் நிம்மதி, சமூகத்தை மென்மையாக்கும். சமூகத்தின் மென்மை தேசத்தை நேசமாக்கும்.
எனவே தான் பெண்களை ரசிக்கும் சமூகத்தை விட, பெண்களை மதிக்கும் சமூகம் அவசியமாகிறது.

பெண்களை அடிமை செய்யும் சமூகத்தை விட, பெண்களை அன்பு செய்யும் சமூகம் அவசியமாகிறது.
குடும்பத்தில் பெண்களுக்கு வழங்கப்படும் அன்பில் தான் பெண்களின் வாழ்வின் அஸ்திவாரம் கட்டியெழுப்பப்படுகிறது. பெண்களை உளமார நேசிக்கும் ஒரு சமூகத்தில், பெண்விடுதலைக் கோஷங்களுக்கு அவசியமே இல்லாமல் போய்விடுகிறது.

பெண்கள் இலக்கியங்களை செழுமையடையச் செய்திருக்கிறார்கள், குடும்பங்களை மலரச் செய்திருக்கிறார்கள். பெண்களுக்காய் நாம் என்ன செய்திருக்கிறோம் எனும் கேள்வி அவசியமாகிறது.

ஜவுளிக் கடைகளிலும், நகைக்கடைகளிலும் பெண்களுக்கான சந்தோசம் அடங்கியிருப்பதாய் நினைக்கும் ஆண்களின் சிந்தனை பிரம்மாண்டத் தவறு. பெண்களின் மகிழ்ச்சி அவர்களைப் புரிந்து கொள்வதிலும், அன்பு செய்வதிலும், செவிமடுப்பதிலும் தான் அடங்கியிருக்கிறது.

அத்தகைய சூழல் அமையும் போது மீண்டும் ஒருமுறை சொல்லிக் கொள்ளலாம் ”பெண் இன்றி அமையாது உலகு !”

RKL IMMO .de IMMOBILIEN & BAUFINANZIERUNG



Sinnadurai.Kiritharan

Umsatzsteuer ID.-Nr. DE186406298 | Berufserlaubnis erteilt am 08.01.2002
Sinnadurai Kiritharan|Tel. 05723-914519| www.rklimmo.de|info@rklimmo.de

Baufinanzierung / வீடு வாங்குவதற்க்கு தேவையான கடன்கள்:100% Free service
Umfinanzierung / வீடுக்கடனை எம்மிடம் மாற்றுதல் 100% Free service
Ratenkredit / தனிநபர் கடன் 100% Free service
Sonderfinanzierung / பலவிதமான கடன் வசதிகள்
Immobilien / வீடு விற்க இல்லையேல் வாங்குவதற்கான ஒழுங்குகள்
Full Service / முழுமையான சேவை


**நம்பிக்கை! உத்தரவாதம்!! 15 வருட அனுபவம்!!!**
மேலதிகவிபரங்களிட்கு **Tel. 05723-914519** or www.rklimmo.de
or www.lankasri.com



# வெற்றிமணி எழுத்தாளர் சேவியர் எழுதிய இயேசு வரலாறு நூல்

## மத அடையாளத்தைத் தாண்டி நிலைபெறுகிறது






இயேசுவைத் தெரியாதவர்கள் மிகக் குறைவு. சிலருக்கு அவர் கடவுள், சிலருக்கு அவர் தீர்க்கத்தரிசி, சிலருக்கு மனிதநேயக் கருத்துகளைச் சொன்ன மகான், சிலருக்கு தத்துவ ஞானி என இயேசுவை அவரவர் விருப்பத்துக்கு ஏற்ப புரிந்து கொள்கின்றனர். ஏற்றுக் கொள்கின்றனர். கிறிஸ்தவர்களை வெறுப்பவர்களும், இயேசுவை வெறுப்பதில்லை என்பது தான் நிஜம்.

அந்த இயேசுவின் வாழ்க்கை எப்படி இருந்தது ? அவர் பிறந்தது முதல் இறந்து உயிர்த்தது வரை நடந்த விஷயங்கள் என்னென்ன என்பதை ஒரு நாவலுக்குரிய விறுவிறுப்புடன் வாசகர்களுக்கு இந்த நூல் அறிமுகம் செய்து வைக்கிறது

மிகைப்படுத்தல் ஏதும் இல்லாமல், வரலாற்றின் பின்னணியில் இயேசுவின் வாழ்க்கையை பதிவு செய்திருப்பதில் இந்த நூல் சிறப்புக் கவனம் பெறுகிறது. இயேசுவின் வாழ்க்கையை கிறிஸ்தவக் கண்ணோட்டத்தில் பதிவு செய்யாமல் வரலாற்று நாயகர் எனும் பார்வையில் பதிவு செய்திருப்பதால் இது மத அடையாளத்தைத் தாண்டி நிலைபெறுகிறது.

இயேசுவின் போதனைகள், அவர் செய்த புதுமைகள், அவர் சொன்ன உவமைக் கதைகள் போன்றவை இந்த நூலில் மிகவும் நேர்த்தியாகப் பதிவு செய்யப்பட்டுள்ளன. கூடவே அவரைச் சுற்றிப் பின்னப்பட்ட அரசியல் வலை, மதவாதிகளின் சதி போன்ற அனைத்தும் பரபரப்புடன் விவரிக்கப்பட்டுள்ளன.

இயேசுவைப் பற்றி முழுமையாக அறிந்து கொள்ள விரும்புபவர்களுக்கு இந்த நூல் ஒரு வரப்பிரசாதம். இதை நமது வெற்றிமணியின் எழுத்தாளர் சேவியர் எழுதியிருக்கிறார்.

மதங்களுக்கு அப்பால் மனங்களுடன் உறவாடும் சேவியர் தன் கருத்தை நேயத்தால் மட்டுமே கட்டிப்போடும் வல்லமை மிக்கவர். பிறமதங்களையும் மதிக்கும் நற்குணம் கொண்டவர்.

-கடவுள்- என்று அவர் எழுதினால் அது அனைத்து மதங்களும் காணும் கடவுளை கண்முன் நிறுத்தும் மந்திரச் சொல்லாக அமையும்.

இப்பேற்பட்ட ஒரு எழுத்தாளனின் இயேசு வரலாறு நூல் வெளியிடும் பேறு நீர் வெளியீட்டகத்திற்கு கிட்டியுள்ளது. (thozhamai veliyeedu, thozhamaiveliyeedu@gmail.com, இந்த நூலை வெளியிட்டுள்ளது.

**இலக்கிய வானில் சிறந்து ஓங்க வெற்றிமணி வாழ்த்துகின்றது.**

## பிரபாகரனுக்கு பயந்து கொழும்பில் பாதாள சொகுசு மாளிகை” அமைத்தேன்!

**முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்சா**





கொழும்பு: தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத்தின் விமான தாக்குதல்களுக்கு அஞ்சி கொழும்பில் உள்ள ஜனாதிபதி மாளிகையில் சொகுசு பதுங்கு குழி அமைத்ததாக அந்நாட்டின் முன்னாள் அதிபர் மகிந்த ராஜபக்சே கூறியுள்ளார். கொழும்பில் உள்ள ஜனாதிபதி மாளிகையில் ரகசியமாக ஒரு பதுங்கு குழி இருப்பது கண்டுபிடிக்கப்பட்டது. ராஜபக்சே ஆட்சிக் காலத்தில் அமைக்கப்பட்ட இந்த பதுங்கு குழியும் கூட ஒரு சொகுசு மாளிகையாகத்தான் இருந்ததும் அம்பலமானது.

இந்த பாதாள சொகுசு மாளிகைக்குள் நுழைவதற்கு ரகசிய கோட்வேர்டு கொடுக்கப்பட்டுள்ளது. அங்கிருந்து வெளியே வருவதற்கும் இதேபோல் கோட்வேர்டு இருக்கிறதாம். பதுங்கு குழி என்று சொல்லப்பட்டாலும் கூட அது முழுவதும் சொகுசாக வாழ்வதற்கு ஏற்ப வடிவமைக்கப்பட்டுள்ளது. இது குறித்து விளக்கம் அளித்துள்ள மகிந்த ராஜபக்சே, இலங்கை ராணுவ தாக்குதல்களில் இருந்து தப்பிக்க விடுதலைப் புலிகளின் தலைவர் பிரபாகரன் பதுங்கி குழி அமைத்திருந்தார்.
அதேபோல் விடுதலைப் புலிகள் விமானங்கள் மூலம் தாக்குதல்கள் நடத்தியதால்தான் கொழும்பு ஜனாதிபதி மாளிகையில் பதுங்கு குழி அமைக்கப்பட்டது.

ஒருவேளை ஜனாதிபதி மாளிகை தாக்கப்பட்டால் அந்த பதுங்கு குழியில் இருந்து ஜனாதிபதி மாளிகை செயல்படும் என்பதற்காகத்தான் கட்டப்பட்டது. இதில் ஒரு தவறுமே இல்லை என்று கூறியுள்ளார். பயத்தில் அமைத்தால் என்ன பாதுகாப்புக்கு அமைத்தால் என்ன பதுங்குவது பதுங்கவதுதானே!








# கலவரம் பல கண்ட மாகோ கந்தன்

## மாகோ ஸ்ரீ சிவசுப்ரமணிய சுவாமி கோவில்

குருணாகல் மாவட்டத்தின் மாகோ நகரில் உள்ள அரசினர் மத்திய பாடசாலைக்கு 1948ம் ஆண்டு ஆசிரியராக வந்தவர். யாழ்ப்பாணம் அளவெட்டியில் வசித்து வந்த உயர்திரு.க.ஆ.வேலுப்பிள்ளை. இவரது பெற்றோர் மாவிட்டபுரத்தை பிறப்பிடமாகக் கொண்ட சைவபோசன குடும்பத்தைச் சேர்ந்தவர்கள். மாவைக் கந்தனையே வழிபாடு செய்து வாழ்ந்தவர்கள். இவரும் தெய்வபக்தி மிக்கவராகையால் தீட்சைகள் பெற்று ஆசாரசீலராகவே வாழ்ந்து சமயத் தொண்டுகளிலே ஈடுபட்டுவந்தார்.

மாகோ நகரில் இந்துக்கள் வழிபாடு செய்ய ஒரு இந்துமதத் தலம் இல்லாததைப் பெரும் குறையாக உணர்ந்தார். “கோவில் இல்லா ஊரில் குடியிருக்க வேண்டாம்“என்பது முதுமொழி கோவில் இல்லா ஊரைவிட்டுப் போய் விடாமல் அவ்வூரிலேயே ஓர் கோவில் அமைக்க எண்ணம் கொண்டார்.
அக்கால கட்டத்தில் அங்கே யாழ்ப்பாணத் தமிழர்கள் பலர் பெரிய கடைகள் அமைத்து வியாபாரம் செய்து கொண்டிருந்தார்கள். அரசாங்க சேவையிலும் பல யாழ்ப்பாணத்து தமிழர்கள் சேவை செய்து வந்தனர். மாகோவைப் பிறப்பிடமாகக் கொண்ட தமிழ் இந்துக்களும் வசித்து வந்தனர்.
இருந்தாலும் தமிழ் இந்துக்களின் விஷேட தினங்கள் திருவிழாக்கள் என்பன நடைபெறச் சந்தர்ப்பங்கள் இல்லாததால் சமய அறிவு, இந்து கலாச்சாரம் என்பன மிகவும் குறைந்து காணப்பட்டது. இவ்வாசிரியர் ஆங்கிலம், கணிதம் (Mathematics) பூமிசாஸ்திரம் (Geographic) போன்ற பாடங்களை ஆங்கில மொழி மூலம் கற்பிக்க நியமிக்கப்பட்டவர். அதனை நிறைவாகச் செய்து கொண்டு சமயபாட நேரங்களில் தமிழ் மாணவர்களை ஒன்று சேர்த்து இந்து சமயபாடங்களை நடாத்தினார்.

பின்னர் தமிழ் மக்களையும் , மாணவர்களையும் ஒன்று சேர்த்து “மாகோ சைவ சேவா சங்கம் “ என்ற பெயரில் சங்கம் அமைத்து தான் தலைவராகவும், சைவரும் சமய நெறிகளில் மிகுந்த ஆர்வம் உள்ளவராகவும் இருந்து அரசாங்க சேவையில் இலிகதராகப் பணியாற்றிய திரு.செ.அரியரத்தினம் என்ற இளைஞர் காரியதரிசியாகவும், மேலும் பலர் அங்கத்தவர்களாகவும் செயற்பட்டு பஜனை, தேவார பாராயணம் சொல்லி சமயச் சொற்பொழிவு மூலம் அறிவு பெறச் செய்தார்கள்.
இதனை நடாத்துவதற்கு ஒரு நிரந்தர இடம் இல்லாத காரணத்தினால் இவ்வாசிரியர் அரசாங்கத்திடம் விண்ணப்பித்து எடுத்த முயற்சியின் பயனாக 1951ம் ஆண்டு கோவிலுக்கென 100 ஏக்கர் காணி உறுதி முடித்து அரசாங்கத்தினால் வழங்கப்பட்டது.
இதன்பின்னர் சிறிது தொகை நிதி சேர்த்து கிடுகு முதலியன வாங்கி காணியின் ஒரு மூலையைத் துப்பரவு செய்து அம்மரங்களையும் பயன்படுத்தி ஒரு கொட்டகை அமைத்து அதில் வேல் ஒன்றையும் பிரதிஷ்டை செய்து வழிபாடு செய்து வந்தனர். அங்கு திரு.வேலுப்பிள்ளை ஆசிரியரே பூசையும் செய்து வந்தார்.
சில சிங்கள மக்களும் “கத்தறகம தேவாலே“ என்று வந்து வழிபடத் தொடங்கினர். முறையான கட்டிடம் கட்ட எண்ணிய ஆசிரியர் வெளியூர்களிலும் சென்று நிதி சேகரித்து கட்டிடம் ஸ்தாபிக்கப்பட்டு வேல் ஒன்று பிரதிஷ்டை செய்யப்பட்டுக் கும்பாபிஷேகம் நடாத்தப்பட்டது.

அதன் பின்னர் யாழ்ப்பாணத்தில் இருந்து குரு ஒருவரை வரவழைத்து பூசைகள் நடைபெற்றது. கோவிலுக்கென கிணறு வெட்டுவித்தார். அந்த அயலில் உள்ள கிணறுகளின் நீர் உப்புத் தன்மையானது. முருகனின் அருளால் இந்தக் கிணற்று நீர் சுவையானது சிறப்பானதுமாக அமைந்தது. அவ்வூர் மககள் இன்றும் இக்கிணற்றில் இருந்தே குடிநீர் எடுத்துச் செல்கிறார்கள்.

சிறப்பாக நடைபெற்று வந்த காலகட்டத்தில் 1958ல் இனக்கலவரம் ஏற்பட்டது. அதன் காரணமாக ஆசிரியர் குரு முதலியவர்களை பெரும்பான்மையினரில் சிலரே (முருகன் திருவருளினால்) வவுனியா வரை பாதுகாப்பாகக் கொண்டு சேர்த்தனர். ஆலயத்திற்குச் சேதம் விளைவிக்கப்பட்டது. அக்கோவில் வளவினுள் ஓர் அரவம் உலாவுவது பலர் கண்டுள்ளனர். ஆலயத்தைச் சேதப்படுத்தியவர் சில காலத்தின் பின்பு பாம்பு தீண்டி இறந்ததாக அவ்வூர் மக்கள் கூறுவார்கள்.


அதனால் பெரும்பான்யினருக்கு பயம் பக்தி நம்பிக்கை ஏற்பட்டது.
இனக்கலவரம் நின்ற பின்னர் ஆசிரியர் அவர்கள் திரும்ப வந்து அப்பாடசாலையில் அதிபர் பதவி பெற்று கடமையாற்றி வந்தார். மீண்டும் ஆலயத்தைப் புனரமைத்து பழையபடி பூஜைகள், திருவிழாக்கள் என்பன நடைபெற்று வந்தன. திருவிழாவின் மூன்றாம் நாள் ஆலய வாசலிலே 12 அடி நீளம் 4 அடி அகலத்திற்கு தீமூட்டி அணைத்து அனலாக்கி தீமிதிப்பு நடைபெறுவது வழக்கம்.

முருகனுக்கு வேண்டுதல் செய்து நோய் துன்பங்களிலிருந்து விடுதலை பெற்ற கூடுதலான பெரும்பான்மையின மக்களும் தீமிதிக்கிறார்கள். தூக்குக் காவடியும் எடுக்கிறார்கள். அதன் பின்னர் சுவாமி வீதியுலா புறப்பட்டு வருவார். அதற்கென மயில் வாகனமொன்றும் ஆசிரியர் யாழ்பாணத்திலிருந்து கொண்டு வந்துள்ளார். சுவாமி கோவிலில் இருந்து புறப்பட்டு இடது புறமாக அரசாங்க மில் ஒன்றும் நீதிமன்றமும் இருக்கும் இடம் வரை சென்று திரும்பி பிரதான வீதியில் வந்து இடப்புறமாக பாடசாலை வரை சென்று திரும்பி நகரைக் கடந்து வைத்தியசாலை வரை சென்று திரும்ப விடியல் ஆகிவிடும்.
ஊர்வலத்தில் நாதஸ்வரக் கலைஞர்கள் கண்டிய நடன வாத்தியக் குழுவினர், காவடிகள், கரகங்கள், வாண வேடிக்கைகள் எனப்பல நிகழ்ச்சிகள் இடம்பெறும். பெருந்தொகையான மக்கள் அதில் கலந்து கொள்வார்கள்.

தொடர்ச்சி 20 ம் பக்கம்

LOTUS TRAVELS
இலங்கை இந்தியப் பயணங்களுக்கான
ஒழுங்குகள் செய்து தருக்கின்றோம்.
உங்களுக்காக
ஆயுள்வேத ஆரோக்கியம்
உங்கள் விருப்புக்கேற்ற சுற்றுலா
ஆங்கிலம் அல்லது யேர்மன் மொழிகளில் பயண ஏற்பாடுகள்
மலிவான தரமான விடுதிகள்
படகுவீடு சுற்றுலா
House Boat Tour
கேரளம்
அனைத்து நாடுகளுக்குமான விமானச்சீட்டுக்களை
குறைந்தவிலையில் பெற்று பயனடையுங்கள்.
உங்கள் சுற்றுலா சிறப்பாகவும் முழுமையாகவும்
அமைய தரமான சேவையை வழங்குகின்றோம்.
இலங்கை
Email: lotustravels@t-online.de
Tel.: +49 202 2831415, Fax: +49 202 2821416
www.lotustravels.de
www.facebook.de\lotustravels
Hochstr.26, 42105 Wuppertal





Akchaya Digital Photography& Decoration
Weddings,Puberty ceremony.Reception,Birthday,Aranketam,Registration
உங்கள் திருமணநாள் பிறந்தநாள்,மற்றும் ஏனைய நிகழ்வுகளுக்கும்
மண்டபம் மணவறை சோடினை,நாதஸ்வரம் பூமாலைகள் கேக் சிற்றுண்டி
குடிபானங்கள் உணவுவகைகள்,மேக்கப் வாகன ஒழுங்கு மற்றும்
ஐயர், அனைத்து தேவைகளையும் செய்து தருகின்றோம்.
Contakt:E.Akilan. 02641 91 68 98 Mobi: 0163 39 40 474







13ம் பக்கத் தொடர்ச்சி ....

## வர்ணத்தில் பரத வண்ணம் கண்ட



அவையைக் கலங்கவைத்த நிகழ்வு

உதிரத்தின் நினைவு

செல்வி நிஷா சிவகுலேந்திரன்.

வாழ்த்துரைகளை நாட்டியவித்தகி திருமதி.விக்னேஸ்வரி பத்மநாதன், கிரிபீல்ட் தமிழாலய நிர்வாகி, கிரிபீல்ட் K .T S பொறுப்பாளர், .கோலன் , திரு.ரட்டர், நாகபூஷணி அம்மன் ஆலய பொறுப்பாளர், இசை ஆசிரியர் தர்மினி தில்லைநாதன், கடம் வித்துவான் விநாயகம் ராம் ஷங்கர் மற்றும் கிரிபில் தமிழாலய சார்பாக திருமதி உதயதேவி யஸ்ரின் ஆகியோர் செல்வி.நிஷாவை மனதார வாழ்த்தினர்.

அரங்கேற்ற நிகழ்வை தமிழில் அழகுற தொகுத்து வழங்கியவர், தமிழவேள் நயினை விஜயன் அவர்கள். பரத நாட்டிய அரங்கேற்றத்தை ஒரே திசையில் பயணிக்கவைத்து, நேரத்தை பொன்னாக மதித்து,சுருக்மான தன் அறிவிப்பால் மக்கள் மனங்களில் அமர்ந்து கொண்டார். காலத்திற்கு ஏற்ப மாற்றம் தேவை. இதனை நன்கு புரிந்துகொண்டு பணியாற்றிய நயினை விஜயனுக்கு ஒரு சபாஷ்!

யேர்மன் மொழியில் சிபோஜி சிவகுமாரன் (திரைத்துறை தொழில் நுட்பத்தில் டிப்ளோமா ) சிறப்பாகத் தொகுத்தளித்தார். கணீர் என்ற குரல், பரதத்திற்கு சலங்கை ஒலிபோல் அமைந்திருந்தது.

வெற்றிமணி பத்திரிகை செல்வி நிஷா சிவகுலேந்திரனின் பரதக்கலையின் சிறப்பு அறிந்து மகிழ்ந்து வெற்றிமணி வளர்கலை விருது வழங்கிக் கௌரவித்தது.

குரு ஆடற்கலைமணி ரெஜினி சத்தியகுமார் அவர்கள் நிஷாவுக்கு நாட்டியசுடரொளி, என்ற பட்டத்தை வழங்கி கௌரவித்தார்.

அரங்கேற்ற நிகழ்விற்கு வருகை தந்திருந்த கற்றிங்கன் வரசித்திவிநாயகர் ஆலயசபை முன்னாள் தலைவர் இறைபணிக்கினியார் நா.இரவீந்திரன் அவர்களிடம் அரங்கேற்றச் செல்வி நிஷா சிவகுலேந்திரன் ஆசி பெற்றார்

.

தனது அரங்கேற்றம் சிறப்புற உதவிய அனைவருக்கும் செல்வி நிஷா சிவகுலேந்திரன் நன்றி தெரிவித்துக்கொண்டார்.

19ம் பக்க தொடர்ச்சி....

## மாகோ ஸ்ரீ சிவசுப்ரமணிய சுவாமி கோவில்

வீதியோரங்களில் இனமத பேதமின்றி வியாபார நிலையங்கள் அண்டை வீட்டு மக்கள் தோரணங்கள் வாழை மரங்கள் போன்றவற்றால் அலங்கரித்து நிறைகுடம் தெய்வேத்தியம் வைத்து சுவாமி எழுந்தருளும் போது அர்ச்சனை செய்வித்து மக்களுக்குப் பிரசாதம் வழங்குவார்கள்.

1963ம் ஆண்டில் இவ்வாசிரியர் தனது சேவைக்காலம் இன்னும் இரண்டே ஆண்டுகள் உள்ளன ஆகையால் தான் கல்வி கற்றதும் முதலில் ஆசிரியப் பதவியில் சேர்ந்ததுமான (அளவெட்டி ஆங்கில கலவன் பாடசாலை தற்போது யாழ் .'.அருணோதயக் கல்லூரியில்) சேவை செய்ய விரும்பி இடமாற்றம் பெற்று அளவெட்டிக்குச் சென்றார். அதன்பின்பும் வருடந்தோறும் திருவிழாக் காலங்களில் தவறாது வந்து வேண்டியன செய்வது வழக்கம்.

1983ல் திருவிழா நடைபெறவேண்டிய காலத்திற்கு முன் இனக்கலவரம் மீண்டும் ஏற்பட்டது. அத்தோடு அங்கிருந்த தமிழ் யாழ்ப்பாண வர்த்தகர்களில் பெரும்பாலானோர் நிரந்தரமாக வெளியேறி விட்டனர். அரச சேவை யிலிருந்தோரும் இடமாற்றலாகிச் சென்றனர். பூசகரும் போய் விட்டார். முன்னைய இனக்கலவரத்தின் போது கோவிலை உடைத்தவர் அவல மரணமெய்தியதால் ஏற்பட்ட பயம் காரணமாக கோவிலை எவரும் தாக்கவில்லை. ஆயினும் கோவிலை நிர்வகிக்கவோ, பூசை செய்யவோ எவரும் முன்வரவில்லை. நாட்டு நிலமையும் வயோதிபமும் சேர்ந்து ஆசிரியர் அவர்களால் மாகோ நகருக்கு வரமுடியவில்லை.

1992ம் ஆண்டு புனருத்தாரண மகாகும்பாபிஷேகம் செய்தார்கள். 2010ம் ஆண்டு மீண்டும் ஆலயம் புனரமைக்கப்பட்டு வெகு விமர்சையாகக் கும்பாபிசேகம் நடைபெற்றது.

விழா நாட்களில் புத்த குருமார்,அயலில் உள்ளவர்கள், இஸ்லாமியர் சிலர், கிறிஸ்தவர்கள் பலர், பாராளுமன்ற உறுப்பினர்கள் என்போர் வருகை தருவார்கள்.இந்த ஆலயத்தை ஸ்தாபித்தவரான ஆசிரியர் உயர்திரு.ஆ.வேலுப்பிள்ளை அவர்கள் காலமாகிவிட்டார் எனத் தெரிகிறது அவருடைய ஆன்மா எல்லாம் வல்ல அந்த முருகன் பாதாரவிந்தத்தில் சாந்திபெறுவதாக.

மாகோ ஸ்ரீ சிவசுப்ரமணிய சுவாமி அடியவன்

மாகோ குருணாகல மாவட்டம்







## கதை சொல்ல ஓர் கதை...




# நான் இவ்வளவு நல்லவனா?

ஒரு ஆசிரியர் தன் வகுப்பு மாணவர்களிடம் வெற்றுத் தாள்களைக் கொடுத்து, ஒவ்வொருவரையும்,வகுப்பில் உள்ள மற்ற மாணவர்கள் அனைவரின் பெயரையும் அதில் எழுதச் சொன்னார்.ஒரு பெயருக்கும், அடுத்த பெயருக்கும் இடையே சிறிதுஇடைவெளியுடன் !

மாணவர்கள் எழுதி முடித்தவுடன், ஆசிரியர் சொல்கிறார் -“ஒவ்வொரு பெயருக்கும் எதிரே, அவர்களிடம் நீங்கள்காணும் உங்களுக்கு பிடித்த நல்ல விஷயம்ஒன்றைப்பற்றி எழுதுங்கள்.”

மாணவர்கள் ஒவ்வொருவரும், யோசித்து, தங்களுக்குதோன்றியதை எல்லாம் எழுதிக் கொடுத்தனர்.வாரக்கடைசி டீச்சர் ஒவ்வொரு மாணவனின் பெயரிலும் ஒரு தாள் தயார் செய்து, அதில் மற்ற மாணவர்கள்அவனைப்பற்றி எழுதியிருந்த உயர்வானவார்த்தைகளை வரிசையாகத் தொகுத்து எழுதி கீழே தன் கையெழுத்தையும் போட்டு,மாணவர்கள் ஒவ்வொருவராக அழைத்துஅவர்களின் பெயரிட்ட தாளைக் கொடுத்தார்.

மாணவர்கள் அவரவர் இடத்திற்கு சென்று அமர்ந்து படிக்கிறார்கள்.10 நிமிடங்கள் வகுப்பறையேசந்தோஷக்கடலில் மிதக்கிறது.“நான் இவ்வளவு சிறப்பானவனா..?என்னைப் பற்றி மற்றவர்கள் இவ்வளவு நல்லஅபிப்பிராயம் வைத்திருக்கிறார்களா ?”

அத்தனை மாணவர்களும் ஆனந்தத்தில் திளைக்கிறார்கள் !

அந்த பட்டியலில் குறிப்பிடப்பட்டுள்ளகுணாதிசயங்களை மேலும் மேலும்வளர்த்துக் கொள்ள முயற்சி செய்கிறார்கள்.

தன்னைப்பற்றி உயர்வாகச் சொன்னதற்காக, ஒவ்வொரு மாணவனுக்கும்,சக மாணவர்கள் மேல் அன்பு அதிகரிக்கிறது.
பல வருடங்கள் கழிகின்றன.அந்த வகுப்பில் படித்தமாணவன் ஒருவன் வளர்ந்த பிறகு ராணுவத்தில்சேர்கிறான். பிறகு போர் ஒன்றில் வீர சாகசம் புரிந்து,மரணம் அடைகிறான்.

அவன் உடல் ராணுவ மரியாதையுடன் சொந்த ஊர் கொண்டு வரப்படுகிறது.இறுதிச் சடங்கில்,கலந்து கொள்ள அந்த டீச்சரும் செல்கிறார். மிடுக்கான ராணுவ உடையில் -நாட்டின் தேசியக்கொடு போர்த்தப்பட்டு, சவப்பெட்டியிலும் கம்பீரத்துடன் காணப்பட்ட அந்த மாணவனைக் கண்டு பெருமிதத்துடன் கண் கலங்குகிறார்.

ஒவ்வொருவராக வரிசையில் வந்து இறுதி மரியாதைசெலுத்துகின்றனர். டீச்சர் கடைசியாகச் செல்கிறார்.பின்னர், பக்கத்திலேயே நிற்கிறார்.
உடலைத் தாங்கி வந்த, ராணுவ சக வீரர்கள்அருகிலேயே நின்றிருந்தனர்.ஒரு வீரர் கேட்கிறார் -”நீங்கள் சரவணனின் 10ஆம் வகுப்புடீச்சரா ?” என்று. டீச்சர் ஆம் என்று தலையசைக்கிறார்.

பின்னர் அந்த ராணுவ வீரன் சொல்கிறான் “டீச்சர் -எனக்கு உங்களைத் தெரியும். சரவணன் உங்களைப்பற்றிஎப்போதும் சொல்லிக்கொண்டே இருப்பான்”சடங்குகள் முடிந்த பின்னர், சரவணனின் பழைய வகுப்புத் தோழர்கள் அங்கு டீச்சருடன் ஒன்றாக நின்றிருந்தனர்.

அங்கு சரவணனின் தாயும் தந்தையும் வருகின்றனர்.அந்த சோகத்திலும் தந்தை டீச்சரிடம் கூறுகிறார் -“டீச்சர் நான் உங்களுக்கு ஒன்றைக் காட்ட வேண்டும்.

இது சரவணன் போரில் கொல்லப்பட்டபோது, அவனது பாக்கெட்டிலிருந்து இறுதியாக கண்டெடுக்கப்பட்டது”.அவர் காட்டியது, பெரிய பர்ஸ் ஒன்றில் பத்திரமாக -பல முறை மடிக்கப்பட்டு, மடிப்புகள் எல்லாம் டேப் போட்டு ஒட்டப்பட்டு பத்திரமாக பாதுகாக்கப்பட்ட ஒரு தாள்.
ஆமாம் பல வருடங்களுக்குமுன்னர் அந்த டீச்சர் சரவணனைப் பற்றிய நல்லகுணங்களை வரிசைப்படுத்தி தொகுத்து எழுதிக் கொடுத்திருந்த அதே காகிதம் தான் !கண்ணீர்ப் பெருக்குடன் சரவணனின் தாய் கூறுகிறார் -“ரொம்ப நன்றி டீச்சர் உங்கள் கடிதத்தை அவன்உயிரையும்விட மேலாக விரும்பினான்.



இத்தனை வருடங்களும் அதை அவ்வளவு பத்திரமாக பாதுகாத்து வந்தான்.அவனுக்கு வாழ்க்கையில் மிகுந்த தன்னம்பிக்கையும்,பிடிப்பும் ஏற்பட இந்த காகிதம் தான் உதவியது.”டீச்சரும் மற்ற மாணவர்களும் சரவணனை நினைத்துகதறி அழுகின்றனர்..,

ஆம்,என் இனிய நண்பர்களே.,இந்த வாழ்க்கைப் பாதை கரடு முரடானது.எங்கே துவங்கும் எப்படி இருக்கும் -எப்போது,எப்படி முடியும் ? யாருக்கும் தெரியாது. இருக்கின்ற காலத்தில் நம்முடன் இருப்பவர்களை அவர்களின் நல்ல இயல்புகளுக்காக நேசிப்போம்.

நல்லதும் கெட்டதும் கலந்தது தான் மனித குணம்.ஒருவர் விரும்பத்தகாத குணத்தைக் கொண்டிருந்தால்,நாம் அதை விரும்பவில்லை என்பதை எரிச்சல் காரணமாக,அநேகமாக உடனேயே வெளிப்படுத்தி விடுகிறோம்.ஆனால், ஒருவரிடம் உள்ள நற்பண்புகளை, குணங்களை -அநேகமாக நாம் வெளிப்படையாக பாராட்டத்தவறி விடுகிறோம்.
கூடாது என்றல்ல. அதன் அவசியம் நமக்குத்தெரிவதில்லை.

சாம்பாரில் சற்று உப்பு அதிகமாக இருந்தால் கூட உடனடியாகமனைவியிடம் அதைக்கூறும் கணவர்கள், அந்த சமையல்நன்றாக இருக்கும்போது பாராட்டுவது இல்லை ! பாராட்ட வேண்டும் என்று தோன்றுவதில்லை ! இந்த உலகில் அனைத்து உயிர்களுமே, பாராட்டுதலை எதிர்பார்க்கிறது. கிடைத்தால் சந்தோஷப்படுகிறது !நீங்களோ, நானோ -யாருமே அதற்கு விதிவிலக்கல்ல. வெளிப்படையான பாராட்டுதல் -அவர்களிடையே தன்னம்பிக்கையை கொடுக்கும்..



# உலகில் இரண்டு விதமான மனப்பான்மைகள் உள்ளன




1. உயர்வு மனப்பான்மை
2 . தாழ்வு மனப்பான்மை

நீங்கள் ஒப்பிட்டுப் பார்க்காத வரை
எப்படித் தாழ்வானவராக இருக்க முடியும்?
எப்படி உயர்வானவராக இருக்க முடியும்.

இவ்வுலகில் நீங்கள் மட்டும் இருந்தால்
உங்களை நீங்கள் யாருடன் ஒப்பிட முடியும்?
எப்படி நீங்கள் தாழ்ந்தவராக இருக்க முடியுமா ?
இல்லை உயர்ந்தவராகத் தான் இருக்க முடியுமா ?
நீங்கள் நீங்களாக தான் இருக்க முடியும்.

தனியே இருக்கும்போது
நீங்கள் உயர்ந்தவரும் அல்ல“தாழ்ந்தவரும் அல்ல.

இதுதான் உயிரின் (ஆன்மாவின்) உயர்ந்த தன்மை.

அது யாருடனும்
ஒப்பிடுவதில்லை.
நீங்கள் உங்களை
யாருடனும் எதற்கும்
ஒப்பிட வேண்டாம்.

நீங்கள் தனித்தன்மை
வாய்ந்தவர்.

நீங்கள் சிறப்பானவர்.

ஓஷோ

## நல்லூரில் கச்சான் விலை உயர்ந்தது





நல்லூரில் ஒரு சுண்டு கச்சான் (சிறிய ரின்பால் பேணி) அறுபது ருபாவாக விலை உயர்த்தப்பட்டுள்ளது. கச்சான் கடைக்கான வாடகை உயர்த்தப் பட்டு சாதாரண கடைக்கு இருபத்தைந்து நாட்களுக்கும் நாற்பத்தையாயிரம் ரூபா அளவில் வரி அறவிடப் படுவதால் அதற்கு ஈடு கொடுக்கும் வகையில் கச்சான் அறுபது ருபாவுக்கு விற்கப்படுகின்றது. வரி யாருக்கு என்று ஒரு விவஸ்தை கிடையாதா? இது திருவிழாக் காலத்தில் நடந்த திருவிழா.




காட்டேறி அம்மன்
ஜோதிட நிலையம்




பத்திரகாளி அம்மன் பூஜாரி
சுவாமி நாராயணன்
கேரளாவில் இருந்து வந்திருக்கின்றார்
Face Reading
எந்தப் பிரச்சினையாக இருந்தாலும் பரிகாரம் செய்து தரப்படும்.
வீசாப் பிரச்சினை, பணப் பிரச்சினை, வேலைப் பிரச்சினை,
கணவன்/மனைவிப் பிரச்சினை, குழந்தையீன்மை மற்றும் பல...



பேசும் மொழிகள்: தமிழ், ஆங்கிலம்
கிழமை 7 நாட்களும் 09:00 முதல் 20:00 மணி வரை வரலாம்
+49(0)15213504803
+49(0)15145849222
Heinrichstr. 26, 44137
Dortmund - Germany







# ஒவ்வொரு பூக்களும் ஒவ்வொரு மாதிரி

என் நந்த வனத்தில் பூத்து வாசம் பரப்பிய பூக்களின் மீது நான் வண்ணத்து பூச்சியாய் உட்க்காந்த வசந்த காலங்களை ஞாபகத்தில் கொண்டு வருகின்றேன்.

நினைவு தெரியாத என் சின்னப்பருவத்தில் முதல் முதலில் என்னையே என்னோடு பேச வைத்த என் முதல் பூ முல்லை பூ .

முல்லை பூவின் முதல் அறிமுகம் தண்ணீர் கிணற்றடி...

நான்கு சந்திகள் கடந்தாலும் முல்லை பூ என்னை ஒரு போதும் திரும்பியே பார்க்காது.
ஆனால் வீட்டுக்கு போய் வாசலில் நின்று எனக்காக புன்னகைகளை பூக்கும்.

நான் பார்த்த பின்பே முல்லை பூ பூப்பெய்தியதாக கேள்விப்பட்டேன் - சொல்ல வெட்கமாகவே இருக்கிறது.
மொட்டைத்தான் பூ பூ என்று நான் இதுவரை புலம்பியிருக்கிறேன்.

முல்லைப்பூவுக்கு பின்னால் நான்தான் போய்கொண்டிருந்தேன் என்று உண்மையை சொன்னாலும்... முல்லைப்பூ ஒரு பட்டாம் பூச்சிக்கு பின்னால் போய் கொண்டிருந்ததை... பொய்யாக்கமாட்டேன்.

முல்லைப் பூ எனக்கு இல்லை என்றான பிறகும் அதன் வாசனை என்னை விட்டு போகவில்லை - நான்தான் வாடியிருந்தேன.

"ஒவ்வொரு பூக்களும் ஒவ்வொரு மாதிரி"

முல்லை பூவின் வாசனையோடு மட்டும் வாழ்ந்து கொண்டிருந்த எனக்கு மல்லிகைப் பூவின் அறிமுகம்கிடைத்தது. எனது ஊர் விநாயகர் கோயில் தேர்திருவிழாவில்...

மல்லிகைப் பூவின் முதல் சந்திப்பும் பாவாடை தாவணிதான்.

என் மல்லிகை பூவுக்கும் என் முல்லை பூவுக்கும் ஒரு ஒற்றுமை இருக்கிறது. இரண்டுக்குமே தெத்திப்பல்.

ஆச்சரியமாயும் ஒன்று இருந்தது.. மல்லிகை பூவை முதல் முதல் பார்க்கையில்
தலையில் முல்லைப் பூ வைத்திருந்தது.

அதிர்சியாயும் ஒன்று இருந்தது... மல்லிகை பூவே என்னை துரத்த ஆரம்பித்தது...

விரத்தியாயும் ஒன்று இருந்தது.... மல்லிகை பூவை ஒரு பட்டாம் பூச்சி துரத்திக் கொண்டிருந்தது..



**நெடுந்தீவு முகிலன்**

மல்லிகை பூவை துரத்தி கொண்டிருந்த பட்டாம் பூச்சி
என்னை போல் இல்லேங்க...

என்னையே துரத்தி கொண்டிருந்த மல்லிகை பூவைவையே
பெயர் சொல்ல விரும்பாத அந்த பட்டாம் பூச்சி
கௌவி பறந்தது.

முல்லை பூவையும் தத்துக்கொடுத்து
மல்லிகை பூவையும் தாரவாத்து
சோகத்தில் புதைந்து கிடக்கிறேன்.

வீட்டுக்காரர்கள் எனக்கு ஒரு
செவ்வந்திப் பூவை
சம்மந்தம் பேச கேட்க்கிறார்கள்

எப்படிங்க ஓகே சொல்றது...

பக்கத்து தெருவுக்கு புதிதாக
ஒரு றோயா பூ குடிவந்திருக்கையில்...

(யாவும் கற்ப்பனை)




**கார் போல**

நாட்டுக்குப் புதிதாக வந்த நண்பர் கார் வாங்க உதவும்படி கேட்டார். அவருடன் போகாத இடங்கள் இல்லை, பார்க்காத கார்கள் இல்லை. சிலதைப் பார்த்தார், பலதைத் தவிர்த்தார்.
"ஏன் ஒன்றுமே பிடிக்கவில்லை?" சலிப்புடன் நான்.
"எனக்குக் கார் போலக் கார் வேண்டும்" ஆர்வத்துடன் அவர்.
"அப்பிடி என்றால்?"

"சிறு வயதில் எப்படிக் கார் வரைந்தீர்கள்? அந்த வடிவத்தில் கார் வேண்டும்!"
திகைத்துப் போனேன். இந்த மனிதர் எந்த உலகத்தில் இருக்கின்றார்?



## Thushi -Deko

1989 முதல் இன்றுவரை தொடரும் எங்கள் சேவை!
உங்கள் தெரிவுகள் அனைத்தும் எங்கள் கையிருப்பில்.....

Christal mandapa Set round
Rada Krishna Stage
and Raja Gopuram

01

Elephant Stage

Thushiyanthan.
Thiruselvam

Tel:02305 - 85945 - 0176 608 108 13

Neuss நகரில் மளிகைப்பொருட்களுக்கு ஓர் சிறந்த ஸ்தாபனம்

## SP Markt

info@sp-gmbh.eu
www.sp-gmbh.eu

கடலுணவுப் பொருட்கள் மற்றும் உடன் இறச்சிகள்யாவும் சிறப்புவிலையில் கிடைக்கும்

இலத்திற்குத் தேவையான அனைத்து மளிகைப்பொருட்களும் மொத்தமாகவும் சில்லறையாகவும் பெற்றுக் கொள்ளலாம்

Sperberweg 14 a
41468 Neuss

Fax:02131-384 13-10
Tel: 02131-384 13-0 / 02131-384 13-15

## திருக்கணித ஜோதிடம்

ஜாதகக் குறிப்பு எழுதுதல்
விவாகப் பொருத்த நிச்சயம்
சுபமுகூர்த்தம் வைத்தல்
ஜோதிட ஆலோசனைகள்
திருமணம்
பூப்புனித நீராட்டு விழா
புண்ணியாகவாசனம்
சிரார்த்தம்
கடைத்திறப்பு விழா
கோயிற்கிரியைகள்
கிரகசாந்தி

சிவஸ்ரீ க.சபாநாதகுருக்கள்
Kreuzeskirchstr. 40
45127 Essen
Tel: 0201-652450

உங்கள் தாய் மொழியில்....

## HK Hammacher

வாகனச் சாரதி பயிற்சி நிலையம்

ஆங்கிலம், யேர்மன், பிரஞ், துருக்கி மொழிகளில் வகுப்புக்கள் உண்டு. பரீட்சைக்கு வரக்கூடிய வினாக்கள், கார் மற்றும் மோட்டோசைக்கிளிற்கும் சிறப்பாகத் தெரிவுசெய்துகற்பிக்கப்படும்.

தமிழில் தொடர்புகளுக்கு: 0172 57 35 454
HK Hammacher
Schleswiger Str .5
44145 Dortmund
0231 81 55 94
0173 56 46 651

MPU
ASF
ASP

இவர்களுக்கான சிறப்பு வகுப்புக்களும் உண்டு!

உங்கள் அனைத்துக் காப்புறுதிகளுக்கும் அதிக பணம் செலுத்துவதாக உணர்கின்றீர்களா?
உங்களுக்கு உகந்த காப்புறுதி எதுவென்று தெரிந்து அதை நான் உரிய முறையில் செய்துதரக்காத்திருக்கின்றேன்.
அழைக்க வேண்டிய தொலைபேசி இலக்கம்.

Thuvaragan Nesapalan
Telefon: 0202/5270-250
Mobil: 0171/6412008
www.rmb3.de
Düsseldorfer Str. 128
42115 Wuppertal

rmb³ VERSICHERUNGSKONZEPTE FINANZDIENSTLEISTUNGEN
rmb³ ist Partner der Gothaer

15 வது ஆண்டு நிறைவான சேவை

## Kaneen Electronics

Internet-sat,
Receiver,Camera-Alam
கருவிகள் மலிவு விலையில் பெற்று பயனடையுங்கள்

அனைத்து தொலைக்காட்சியில் உங்கள் விளம்பரங்கள் இடம்பெறவேண்டுமா!
மற்றும் உங்கள் கலைநிகழ்ச்சிகள் பெருவிழாக்கள் திருவிழாக்கள் ஒளிபரப்பவேண்டுமா!எம்மை நாடுங்கள்.
Tel: 02053 423 740 Fax: 2053 423 741
Mobil: 0172 2931266- info@ kaneenelectronics.de
www.kaneenelectronics.de
Schevenhoferweg-24
42111 Wuppertal

## Nirubagini Magendiran LL.M.

Vereidigte Dolmetscherin und Übersetzerin

Tamil- Deutsch
Deutsch- Tamil

மொழிபெயர்ப்பாளர்
தமிழ் – யேர்மன்
யேர்மன் – தமிழ்

Mobil: +49176-24012135
Email: nirumagendiran@hotmail.com

## Nimal வீடியோ அன் போட்டோ

Professional Video Movie

Full HD 1080

கலை விழாக்கள்...
உங்கள் இல்லத்தில் நிகழும் மங்கல நிகழ்வுகள் எதுவானாலும் மனதோடு நிற்க நமது ஒளிப்பதிவு கைகொடுக்கும்...
சிறந்த முறையில் உங்கள் மங்கல விழாக்களை வீடியோ மற்றும் புகைப்படம் எடுக்க எம்மை நாடுங்கள்
தொடர்புகளுக்கு: கபிலன்
Tel: 0152 33 83 29 55
Tel:01776794261

## Party Service

பல வருடங்களாக மக்களின் நன்மதிப்பைப் பெற்ற சமையல் கலை வல்லுனரின் கைவண்ணத்தில்

சைவ / அசைவ
உணவு வகைகள்
சிற்றுண்டி வகைகள்
பலகாரங்கள் ,பலகாரப்பை
போன்றவற்றைப்
பெற்றுக் கொள்ள நாடுங்கள்

உங்கள் மங்கல
வைபவங்களுக்கு
சுவை விருந்தளிக்க
எம்முடன்
தொடர்பு கொள்ளவும்

+49 176 91 49 4522

KS Services






# 2016 சித்திரை முதல் சொப்பிங் பாக்கின் விலை 20 சென்ஸ் ஆகிறது!

2016 சித்திரை முதல் சொப்பிங் பாக்கின் விலை 20 சென்ஸ் ஆகிறது.!

இந்த உலகம் மாசுபடுதலை தடுக்க உலகமே திரண்டு முன்வந்தாலும், உலகம் என்பதன் பொருள் குறிக்கும் மனிதன் மாறினால் அன்றி, மாசுபடுதலை தடுக்க அணுவும் முடியாது. இப்படி முடியாத பலகாரியத்தை சிங்கப்பூர் போன்ற சிறியநாடுகள் செய்து முடித்துள்ளன. அது எப்படி! சாத்தியமானது. சத்தியமாய் அது பணம்செய்யும் வேலைதான். அடிக்குமேல் அடியாக குற்றம் செய்பவர்களுக்கு தண்டம் போட்டால் எல்லாம் தானகச் சரிவரும்.

எப்படிச் சொல்லியும் பெரும்தெருக்களில் 160 Km வது தாண்டும் எமது வாகனம். போகும் வேகம் தெரியுமே அன்றிப், போக வேண்டிய வேகம் தெரிவதில்லை. அடுத்தடுத்து இரண்டு முறை பளிச் பளிச் என்று படம் எடுத்தால் போகும் வேகமும் குறையும், போகவேண்டிய வேகக்கட்டுப்பாடும் தெரியும். இங்கே காசுதான் கண்திறக்கவைத்தது. **supermarket** க்கு சென்று பொருள்வாங்க கையில் பாக் இல்லை என்றால், காருக்குள் சொப்பிங் பாக்கிருந்தாலும் கார் பாக்கில் சென்று எடுத்து வர, அலுப்பில், என்ன பத்து சென்ஸ்தானே என்று சொப்பிங் பாக்கை வேண்டிக் குவித்தால், பின் அவற்றை என்ன செய்வது. வீட்டில் லாச்சி முழுக்க நிரப்புவது. அல்லது இன்னும் தாயக நினைப்போடு இருந்தால், காறில் இருந்து கொண்டே நோட்டீஸ் போல் எறிவது. இது சில சமயம் பின்னால் வரும் வாகனத்தின் முன் கண்ணாடியிலும் விழும்.

இதனைப் புரிந்து கொண்டு குப்பை குப்பையாக பிளாட்ஸ்ரிக் **(plastic bags)** பாக்குகள் வாங்கி எறிவதை, நிறுத்த யேர்மனியில் 2016 ஆண்டு சித்திரை முதல் ஒரு சொப்பிங் பாக்கின் விலை 20 சென்ஸ் சாக உயர்கின்றது. தற்போது விலை 10 சென்ஸ் மட்டுமே. இனி 20 சென்ஸ் என்றதும், 20வீதம் என்றாலும் தேவை இல்லாமல் வாங்கும் கூட்டம் குறையும் என நம்பலாம். மற்றுமொன்று யேர்மனி பெரும் தெருகளில் அடுத்த ஆண்டு முதல் வேகச்சட்டம் அமுல் படுத்தப்படுகின்றுது

.லண்டனில் குறிப்பிட்ட சில தெருக்களில்தண்ணி அடித்தால் தண்டம் 500 பவுண்ஸ்

காசுதான் கடவுள்,அதுதான் பெரும் அதிகாரி அது நினைத்தால் ஒரு தனிஅரசையே நடத்த முடியும். இன்று பல இனமக்கள் வாழும் இங்கிலாந்து நாட்டில் லண்டன் நகரில் கவுன்ரியில் தெருக்களின் நீங்கள் ஊர்போல் தண்ணி அடிக்கக்கூடாது. அதாவது மதுபானம் அருந்தக்கூடாது.அதிவேகம் 30 தான் என்று இலக்கம் பொறித்திருக்கும் பகுதியில், அந்த போட்டுக்கு மேலே குடித்தல் ஆகாது என்று பொறித்து இருகும். அதனையும் மீறி குடித்தால் அபராதம் 500 பவுண் கட்டவேண்டும். அப்படிக் கட்டினால் அந்தக் கவலையை மறக்க மீண்டும் குடிக்காவிட்டால் சரிதான








## நீங்கள் எல்லாப் பெண்களையும் கட்டிப்பிடித்து நடிக்கலாமா? அதற்கு அன்று

### ஜெயசங்கர் சொன் பதில்...

“ஏன் சார், படத்தில் எல்லாப் பெண்களையும் கட்டிப்பிடித்து நடிக்கும் போது உங்களுக்கு என்ன உணர்வுகள் வரும்?”

“நீங்க பாங்குக்குப் போயிருக்கீங்களா? அங்கே கேஷியரைப் பார்த்திருக்கீங்களா? அவருக்கு என்ன சம்பளம் இருக்கும் என்று நினைக்கிறீங்கள். அதைப் போல 100 மடங்கு பணத்தை ஒவ்வொரு நாளும் அவர் கையாள்வார். ஆனால் எப்பொழுதுமே அதைத் தன் பணம் என்று நினைக்கமாட்டார். அது போலத்தான் எங்க நடிப்பும் தொழிலும்.”


VTM MiniMarkt und Kiosk



துரித
பணமாற்றுச்
சேவை!

உலருணவுப் பொருட்கள்
கடலுணவுப்பொருட்கள்
உடன் மரக்கறி வகைகள்



இலங்கை, இந்தியா உட்பட உலகின் எந்தப்பாகளுக்கும் அதிகூடியவீதத்தில் பணப்பரிமாற்றம் செய்ய இன்றே நாடுங்கள் NSB,BOC,HNB போன்ற வங்கிகளில் நேரடியாகவும் மற்றும் அனைத்து வங்கிக்கணக்குகளுக்கும் பணமாற்றம் செய்யலாம்.

Tel 0203/98418781
E.mail :- vtm2012@hotmail.de
Neudorferstr 173
47057 Duisburg
inh:Pon.Vijayakumar

Buschhausener Str.16/18
46049 Oberhausen
Tel:0208 468 444 21

# கனடா– அபிராமி நடனக் கல்லூரியின் 20வது ஆண்டு விழா






**மாலினி அரவிந்தன்**

சென்ற ஞயிற்றுக்கிழமை ஆகஸ்ட் 30 ஆம் திகதி 2015 இல் அபிராமி நடனக் கல்லூரியின் 20 வது ஆண்டுவிழாவான நாட்டியகலாபம் மிகவும் சிறப்பாக நடைபெற்றது. டொன்பொஸ்கோ கத்தோலிக்க பாடசாலை பார்வையாளர் மண்டபத்தில் அரங்கம் நிறைந்த பார்வையாளர் மத்தியில் இந்த நிகழ்ச்சி மிகவும் சிறப்பாக இடம் பெற்றது. தமிழ்தாய் வாழ்த்து, கனடிய தேசிய கீதம், மௌன அஞ்சலியைத் தொடர்ந்து நிகழ்ச்சிகள் ஆரம்பமாகின.




கல்லூரி அதிபர் ஸ்ரீமதி செந்தில் செல்வி சுரேஸ்வரன் நிகழ்ச்சிகளை மிகவும் சிறப்பாகத் தயாரித்திருந்தார். அவருக்கு உதவியாக இந்தியாவில் இருந்து வருகைதந்திருந்த ஸ்ரீமதீ திவ்யசிவா சுந்தர் அவர்கள் மாணவிகளுக்குப் பயிற்சி கொடுத்து சிறப்பாக இந்த நிகழ்ச்சிகளை ஒழுங்கு செய்திருந்தார். இந்த நிகழ்ச்சிக்குப் பிரதம விருந்தினர்களாக மகாஜனக்கல்லுர்ரி பழைய மாணவர் சங்கத்தின் (கனடா) முன்னால் தலைவரான டாக்டர். கதிர் துரைசிங்கம் அவர்களும் பாரியாரும் கலந்து கொண்டனர்.

இந்த நிகழ்வில் நேரடியாகப் பங்கு பற்றியவர்களும் தன்னார்வத் தொண்டர்களுமாகச் சுமார் நூறு மாணவ, மாணவிகள் வரை அடங்குவர். இந்த நிகழ்ச்சி சிறப்பாக அமைந்ததற்குச் சில காரணங்கள் பின்னணியில் இருந்ததை நான் அவதானித்தேன். பார்வையாளர்கள் அனேகமானவர்கள் தமிழ் தெரிந்தவர்களாக இருந்ததால் அவர்களுக்குப் பிடித்தமான பாடல்கள் தமிழில் இருந்தது முக்கியமாக அவதானிக்கப்பட்டது. அடுத்து கோகிலத்துக் கண்ணனைப் பற்றிய பாடல்கள் அதிகமான இடம் பெற்றிருந்தன, அதிலும் பாரதியின் பாடல்கள் எல்லோரையும் கவர்ந்திருந்தன.

ஸ்ரீமதி செந்தில் செல்வியின் சோலே நடனமும், ஸ்ரீமதி திவ்யாவின் நடனமும் அப்படியே பார்வையாளர்களைக் கட்டிப் போட்டிருந்தது.

பிரதம விருந்தினர் டாக்டர் கதிர் துரைசிங்கத்தின் உரையைத் தொடர்ந்து நன்றியுரை இடம் பெற்றது. கல்லூரி அதிபர் ஸ்ரீமதி செந்தில்செல்வி சுரேஸ்வரன் அவர்கள் தனது நன்றி உரையில் மகாஜனக் கல்லூரி முன்னாள் அதிபர் அமரர் பொ. கனகசபாபதி அவர்களைப் பற்றிக் குறிப்பிட்டு தனது நன்றிக்கடனை நிவர்த்தி செய்தது, பார்வையாளர்கள் மத்தியில் ஒரு நிறைவான உணர்வை ஏற்படுத்தியிருந்ததும் குறிப்பிடத்தக்கது. இந்த நிகழ்வு மிகவும் சிறப்பாக நடைபெற எல்லா ஏற்பாடுகளையும் சிறப்பாகச் செய்திருந்த திரு. சுரேஸ்வரனுக்கும் எமது பாராட்டுக்கள்.

**கல்லூரி அதிபர் ஸ்ரீமதி செந்தில் செல்வி சுரேஸ்வரன் முன்னர் யேர்மனியில் கலைச்சேவை புரிந்தவர் என்பது குறிப்பிடத்தக்கது.**



# நவீன கிராஃபிக் தொழில் நுட்பத்தால் புத்தகத்துக்குள் ஒரு சினிமாவையும் ஓட வைத்தது ஆனந்த விகடன்

## தமிழர் தகவல் வெளியீட்டகம் நடத்திய ஆனந்த விகடனின் சந்திரஹாசம் நூல் விழா



ஆனந்த விகடனின் நிர்வாக அதிபர் திரு.பா.ஸ்ரீநிவாசன், ஆனந்த விகடனின் ஆசிரியர் திரு.ரா.கண்ணன் அவர்கள் இவர்களுடன் தமிழர் தகவல் பிரதம ஆசிரியர் திரு திருச்செல்வம் அவர்கள்

ஒக்டோபர் 12ம் திகதி திங்கட்கிழமை அன்று மாலை ஐந்தரை மணிக்கு முன்னரே இலக்கிய ஆர்வலர்கள் பலரும் கூடிவிட்டார்கள் ரொரன்ரோ மார்க்கம் நகரசபை மண்டபத்தில். குறுகிய கால அறிவிப்போடு தமிழர் தகவல் வெளியீட்டகமும் அதன் ஆசிரியர் திரு திருச்செல்வமும் முனைந்து செயலாற்றி அந்த விழாவுக்கான ஏற்பாடுகளைச் செய்திருந்தார்கள்.
எழுத்தாளர் சு. வெங்கடேசன் அவர்களால் எழுதப் பெற்று க. பாலசண்முகம் அவர்களின் ஓவியங்களோடு நவீன கிரா.ஃ.பிக் தொழில் நுட்பத்தால் புத்தகத்துக்குள் ஒரு சினிமாவையும் ஓட வைத்து ஆனந்த விகடன் தயாரித்த மிகப்பெரியதும் தமிழுக்குப் புதியதுமான சந்திரஹாசம் என்ற நாவலை உலகம் முழுவதும் தெரியப்படுத்தும் முகமாக ஆனந்த விகடனின் நிர்வாக அதிபர் பா.ஸ்ரீநிவாசன் அவர்களும் அதன் ஆசிரியர் ரா.கண்ணன் அவர்களும் தொழில்நுட்ப இயக்குனரும் வருகை தந்திருந்தார்கள்.

விழாவுக்கு தமிழர் தகவல் ஆசிரியர் திரு திருச்செல்வம் அவர்கள் தலைமை தாங்கி உரையாற்றும் போது, ஆனந்த விகடனின் ரஷி மூலத்தை அழகாக எடுத்துப் பேசியதோடு இது நூல் வெளியீடும் அல்ல நூல் விமர்சனமும் அல்ல பெருமுயற்சி ஒன்றை உலகெங்கும் உள்ள வாசகர்களுக்குத் தெரியப்படுத்திக் கொள்ளும் ஆனந்த விகடனின் விழா. தமிழர் தகவல் எழுத்தாளர் அ.முத்துலிங்கம் அவர்களின் வேண்டுகோளுக்கமைய தமிழர் தகவல் வெளியீட்டகம் இந்த நிகழ்வை ஒழுங்கு செய்தது என்று குறிப்பிட்டார்.

இந்திய இராணுவம் தமிழீழத்தை ஆக்கிரமித்திருந்த காலத்தில் அங்கு நடந்த அனர்த்தங்களை நேர்மையோடு பிரசுரித்து எங்களுக்கு ஆதரவு தந்த இதழ் ஆனந்த விகடன். அது புலம்பெயர் தமிழர்கள் அதிகம் வாழும் கனடாவுக்கே தன் சந்திரஹாச வெளியீட்டு முயற்சியை முதலில் கொண்டு வந்திருக்கின்றது என்றும் அவர் குறிப்பிட்டார்.

”ஒரு செய்தியைப் பிரசுரித்துவிட்டு பின்பு ஆட்சி அதிகாரத்திடம் மன்னிப்புக் கேட்காமல் நீதிமன்றம் சென்று தண்டனையை ஏற்றுக் கொண்ட விகடனின் முன்னாள் ஆசிரியரையும், பின்பு அந்தத் தண்டனைக்குக் காரணமானவர்கள் மீது மானநட்ட வழக்குத் தொடர்ந்து அதில் வென்று அதனால் கிடைத்த நட்டஈட்டுத் தொகைக்கான காசோலையை தமது இருக்கைக்குப் பின்னால் படமாகத் தொங்க விட்ட அவரை எனக்குப் பிடிக்கும்.
நானும் அப்படி ஒருநிலை வந்தால் சிறைக்குச் செல்வேனே ஒழிய யாரிடமும் மன்னிப்புக் கேட்கமாட்டேன்” என்று ஆசிரியர் திருச்செல்வம் அவர்கள் குறிப்பிட்ட போது அவர் குரலிலே ஓர் உறுதி தெரிந்தது.
அடுத்துப் பேசிய பேராசிரியர் பசுபதி அவர்கள் தனது பேச்சின் கருப்பொருளாக ஆனந்த விகடனின் ஓவியச் சிறப்பை எடுத்துக் கொண்டார். ஆனந்த விகடனின் தோற்றம் அதற்காக வாசன் பட்ட துன்பங்கள் என்று தொடங்கி மாலி போன்றவர்களின் ஓவியங்களால் தான் பல எழுத்தாளர்களின் முகங்கள் விகடனில் வெளிச்சத்தில் தெரிந்தது. ஆனந்த விகடன் தீவாவளி மலரின் தொடக்கம் அதன் சிறப்பு என்று விகடன் வரலாற்றை விரல் நுனியில் வைத்துக் கொண்டு பேசிய போது விகடன் குழுமத்தினரே அவரை வியப்போடு பார்த்தார்கள்.
இலங்கை தொலைக்காட்சி நிறுவனத்தின் முன்னாள் தமிழ் நிகழ்ச்சிப் பணிப்பாளர் பி.விக்னேஸ்வரன் அவர்கள், தொடர்கதைகளுக்காகவே தாம் ஆனந்த விகடனை நேசித்தாகச் சொல்லி, கல்கி, ஜெயகாந்தன், சாவி போன்ற இலக்கியச் சிம்மங்களை விகடன் அறிமுகப்படுத்திய சாதனைகளை சிலாகித்துப் பேசினார்.



விழாவிலே பேராசிரியர் நா. சுப்பிரமணிய ஐயர் அவர்கள் பேச்சு மிகவும் ஆழமாகவும் துல்லியமாகவும் இருந்தது. அமரர் கல்கியின் பொன்னியின் செல்வன் தொடங்கி பின்பு வெளிவந்த தில்லானா மோகனாம்பாள் கதை வரை தொட்டுக் காட்டிய பேராசிரியர் உலக மாற்றத்தோடு எப்படி விகடன் தன்னைப் புதுப்பித்துக் கொண்டு வெற்றிநடை போட்டது என்பதையெல்லாம் கால ஒழுங்கோடு எடுத்துக் காட்டினார்.
சந்திரஹாசம் நூலின் ஒரு பக்கத்தை யாராவது விழாவிலே படித்துக் காட்டுவார்களா என்று விகடன் அதிபர் திடீரென்று கேட்டபோது ஆம்! இத்தக் கனடா நாட்டிலே பிறந்து படித்து ஆங்கிலப் புலமைமிக்க இளம் பிள்ளைகள் பலர் தமிழிலேயும் சரளமாகப் பேசக் கூடியவர்கள். அதற்கான ஒழுங்கை உடனடியாகச் செய்கின்றோம் என்று ஏற்றுக் கொண்ட தமிழர் தகவல் ஆசிரியர், தன் மருமகளும் நாட்டியக் கலைஞருமான செல்வி அனோஜினி குமாரதாசனிடம் அப்பணியை ஒப்படைக்க அவர் மேடையில் தங்கு தடையின்றி அழகாக வாசித்துக் காட்டினார். அடுத்து விகடன் அதிபர் ஸ்ரீனிவாசன் அவர்கள் பேசினார்கள்.








தற்காலத் தொழில்நுட்பம் அனைத்தையும் பயன்படுத்தி மிகுந்த பொருட்செலவில் இந்த நூலை வெளியிடுகின்றோம். உங்கள் அனைவரது ஆதரவும் இதற்குத் தேவை என்றார். உரையின் இடையிடையே அவர் வீடியோ காட்சிகளாகவும் நிழல் படங்களாகவும் பாலசண்முகத்தின் சந்திரஹாச ஓவியங்களை அங்கிருந்த திரையில் காட்டிக் கொண்டே சென்றார். தன் பேச்சின் இடையே விகடன் இதழை இன்று தாங்கி நிற்பது முன்னாள் ஆசிரியர் பாலசுப்பிர மணியம் தொடங்கிய மாணவப் பயிற்சித் திட்டத்தில் உருவான மாணவர்களே என்பதையும் கோடிட்டுக் காட்டி தன்னோடு வந்திருந்த விகடன் ஆசிரியர் கண்ணன் அவர்களுக்கு ஒரு முகவரி கொடுத்தார்.

தொடர்ச்சி 30 ம் பக்கம்

திருமணம் சொர்க்கத்தில் நிச்சயிக்கப்படுகின்றது விழா ஒழுங்கமைப்பு எம்மிடம் நிச்சயிக்கப்படுகின்றது!







கடுகுமணி 24

பேராசிரியர். அ.சண்முகதாஸ்.

## சித்திரக் கவிதை

# சுருக்கமாக எழுதுவதில் நம்மவர் கண்ட புதுமை

ஜப்பானிய மொழியிலே 'கஞ்சி' எனப்படும் சீன வரிவடிவத்தைக் கையான்டு சுருக்கமாக எழுத முடிந்தது. சுருக்கமாக எழுதுவது தொடர்பான நகைச்சுவைக் கருத்தினைச் சென்ற கடுகுமணியில் கண்டோம். இங்கு நம்முடைய தமிழ்க் கவிஞர்கள் கவிதை பாட வல்லவராய் இருக்கும் அதேவேளை அதனைச் சுருங்கிய வடிவிலே தரக் கூடியவராகவும் இருந்துள்ளனர்.

மா திட்டமதாய் கிளி பெண்

மேலேயுள்ளது ஒரு பாடல். அப்பாடல் பின்வருமாறு அமைகின்றது.

வட்ட மதிலிட்டு மறுவட்ட மதிலிட்டு
வட்ட நடுவே மாவெழுதி திட்டமதாய்
நாலு கோடிட்டு நடுவே கிளியெழுதி
மேலே பிறைசூடிய பெண்.

அதன் விளக்கத்தை பின்வருமாறு வகைப்படுத்தலாம்.

**வட்ட மதிலிட்டு மறுவட்ட மதிலிட்டு**

**வட்ட நடுவே மாவெழுதி** மா

**திட்டமதாய்**

**நாலு கோடிட்டு நடுவே கிளியெழுதி** கிளி

**மேலே பிறைசூடிய பெண்.** பெண்

தமிழ்ப் பாட்டினை இப்படியும் எழுதலாம் என முற்கால அறிவுள்ள கவிஞன் ஒருவன் நமக்குக் காட்டியுள்ளான். பார்த்துப் படித்து மகிழுவோம்.




Sathya's
சத்தியாஸ்
Catering & Party Service
Srilankische & indische Spezialitäten

அனைவருக்கும் எங்கள்
இனிய தீபாவளி நல்
வாழ்த்துக்கள்

சுவையும் தரமும் குன்றாது சுடச்சுட வழங்குகின்றோம்

உங்கள் இல்லங்களில் நடைபெறும் சகல மங்கல வைபவங்களுக்கான
இலங்கை ,இந்திய ,சைனிஸ் மற்றும் ஐரோப்பிய உணவு வகைகளை
சுவையும் தரமும் குன்றாது சுடச்சுட குறித்த நேரத்தில் வழங்குகிறோம் .
உணவு விநியோகம் ,பரிமாரல்களுடனான முழுநேர விழாக்களை திறம்பட
நடத்தித்தருகிறோம் .
அத்துடன் சத்யாஸ் உங்களுக்காக பல இலவச சலுகைகளையும் நிறைமனதுடன்
வழங்குகிறது குறைந்த செலவில் நிறைந்த திருப்தியடைய
எங்களை விரைவாக நாடுங்கள்

Josefstr.2
Warendorf
02581-785011
0176-41236122



# தமிழர் மரபுத் திங்கள் - கார்த்திகை

**(முனைவர் மனோன்மணி சண்முகதாஸ்)**




இன்றைய இளந்தலைமுறை தமிழர் மரபான விடயங்கள் பற்றி அறிந்து கொள்ள வேண்டும். பொறிமுறைகளிலே அவர்கள் அமிழ்ந்து கிடக்கிறார்கள். நான்கு சுவர்களுக்குள் இருந்து கொண்டே உலகை வலம் வந்து மகிழ்கிறார்கள். வெளியே அவர்கள் வாழும் சுற்றுப்புறச்சூழலை நோக்குவதில்லை. அதனால் அவர்கள் உள்ளமும் உடலும் சுருங்கிவிட்டன. இயற்கையின் அழகான தோற்றத்தையோ இனிய ஒலிகளையோ அவர்கள் அறிய முயற்சி செய்வதும் இல்லை. இந்த நிலை மாற வேண்டும். தமிழரது மரபான விடயங்களை அவர்கள் அறிய நாம் செயற்பட வேண்டும்.

அந்தவகையில் கார்த்திகைத் திங்கள் பற்றிய மரபான செய்திகளைத் தொகுத்து வழங்குவது பயன்தரும். இத்திங்கள் பல்வேறு வழிபாட்டு நடைமுறைகளைக் கொண்டதாகும். தமிழர் காலக்கணிப்பில் காலத்தின் நகர்வை இயற்கையின் தோற்றப்பாட்டினைக் கொண்டு அறியும் முறைமை ஒன்றுண்டு. அந்த வகையில் கார்த்திகையை அறிவிக்கும் கார்த்திகைப்பூ சிறப்பிடம் பெறுகிறது. இப்பூவின் வண்ணம் அழகு என்பன கவர்ச்சியானவை. பூவின் பழைய பெயர் காந்தள் என்பதாகும். முருகக் கடவுளுக்குரிய சிறப்பான பூவாகும். பெண்களின் கைபோன்ற அமைப்புடையது. ஐந்து விரல்கள் போல ஐந்து இதழ்களையுடையது. செம்மையும் மஞ்சளும் கொண்ட வண்ணமுடையது. பண்டைய இலக்கியங்களில் காந்தள் மலரணிந்து வழிபாட்டு நடைமுறைகள் மேற்கொள்ளப்பட்டன எனக் குறிப்புகளுண்டு.

அடுத்துக் கார்த்திகைத் திங்களில் வரும் திங்கட்கிழமை சிறப்பு வழிபாட்டுக்குரிய நாளாகும். இத்திங்கட்கிழமை சோமவாரம் எனச் சிவனை வழிபட உகந்த நாளாகக் கருதப்படுகிறது. பகல் முழுவதும் நோன்பிருந்து நிலா தோன்றிய பின்னர் உணவு அருந்துவர். கார்த்திகைத்தீபம் ஏற்றி முருகனை வழிபடுவர். வீடுகளிலும் விளக்குகள் பல ஏற்றி வழிபடுவர். அன்றைய தினம் சிறப்பாக மாவிளக்கு ஏற்றுவர். திருவண்ணாமலையிலே இறைவன் பேரொளி வடிவாகத் தோன்றியதைக் காட்டுமுகமாக மலை உச்சியிலே தீபம் ஏற்றப்படும். வேறு திருக்கோயில்களிலே “சொக்கப்பனை” எரிக்கப்படும். பேரொளி ஒன்றை எல்லோரும் காணவேண்டும் என்பதே இதனுடைய நோக்கமாகும்

வீடுகளிலும் விளக்குள் நிறைய ஏற்றப்படும். பழைய காலத்தில் சிறுபந்தங்களே கொழுத்தப்பட்டன. வீட்டு முன்வாயிலில் வாழைக்குற்றியை நட்டு அதன் மீது விளக்கேற்றுவர். தேங்காய் பாதியினுள்ளே பருத்தி விதைகளை துணியிலே ஒரு சிறிய முடிப்பாக்கி அதனுள்ளே வைத்து எண்ணையூற்றிக் கொழுத்துவர். இக்காலத்திலே பந்தங்களுக்குப் பதிலாக சிறிய மண்ணாலான அகல் விளக்குகளே பயன்படுத்தப்படுகின்றன.

மேலும் கார்த்திகை விளக்கீட்டு நாளன்று அனற் பொறி தட்டி விளையாடுவார். இது வழிபாட்டு நிலையிலிருந்து வழுவி விளையாட்டு நிலையாக இம் மரபு மாறி வருவதை உணர்த்துகிறது. எண்ணெய் விளக்குகளுக்குப் பதிலாக மின்விளக்குகளே இப்போது பெரும்பாலும் ஏற்றப்படுகின்றன. அவை பல்வேறு வண்ண விளக்குகளாகவும் மாறிவிட்டன. சம்பந்தருடைய தேவாரம் கார்த்திகை விளக்கீட்டு நடைமுறையைப் பதிவு செய்துள்ளது.

“துளக்கில் கபாலீச்சரத்தான் தொல் கார்த்திகைநாள் விளக்கீடு”

என அவர் இதனைக் குறிப்பிட்டுள்ளார். இக்குறிப்பு கார்த்திகை விளக்கீடு நடைமுறை மிகவும் தொன்மையானது என்பதையும் உணர்த்தி நிற்கிறது. இன்னும் கார்த்திகை நாளிலே சிறப்பாக நெற்பொரி செய்வர். இதற்குக் “கார்த்திகைப் பொரி” என்று பெயர்.

கார்த்திகைத்திங்களில் ஒரு வகையான சம்பா நெல் அறுவடை செய்யப்படும். அதனைக் கார்த்திகைச்சம்பா என்றே அழைக்கின்றனர். இத்திங்களிலே “கார்த்திகையரசி” என ஒரு வரி அறவிடப்பட்டதாக தென்னிந்திய சாசனங்களில் குறிப்பு உள்ளதாகத் தமிழ்ச் “சொல்லகராதி” பதிவு செய்துள்ளது. கந்தபுராணத்திலே கார்த்திகைப் பெண்கள் என அறுவர் குறிப்பிடப்பட்டுள்ளனர். பரிபாடல் உரையாசிரியரும் கார்த்திகைத் தேவிமார் பற்றிக் குறிப்பிட்டுள்ளார்.

இத்திங்களில் விநாயகருக்குரிய விரதமான விநாயக “டியும் அனுட்டிக்கப்படுகிறது. கார்த்திகைத் திங்கள் கிரு‘ணபட்ச பிரதமை தொடங்கி சுக்கில பட்சத்து “டி வரை 21 நாள் இவ்விரதம் கடைப்பிடிக்கப்படுகிறது. மிக நீண்ட விரதமாகும். கையிலே நூலிழைகட்டித் தொடங்கி நிறைவு நாளன்று அந்த இழை நீக்கப்படும். இவ்வாறு நூலிழை கட்டும் மரபு விரதமிருப்பதை நினைவூட்டுவதாக அமைந்துள்ளது. இதனால் ஏனைய திங்கள்களை விடக் கார்த்திகைத்திங்கள் வழிபாட்டில் நிறைய நாள்களைக் கொண்ட திங்களாக விளங்குகிறது. பிள்ளையார் கதை எனப்படும் பெருங்கதையும் விநாயகர் திருக்கோவில்களிலே படிக்கப்படும்.

கார்த்திகைத்திங்கள் பண்டைய இலக்கியங்களில் 'கூதிர் காலம்' என அழைக்கப்படுகிறது. 'நெடுநல்வாடை' என்னும் பண்டைய இலக்கியம் “குன்று குளிர்ப்பன்ன கூதிர் பால் நாள்” எனப் பதிவு செய்துள்ளது. மலையைக் குளிர்ச்சி செய்கின்ற கூதிர்காலம். இக்காலத்தில் மக்கள் தம் உடலை வெம்மையூட்ட நெருப்பை மூட்டி அதனருகேயே இருப்பர். இக்கடுங்குளிர் மக்களின் இயல்பான வாழ்க்கை நடைமுறைகளை மாற்றிவிடும். மேலைநாடுகளில் இலையுதிர்காலத்தின் குளிரான நிலை பலரைத் தாக்கி இயல்பு வாழ்க்கையைக் குலைக்கும் நிலையும் ஏற்படுவது வழக்கம். மலைப்பாங்கான இடங்களுக்கு செல்வதும் தடை செய்யப்படும். கடுங்குளிரால் வெண்பனிச்சிதறல்கள் ஏற்படும். முதியவர்கள் வீட்டை விட்டு வெளியே செல்லாமல் வீட்டினுள்ளேயே முடங்கிக் கிடப்பர். பனியிலே சறுக்கி விழ நேரிடும்

எனினும் கூதிர்காலத்து வெண்பனிச் சிதறல் இயற்கையின் புதிய புனைவுக் கோலமாகும். இலைகள் உதிர்ந்த மரங்களிலே பனிச்சிதறல் விழுந்திருக்கும் காட்சி வெண்ணிற ஆடை அணிந்த புதியதொரு மரங்களாகத் தோற்றமளிக்கும். பச்சையாடை அணிந்து பசுமைக் கோலம் பூண்டிருந்த மரங்கள் எல்லாம் கோலம் மாறி விடும். காலமாற்றத்தை அவை மக்களுக்கு உணர்த்தும் பாங்கு இது. தமிழர் மரபில் கார்த்திகைத் திங்களின் குளிர், வழிபாட்டு நடைமுறைகளால் மறைக்கப்பட ஒளியேற்றி கார் இரவைக் கழிக்கும் உன்னத பண்பாடு இன்னமும் பேணப்படுகிறது.

இத்தகைய மரபான விடயங்கள் இளைய தலைமுறையினரால் தொடரப்பட வேண்டியவை. இயற்கையோடு இணைந்து வாழும் முறைமையை நமது முன்னோர்கள் பண்பாட்டு நடைமுறைகளாகப் பயிற்றி வந்துள்ளனர். அப்பயிற்றுதல் இன்னும் தொடர நாம் ஆவன செய்யவேண்டும். கார்த்திகைப் பூ காலத்தைக் காட்டுவது போல நாமும் காலம் பற்றிய கருத்துக்களைப் பரப்ப வேண்டும். உலகமயமாதல் என்ற நிலையில் கார்த்திகைத்திங்களின் கடுங்குளிரைத் தாங்க உடல்வளமும் உளவளமும் தேவை. அதற்கான ஒரு சிறிய தொடக்கமாக இவ்வெழுத்துரு அமையக்கூடும்




ஸ்ரீ கனகதுர்க்கா
அம்பாள் ஆலயம்
துர்க்கா பூஜா துரந்தரர்
சிவசாமிக்குருக்கள்
ஜெயந்திநாதக்குருக்கள்
Tel: 02304- 910 9445
0177 20 16 941
Tel: 02304/ 16721 Robert koch Str.5- 58239 Schwerte

யேர்மனியில் பிராங்பேட் நகரில்
JAFFNA BASAR
உரிமையாளர்: நடராஜா சுதன்
Tel: 069 25 62 63 53
மாதம் மாதம் மாதரைக்கவரும்
புத்தம் புது டிசைன்களில்
தங்க நகைகள்
ஒரே இடத்தில்
தரம் மிக்க தங்க நகைகள்
பயணங்களை இனிமையாக்கும்
குறைந்தவிலையில்
பயணச்சீட்டுக்கள்
மற்றும் இலத்திற்குத்
தேவையான மளிகைப் பொருட்கள்
அனைத்திற்கும் நாடுங்கள்
Kaiserstr.64 (ladan Nr.22) 60329 Frankfurt/Main





தனுஷ்





ரஜினி படத் தலைப்புகள் என் படங்களுக்கு தானாகவே அமைந்து விடுகின்றன என்று நடிகர் தனுஷ் கூறியுள்ளார். நடிகர் தனுஷ் தொடர்ந்து தன் படங்களுக்கு ரஜினி படத் தலைப்புகளையே பயன்படுத்தி வருகிறார். ரஜினியின் மருமகன் என்ற உரிமையில் இப்படி அவர் செய்வதாக ரசிகர்கள் சொல்லி வருகின்றனர்.

இதற்கு கடும் எதிர்ப்பும் எழுந்துள்ளது. இந்த நிலையில் ரசிகர்கள் ட்விட்டரில் கேட்ட கேள்விக்குத்தான் மேற்கண்டவாறு பதிலளித்துள்ளார். தன்னுடைய டுவிட்டர் பக்கத்தில் ரசிகர்கள் கேட்ட கேள்விகளுக்கு தனுஷ் அளித்துள்ள பதில்கள்...

## எனக்கு ரஜினி படத் தலைப்புகள் என் படங்களுக்கு தானாகவே அமைந்து விடுகின்றன

கேள்வி: விஜய் பிடிக்குமா? அஜித் பிடிக்குமா? பதில்: இருவரையும் பிடிக்கும். அவர்களிடம் நான் நிறைய கற்று வருகிறேன். உண்மையைச் சொல்லவேண்டும் என்றால், நான் ரஜினியின் தீவிர ரசிகன். கேள்வி: சூர்யா? பதில்: கடுமையான உழைப்பாளி. இருவடைய உழைப்பு மற்றவர்களுக்கு ஊக்குவிப்பது போல் இருக்கும். கேள்வி: சமந்தா? பதில்: மிக திறமையான நடிகை. அவருடன் நடித்தது மிகவும் மகிழ்ச்சியாக இருந்தது. கேள்வி: தங்கமகன் இசை வெளியீடு? பதில்: இப்படத்தின் இசைக்காகதான் தற்போது உழைத்துக் கொண்டிருக்கிறோம். நவம்பர் மாதம் வெளியாகும். மெலோடி பிரியர்களுக்கு இப்படத்தின் பாடல்கள் ரொம்ப பிடிக்கும். கேள்வி: விஜய் படத்தில் சிறப்பு தோற்றத்தில் நடிப்பீர்களா? பதில்: விஜய் கேட்டா கண்டிப்பாக நடிப்பேன். கேள்வி: விஜய், அஜித் படங்களை தயாரிப்பீர்களா? பதில்: அப்படி அமைந்தால் அது பாக்கியம். கேள்வி: எப்போது உங்கள் அண்ணன் படத்தில் நடிப்பீர்கள்? பதில்: கூடிய சீக்கிரம். கேள்வி: விஜய் சேதுபதி, நயன்தாரா? பதில்: விஜய் சேதுபதி திறமையான நடிகர். நயன்தாராவை எல்லோருக்கும் பிடிக்கும். கேள்வி: ஏன் ரஜினி படத்தின் தலைப்பையே தேர்வு செய்கிறீர்கள்? பதில்: நான் தேர்வு செய்யவில்லை. தானாகவே அமைகிறது. கேள்வி: தமிழ் சினிமாவில் சிறப்பாக நடனமாடக் கூடியவர்? பதில்: விஜய் கேள்வி: பள்ளி பருவத்தில் உங்களுக்கு பிடித்த நடிகை? பதில்: குஷ்பு மற்றும் சிம்ரன் கேள்வி: விஜய் படங்களில் உங்களுக்கு பிடித்தது? பதில்: கில்லி கேள்வி: அஜித் படங்களில் உங்களுக்கு பிடித்தது? பதில்: தீனா.

## புத்தகத்துக்குள் ஒரு சினிமாவையும் ....

17ம் பக்கத் தொடர்ச்சி....







அடுத்துப் பேசிய கண்ணன் தான் விகடனின் மாணவப் பயிற்சித் திட்டத்தில் இணைந்து இன்று விகடன் ஆசிரியராக இருப்பதை வெகு இயல்பாக எடுத்துப் பேசினார். விகடன் வரவாளர்கள் தங்கள் நூலை வர்த்தக ரீதியாக தெரியப் படுத்தவே உலகத்தில் இன்று பயணிக்கிறார்கள். ஆனால் அவர்கள் கையில் நூல் இன்னும் வெளியீட்டுக்குத் தயாராகவும் இல்லை. என்ன செய்ய முடியும்?

தமிழர் தகவலின் ஆசிரியரின் வேண்டுகோளுக்கு அமைய விழாவுக்கு வந்திருந்தவர்கள் பலரும் சந்திரஹாசம் நூலின் பிரதிகளுக்கு முற்கூட்டியே முற்பணம் கொடுத்து ஸ்ரீனிவாசன் அவர்களை திக்குமுக்காடச் செய்தனர். இதை அவர் எதிர்பாக்கவில்லை. தமிழர் தகவல் சார்பாக புறோமார் நிறுவனம் தயாரித்த விழா நினைவுப் பட்டயம் விகடன் அதிபருக்கு வழங்கப்பட்டது. மார்க்கம் நகரசபை உறுப்பினர் லோகன் கணபதி அவர்களும் மாநகரசபை சார்பில் வாழ்த்தும் சான்றிதழும் விகடன் குழுமத்தினருக்கு வழங்கிக் கௌரவித்தார்.

விகடன் நிர்வாகத்துடன் ஸ்ரீனிவாசனுடன் கண்ணனுடன் தமிழ்நாட்டில் யாருமே இவ்வளவு நெருக்கமாக அருகில் சென்றுவிட முடியாது. ஆனால் அந்தச் சந்தர்ப்பம் தமக்குக் கிடைத்தும் அதைத் தங்கள் உயர்வுக்குப் பயன்படுத்தாத எழுத்தாளர் கூட்டத்தைத் தமிழர் தகவல் விழாவில்தான் சந்திக்க முடிந்தது.
அதுபோல விகடன் ஆசிரியரிடம் சுவாமி விவேகானந்தரின் யாழ்நூல் பிரதி திரு. தாம் சிவதாசனால் வழங்கப்பட்டபோதுகூட விகடன் நூல் நிலையத்தில் அதனை வையுங்கள் என்று சொல்லப்பட்டதே தவிர, இதைப் பிரசுரியுங்கள் என்று யாரும் கேட்கவில்லை. அதுவும் நாம் பெருமை கொள்ளத்தக்க ஒன்றாகும்.
சந்திரஹாசம் என்பது சிவபெருமான் இராவணனுக்குக் கொடுத்த வாளின் பெயர் என்பதும், ஓராயிரம் செய்திகளைத் தன்னகத்தே கொண்டது என்பதும் இங்கே நினைவு கூரப்பட வேண்டியது.
- இரா.சம்பந்தன்

NEW ASIA FASHIONS
http://www.newasiafashions.com
இல்லங்களில் இருந்துகொண்டே இணையத்தில் இணையற்ற சேலைகளைத் தெரிவு செய்யலாம்! (EU)
எம்மிடம் பெற்றவர்கள் பெருமகிழ்வு கொள்கிறார்கள்!!

- Contact Numbers
- UK -00442035811020
- 00447448179777
- Swiss- 0041763801073
- Email-info@newasiafashions.com

307 Mitcham Road
Tooting-London
SW17 9JQ / U.K

Milin Impex GmbH
Dortmund நகரில்
Web :www.milinimpex.de
இலங்கையர்களுக்கான எவ்வித உணவுப்பொருட்களையும் மொத்தமாகப் பெற்றுக்கொள் எமது இணையத்தளத்தை நாடவும்

அனைவருக்கும் எங்கள் இனிய தீபாவளி நல் வாழ்த்துக்கள்

Geschäftszeiten:
Dienstag, Mittwoch, Freitag
10:00 bis 19:00 Uhr
Montag & Donnerstag
07:00 bis 17:00 Uhr
Samstags 09:00 bis 16:00 Uhr
Sonn. und Feiertags: Geschlossen
Westendorf Str.41 - 44287 Dortmund Tel: 0231 45 96 17 /28 Fax: 0231 18 15 288





# காதலிக்க நான் தயார்!

அனைத்து கலைஞர்களுக்கும் நன்மை கிடைக்கப் பாடுபடுங்கள். கொடுத்த வாக்குறுதிகளை இதயத்திலிருந்து நிறைவேற்றுங்கள் என்று நடிகர் சூர்யா, நடிகர் சங்கத் தேர்தல் குறித்து அறிக்கை வெளியிட்டுள்ளார். அவர் தன் அறிக்கையில் கூறியதாவது: நடிகர் சங்கத் தேர்தலில் வெற்றிபெற்ற அனைவருக்கும் வாழ்த்துக்கள்.

இந்தத் தேர்தல் நமக்குப் பல பாடங்களைக் கற்றுத் தந்திருக்கிறது. தேர்தலுக்காக நடந்த பிரச்சாரத்தில், வருந்தத்தக்க பல விஷயங்கள் அரங்கேறின. விமரிசனங்கள் எனும் பெயரில் தனிமனிதத் தாக்குதல்கள் நடந்தன. சமாதான முயற்சிகள் தோல்வியுற்றன. பொறுப்பில் இருக்கும்போது செய்த கடமைகள், உதவிகளாக சித்தரிக்கப்பட்டன. 'நடிகர்கள் ஒரே குடும்பம்' என்று சொல்லிக்கொண்டே ஜாதி, மொழி, இனத்தின் பெயரால் பிரிவினை பேசப்பட்டது. படத்தின் வெற்றி தோல்விகளை வைத்து கேலி செய்தனர். விருப்பப்பட்டவர்களுக்கு ஆதரவு தெரிவித்த காரணத்தால், மதிப்புக்கும், மரியாதைக்கும் உரிய மூத்த கலைஞர்கள் மீது 'பண்பு மறந்து, வார்த்தை தடித்து' அவதூறுகள் வீசப்பட்டன. இத்தகைய சூழல் இனி ஒருபோதும் வராமல் தடுப்பது நம் அனைவரின் பொறுப்பு.

வெற்றிபெற்ற புதிய பொறுப்பாளர்களுக்கு, சக கலைஞனாக என்னுடைய வேண்டுகோள் இவை. கடமைகளை, உதவிகளாக நினைத்து செய்யாதீர்கள். மூத்த கலைஞர்களை எப்படி நடத்த வேண்டும் என்பதில் முன்னுதாரணமாக இருங்கள். அனைத்து கலைஞர்களுக்கும் நன்மை கிடைக்கப் பாடுபடுங்கள். கொடுத்த வாக்குறுதிகளை இதயத்திலிருந்து நிறைவேற்றுங்கள். பகைமை விரட்டி, ஒற்றுமைக்கு வித்திடுங்கள். சக கலைஞர்கள் உங்கள்மீது வைத்திருக்கும் நம்பிக்கையும், எதிர்பார்ப்புமே, உங்களின் உண்மையான வெற்றி. நடிகர்கள் மற்றும் திரைத்துறையின் வளர்ச்சிக்கு அனைவரும்

நடிகை த்ரிஷா பல ஆண்டுகளாக ஹீரோயினாக உள்ளார். மன்மதன் அம்பு படத்தை அடுத்து மீண்டும் கமல்ஹாஸனுடன் ஜோடி சேர்ந்துள்ளார். சூப்பர் ஸ்டார் ரஜினிகாந்துடன் சேர்ந்து நடிக்கும் ஆசையும் அவருக்கு உள்ளது. இந்நிலையில் தனது சினிமா வாழ்க்கை பற்றி அவர் கூறுகையில்,ரஜினி நான் தமிழ் மற்றும் தெலுங்கு திரையுலகின் பெரிய நடிகர்களுடன் நடித்துவிட்டேன். ஆனால் இன்னும் ரஜினி சாருடன் மட்டும் நடிக்கவில்லை. அவருடன் சேர்ந்து நடித்தால் தான் என் சினிமா வாழ்க்கை முழுமை பெறும்.

சினிமா உலகில் நீண்ட காலம் நீடிப்பேன் என நினைக்கவில்லை. நடித்து பார்க்கலாமே என்று இளம் பெண்ணாக நடிக்க வந்தேன். நான் நடிக்க வந்ததில் என் குடும்பத்தாருக்கு முதலில் தயக்கம் இருந்தது. எனக்கு சினிமா ஒத்து வராவிட்டால் விலகிவிடலாம் என நினைத்தேன். ஆனால் அதிர்ஷ்ட வசமாக தாக்குப்பிடித்துவிட்டேன்.

கமல் கமல் ஹாஸனின் தூங்காவனம் படத்தில் முதல் முறையாக போலீஸ் அதிகாரியாக நடித்துள்ளேன். முதல் முறையாக துப்பாக்கி எடுத்துள்ளேன். வருண் மணியன் வருண் மணியனுடனான திருமணம் நிச்சயதார்த்தத்தோடு நின்றுவிட்டது பற்றி பலரும் பலவாறு கணிப்பது என்னை பாதிக்கவில்லை. இந்த விவகாரத்தில் பலருக்கு தொடர்பு இருப்பதால் அது பற்றி நான் பேச விரும்பவில்லை.

காதல் நான் காதலில் விழ, திருமணம் செய்து கொள்ள தயாராக உள்ளேன். அதை நான் சமூகத்திற்காக செய்ய விரும்பவில்லை. என்றைக்கு நான் எனக்கு ஏற்ற ஒருவரை சந்திக்கிறேனோ அன்று நான் திருமணம் செய்து கொள்வேன் என்றார் த்ரிஷா.





## கஜோலை மிஸ் செய்கிறேன். ஷாருக் கான்

பாலிவுட்டின் சூப்பர் ஹிட் ஜோடி என்று அழைக்கப்படும் ஷாருக்கான், கஜோல் ஜோடி நீண்ட நாட்களுக்கு பிறகு தற்போது மீண்டும் இணைந்து கலக்க உள்ளனர். பாஸிகர், குச் குச் ஹோத்தா ஹை, தில் வாலே துல்கனியா லே ஜாயங்கே, மை நேம் இஸ் கான் உள்ளிட்ட பல ஹிட் படங்களில் ஷாருக்கானும், கஜோலும் ஜோடியாக நடித்துள்ளனர்.

கடந்த 2010 ஆம் ஆண்டு வெளியான "மை நேம் இஸ் கான்" படத்திற்கு பிறகு இந்த ஜோடியை ஒன்றிணைத்து படம் பண்ண பல டைரக்டர்கள் முயன்றும் முடியாமல் போனது. தற்போது, அந்த ஜோடியை இணைக்கும் முயற்சியில் டைரக்டர் ரோகித் ஷெட்டி வெற்றி பெற்றுள்ளார்.

மீண்டும் கஜோலுடன் இதில், கஜோல் கதாநாயகியாக நடிக்கிறார்.

இந்நிலையில், தில் வாலே துல்கனியா லே ஜாயங்கே படத்தின் 20 வது ஆண்டு விழா தில்வாலே பட செட்டில் சமீபத்தில் கொண்டாடப்பட்டது. அப்போது பேசிய ஷாருக்கான், இந்தப்படம் எனக்கும் கஜோலுக்கும் எதிர்பாராதவிதமாக அமைந்தது. நான் நடிக்கும் ஒவ்வொரு படத்திலும் கஜோலை மிஸ் பண்ணுகிறேன்.

தற்போது இந்தப் படத்தில் நடிக்க கஜோல் 150 நாட்கள் கால்ஷீட் ஒதுக்கியுள்ளார். இதற்காக அவரது குடும்பம் மற்றும் குழந்தைகளை விட்டுவிட்டு நேரம் ஒதுக்கியுள்ளார் என பெருமைபட தெரிவித்தார் ஷாருக்கான்.

நீண்ட இடைவெளிக்குப் பிறகு கஜோலும், ஷாருக்கும் ஜோடி சேர்ந்திருக்கும் தில்வாலே திரைப்படம் எதிர்வரும் டிசம்பர் மாதம் 18 ஆம் தேதி திரைக்கு வெளிவர உள்ளது குறிப்பிடத்தக்கது.

என்னதான் இருந்தாலும் தமிழில் கஜோல் நடித்த மின்சாரக்கனவை மறக்கமுடியாது. வெண்ணிலவே வெண்ணிலவே விண்ணைத்தாண்டி வருவாயா பாடல்காட்சி காவியம்தான்.









# கனடிய எழுத்தாளர் குரு அரவிந்தன் அவர்களுக்குப் பாராட்டுவிழா

(மணிமாலா)



கனடிய எழுத்தாளர் குரு அரவிந்தனின் 25 வருட கால கனடிய இலக்கிய சேவையைப் பாராட்டிக் கனடா தமிழ் எழுத்தாளர் இணையத்தின் சார்பில் சென்ற வெள்ளிக்கிழமை பாராட்டுவிழா ஒன்று ஸ்காபரோவில் நடைபெற்றது. சென்ற ஒக்டோபர் மாதம் 16 ஆம் திகதி 2015 இல் இந்த நிகழ்வு ஸ்காபரோ, 3300 மக்னிக்கல் அவென்யூவில் உள்ள பாபா பாங்குவிட் ஹோலில் இடம் பெற்றது. மங்கள விளக்கேற்றி, கனடா தேசிய கீதம், தமிழ் வாழ்த்துப் பாடல், மௌன அஞ்சலி ஆகியவற்றுடன் பாராட்டு விழா ஆரம்பமானது. கனடா தேசிய கீதத்தை செல்வி சாலினி மணிவண்ணனும், தமிழ் தாய் வாழ்த்தை செல்வி சங்கவி முகுந்தனும் இசைத்தனர். எழுத்தாளர் குரு அரவிந்தனை கனடா எழுத்தாளர் இணையத்துடன் இணைந்து கனடாவில் உள்ள பல தொடர்பு சாதனங்கள், மன்றங்கள், சங்கங்கள் என்பன அவரைக் கௌரவித்திருந்தனர்.



கனடா எழுத்தாளர் இணையத்தின் முன்னாள் தலைவர் கவிநாயகர் வி. கந்தவனம் அவர்கள் குரு அரவிந்தனுக்கு ஆசியுரை வழங்கினார். கனடா தமிழ் எழுத்தாளர் இணையத் தலைவர் கலாநிதி சிவநாயகமூர்த்தி அவர்களின் தலைமை உரை அடுத்து இடம் பெற்றது. இந்தப் பாராட்டு விழாவில் உதயன் பத்திரிகை சார்பாக ஆர். என். லோகேந்திரலிங்கம், வெற்றிமணி பத்திரிகை சார்பாக டாக்டர் கதிர் துரைசிங்கம், தமிழர் செந்தாமரை பத்திரிகை சார்பாக ராஜி அரசரட்ணம், கீதவாணி வானொலி சார்பாக நடா ஆர். ராஜ்குமார், ரிவிஜ தொலைக்காட்சி சார்பாக ப. விக்னேஸ்வரன், தமிழ் மிரர் ஆங்கிலப் பத்திரிகை சார்பாக சாள்ஸ் தேவநாயகம், தூறல் இதழ் சார்பாக சிவா சிவலிங்கம், தமிழ் ஆதேஸ் இணைய இதழ் சார்பாக எழுத்தாளர் அகில், இ-குருவி பத்திரிகை சார்பாக நவஜீவன் அனந்தராஜ், தளிர் இதழ் சார்பாக சிவலிங்கம், விழாக் குழுவினர் சார்பாக எஸ். ஜே. சோதி ஆகியோர் உரையாற்றினர்.

ஊடகவியலாளரின் உரையைத் தொடர்ந்து மகாஜனக்கல்லூரி பழைய மாணவர் சங்கத் தலைவர் சிவ கௌரிபாலன் நடேஸ்வராக் கல்லூரி பழைய மாணவர் சங்கச் செயலாளர் மீ. யோகரட்ணம் ஒன்ராறியோ தமிழ் ஆசிரியர் சங்கக் காப்பாளர் தங்கராசா சிவபாலு, ஜனகன் பிக்ஸேஸ் சார்பாகக் கலகலப்பு தீசன், சண்டிலிப்பாய் ஐக்கிய மன்றத் தலைவர் அமிர்தராஜன் தேவதாசன், சொப்கா பீல் குடும்ப மன்றம் சார்பாக ஏ. ஜேசுதாசன் ஆகியோரும் உரையாற்றினர். மன்றங்கள் சார்பான உரையைத் தொடர்ந்து பேராசிரியர் சுப்ரமணியன் ஐயர், பேராசிரியர் இ.பாலசுந்தரம், முனைவர் பார்வதி கந்தசாமி, முனைவர் கௌசல்யா சுப்பிரமணியன், சிந்தனைப்பூக்கள் எஸ்.பத்மநாதன், நாடக நெறியாளர் என். சாந்திநாதன், கணபதி ரவீந்திரன், செந்தில் செல்லையா, ஆகியோரின் உரைகள் இடம் பெற்றன.



இந்த பாராட்டு விழாவில் 'கனடா தமிழர் இலக்கியம் - குரு அரவிந்தனின் பங்களிப்பு' என்ற 340 பக்கங்களைக் கொண்ட நூல் ஒன்றும் அப்போது வெளியிடப்பட்டது. எழுத்தாளர் இணைய முன்னாள் தலைவர் திரு. தங்கராசா சிவபாலு அவர்கள் இந்த நூலை அறிமுகம் செய்து வைக்கும்போது, இது போன்ற ஆவண நூல் கனடியத் தமிழர் இலக்கியத்தில் இதுவரை வெளிவரவில்லை என்பதைக் குறிப்பிட்டார்.

ஈழத்தமிழ் எழுத்தாளர்களில் அதிக வாசகர்களைக் கொண்ட எழுத்தாளர்களில் ஒருவரான எந்தவித ஆர்ப்பாடமும் இல்லாமல் இலட்சக்கணக்கான வாசகர்களைச் சர்வதேச ரீதியாக உருவாக்கியிருக்கும் எழுத்தாளர் குரு அரவிந்தனின் இலக்கிய சேவையைப் பலரும் பாராட்டி மேடையில் உரையாற்றியிருந்தனர். சென்ற வாரம் கனடா வந்திருந்த ஆனந்தவிகடன் நிர்வாக அதிபர் ஸ்ரீனிவாசன் அவர்கள் குறிப்பிட்டது போல வாராவாரம் 10 லட்சம் பிரதிகள் விறபனையாகும் விகடனில் குரு அரவிந்தனின் பல கதைகள் இதுவரை வெளிவந்தது மட்டுமல்ல முக்கியமாக விகடன் தீபாவளி மலர், பவளவிழா மலர், காதலர்தின மலர் போன்றவற்றில் வந்த குரு அரவிந்தனின் ஆக்கங்களையும் சிந்தனைப்பூக்கள் பத்மநாதன் தனது உரையில் சுட்டிக் காட்டியிருந்தார்.



